ஊரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKB STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12.




புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1997 மார்கழி திங்கள் 22-ம் நாள் (6—1—1966) வியாழக்கிழமை றம்ழான் 13 | இதழ் 33

# முன்னணியில் பிக்குகள்

## மசோதாவை எதிர்க்க எதிர்க் கட்சி தந்திரம்

## தலை நகரில் எட்டாம் திகதி ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை?

### அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை

தமிழ் மொழி மசோதாவை எதிர்க்கும் முயற்சியில் ஒரு புதிய திருப்பத்தை எதிர்க்கட்சிகள் ஏற்படுத்தியுள்ளன. கடந்த வாரம் வரை அரசியற் பிரச்சினையாக மட்டும் கொண்டு அரசியல் வாதிகளே தமிழ் மொழி மசோதாவை எதிர்த்துவந்தார்கள். இப்பொழுது பௌத்த பிக்குகளை எதிர்ப்பு அணியின் முன்னணிக்குத் தள்ளியுள்ளார்கள் என்று நம்ப முடிகிறது. எதிர்க் கட்சிகளின் ஆதரவாளர்களான பிக்குகளே இப்பொழுது இம் மசோதாவை எதிர்க்கும் தீவிர பணியில் இறங்கியுள்ளார்கள். அத்துடன் மாநாயக்க தேரோவின் பேச்சு ஒன்றை மாசங்கத்தின் பிரகடனமாக கருதுமளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து பிரச்சாரம் செய்யவும் முற்பட்டிருக்கிறார்கள்.

எட்டாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மக்கள் பிரதிநிதிகள் சபையில் தமிழ் மொழி மசோதா தாக்கல் செய்யப்படும் பொழுது நாடு பூராவிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டுத் துக்கம் அனுஷ்டிப்பதற்குஎதிர்கட்சியினர்புயல் வேகத்தில் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறார்கள். கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடுவதுடன் பொது மக்கள் அமைதியான முறையில் ஊர்வலங்கள் நடாத்துவதை மட்டுமே எதிர்கட்சியினர் இப்பொழுது தங்கள் எதிர்ப்பு நடவடிக்கையாகக் கொண்டுள்ளார்களாம்.

தமிழ் மொழி மசோதாவிற்கான ஏனைய எதிர்ப்பு நடவடிக்கைகளை யெல்லாம் பௌத்த பிக்குகளின் பொறுப்பில் எதிர்கட்சியினர் விட்டுவிட்டார்களாம். எதிர்கட்சிகளின் ஆதரவுடைய பௌத்த பிக்குகள் இப்பொழுது இம்மசோதாவிற்கான எதிர்ப்பு நடவடிக்கையில் முன்னணிக்கு வந்துள்ளார்கள் என்று தெரிகிறது. இது எதிர்க்கட்சித் தலைவர்களின் புதிய அரசியற் தந்திரம் என்றே கூறப்படுகிறது.

ஒரு அவசர நிலை உருவாக்கப்பட்டால் தங்களைப்பிடித்து உள்ளே தள்ளிவிடும் அரசாங்கத்தின் நடவடிக்கையை வெற்றிகரமாக முறியடிக்கவே எதிர்க்கட்சியினர் இப் புதிய திருப்பத்தை மேற்கொண்டுள்ளார்கள் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

எதிர்ப்பு நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ள எதிர்க்கட்சி ஆதரவுடைய பிக்குகள் எட்டாம் திகதியன்று உபவாசம் மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் கடந்தவாரம் கொழும்பில் நடைபெற்ற எப். ஆர். சேனநாயக்கா நினைவுதினக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய மாநாயக்க தேரோவின் பேச்சை எதிர்கட்சிகள் தங்களுக்குச் சாதகமான முறையில்பயன்படுத்தி வருகிறார்கள்.

தேர்தற் காலத்தில் மாநாயக்கதேரோ ஐ. தே. கட்சியை ஆதரிக்கும் வண்ணம் விடுத்த அறிக்கையை எங்ஙனம் ஐ. தே. கட்சி மாசங்கத்தின் பிரகடனமாகப் பெரிதுபடுத்திப் பயன்படுத்தியதோ அதே போன்று எப். ஆர். சேனநாயக்கா நினைவுதினக் கூட்டத்தில் மாநாயக்க தேரோவிடுத்தஅறிக்கையை இப்பொழுது எதிர்க்கட்சிகள் தங்கள் பிரச்சாரத்தில் பயன்படுத்தி வருகின்றன.

எதிர்க் கட்சிகளின் நடவடிக்கைக்கு எதிராக அரசாங்கக் கட்சிகளும் சில நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன. 'நாம் சிங்களவர்' இயக்கத்திற்கு எதிராக 'நாமே சிங்களவர்' இயக்கத்தை அரசாங்கக் கட்சிகளின் ஆதரவாளர்கள் தொடக்கியிருக்கிறார்கள். அத்துடன் எதிர்க் கட்சித் தலைவர்களின் நடவடிக்கைகளை ஊன்றி கவனித்து வருவதற்கு இரகசியப் பொலீசாரை உசார் நிலையில் வைத்திருக்கிறார்களாம். மேலும் நாடு பூராவிலும் பொலீசாரை உசார்படுத்தியிருப்பதுடன், 8-ம் திகதியன்று நாடு பூராவிலும் பொலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்றும் நம்ப முடிகிறது.

பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் போன்ற ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளை எட்டாம் திகதியன்று தடைபடுத்தவும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதாம். பாராளுமன்றத்திற்கு அணி

(9-ம் பக்கம் பார்க்க)

## பொ. கட்சிக்குள் பிளவு வலுக்கிறது

### உடுப்பிட்டியார் திட்டத்தை ஜீ. ஜீ. ஏற்க மறுப்பு?

ஆசிரிய இடமாற்றப் பிரச்சினையில் உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரத்தின் திட்டத்தை யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார் என்று அறியப்படுகிறது.

வட மாகாணத்திலிருந்து தமிழாசிரியர்களை ஏனைய மாகாணங்களுக்கு இடமாற்றியதற்கு தமிழரசுக் கட்சியினரே காரணம் என்று பொதுவாக இடமாற்ற உத்தரவுகளைப் பெற்றுள்ள ஆசிரியர்கள் கூறிவருகிறார்கள். வெளி மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்வது தவறு என்றும் இவர்கள் அறிக்கைகள் விட்டு ஆர்ப்பாட்டம் நடாத்திவருவது வாசகர்கள் அறிந்ததே.

இப்பிரச்சினையில் தமிழரசார் தலையிட மறுத்ததைவிட்டு தமிழாசிரியர்கள் கசப்புணர்ச்சி கொண்டிருக்கும் சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் லாபம் பெற உடுப்பிட்டிப் பிரதிநிதி விரும்பினாராம்.

அவரைப் பேட்டிகண்ட ஆசிரியர்களிடமும் திரு. சிவசிதம்பரம் ஐ. நா. சபையிலிருந்து திரு. பொன்னம்பலம் திரும்பியதும் இப்பிரச்சினை

(9-ம் பக்கம் பார்க்க)

## பொங்கல் மலரில்

- வாசகர்களின் கேள்விகளுக்கு தமிழரசுத் தந்தையின் பதில்கள்.
- உலக அரங்கில்... —அறிஞர் அண்ணு
- 'சதி வழக்கின் தீர்ப்பும்-இலங்கைப்பாராளுமன்றத்தின் இறைமையும்.' —அமைச்சர் மு. திருச்செல்வம் கியூ.சி.
- வட-கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்குரிய உடனடித் தேவைகள். —பேராசிரியர் கா. குலரத்தினம்
- இலங்கை அரசியல் அமைப்பில் மாற்றம் தேவையா? —கலாநிதி ஏ. ஜே. வில்சன்
- 'சடங்கு' (புதிய குறுநாவல் ஆரம்பம்) —எஸ். பொன்னுத்துரை
- இலங்கையின் பொருளாதாரத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பங்கு. —க. குணராஜா
- 'மனச்சாட்சி' —சிற்பி

கனக செந்திநாதன், நவம், செய்யியன் செல்வன், தேவன்-யாழ்ப்பாணம், காசி ஆனந்தன், சத்தியசீலன் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் உட்பட தென்னக சினிமா நட்சத்திரங்களின் பொங்கல் செய்திகளும் இடம்பெறும்.

அடுத்த இதழ்:

## பொங்கல் மலர்

(13—1—1966)

★ வண்ண முகப்பு

★ புதுமுறை கேலிச் சித்திரம்

★ ஈழத்தும்-தமிழ் நாட்டும் அறிஞர்களது கருத்தோவியங்கள்

★ பிரபல எழுத்தாளரின் புதிய தொடர் கதை ஆரம்பம்

அதிக பக்கங்கள்

இத்தனைக்கும் விலை சதம் 25

உங்கள் பிரதிகளுக்கு இன்றே பதிவு செய்யுங்கள்

# தமிழ்ப் பாடமும் ஆசிரியர்பணியும்

சம்மாந்துறை
யூ. செயின்

**தாய் மொழிக் கல்வியின் முக்கியத்துவம் பெருகி வருகின்றது. இந் நிலையில் மாணவர்கள் தாய் மொழியறிவில் பூரணத்துவம் பெற்றுத் திகழ வேண்டியது அவசியமாகிறது. ஆனால் இன்றைய தமிழ்ப் பாடத் திட்டம் நமது மாணவர்களுக்கு உரிய முறையில் மொழியறிவை அளிக்கக் கூடியனவாக அமையவில்லை. தமிழ் மொழியைப் பிழையின்றி எழுதக்கூடியவர்களாக மாணவர்களை ஆக்கக்கூடிய ஒரு திட்டம் அமைவது அவசியம். அதற்கு ஓரளவு இலக்கண அறிவும் அவசியம். புதிய தமிழ்ப் பாடத் திட்டம் இலக்கணத்தையும் உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்பதை பல ஆதாரங்களுடன் தெளிவுபடுத்துகிறது இக்கட்டுரை. இக் கட்டுரையின் கண் வலியுறுத்தப்பட்டுள்ள கருத்தை ஆதரித்தோ, எதிர்த்தோ தெரிவிக்கப்படும் கருத்துக்களுக்கு சுதந்திரன் முக்கியத்துவம் கொடுக்கும்.**

இன்றைய கல்வித்திட்டம், சுதேச மொழிகளுக்கு முக்கியத்துவம் அளித்து சகலவிதமான கல்விகளும் மாணவனின் சுய மொழியிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை அறிவுறுத்தும் வகையில் அமைந்திருக்கின்றது.

ஒவ்வொரு மாணவனும் தத்தம் தாய்மொழி மூலமே சிந்திக்கும் தன்மையைப் பெற்றிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டு தான் போலும் ஆட்சியாளர்களும் ஆரம்ப வகுப்புக்களிலிருந்தே தாய்மொழிக் கல்வியை அளித்துவருகின்றனர்.

தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில், அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்கும் நிலை கண்டு நாம் களிப்படைகின்றோம். ஆசிரியர்கள் மேலும் இந்த நிலையை விருத்திசெய்யும் பணியை மேற்கொள்ள வேண்டும்.

மகாத்மா காந்தியடிகள் சில சந்தர்ப்பங்களில் ஆங்கிலக் கல்வியை வெறுத்துப் பேசிவந்திருக்கிறார். அதற்குக் காரணம் ஆங்கிலக்கல்வியில் கொண்ட கசப்பான எண்ணம் என்று நாம் கருத முடியாது, சொந்தத் தாய்மொழியில் கொண்டிருந்த பந்தமும் பற்றுமே அதற்குக் காரணமாகும்.

எனவேதான் எமது சொந்தத் தாய்மொழியில் சகல நாட்டுக் கல்விகளையும் கொண்டுவந்து எம் மொழியையும், அறிவையும் விருத்தியடையச் செய்ய நாம் முயற்சி எடுக்கவேண்டும்.

இது ஒரு புறமிருக்க, தமிழ் மொழிப்பாடத்தை மாணவர்கள் திருப்திகரமான முறையில் கற்றுக்கொள்ளுவதற்கு ஆசிரியர்கள் வழிசமைக்கவேண்டியது அவசியமாகின்றது. தமிழ்மொழியில் உயர்ந்த கல்வியைப் பெற்றுச் செல்லுகின்ற ஒரு மாணவனுக்கு ஆழமான தமிழ் அறிவு அமைந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

தமிழ்ப் பாடத்தைக் கற்பிக்கின்ற கைங்கரியத்தில் பல புதுப்புதுத் திருப்பங்கள் இடையிடையே ஏற்பட்டுக் கொண்டு வருவதை நாம் அறிவோம். இதனால்தான் முற்காலத்தில் கற்பிக்கப்பட்டுவந்த தமிழின் தரத்திற்கும், இக்காலத்தில் கற்பிக்கப்படும் தமிழின் தரத்திற்கும் ஏராளமான வித்தியாசங்கள் இருந்துகொண்டிருக்கின்றன.

**இன்றையத் தமிழ்ப்பாடக் கல்வித்திட்டம்ஆழம்குறைந்ததாகவே அமைந்திருப்பதை நாம் அவதானிக்கும்போது எம்மால் வேதனையடையாமல் இருக்கமுடியவில்லை.**

## மாணவர்கள் நிலை

ஆரம்ப வகுப்புக்களிலிருந்து சிரேஷ்ட வகுப்பை நோக்கிச் செல்லுகின்ற வரையில், ஒரு மாணவன் எத்தகைய தமிழ் அறிவைப் பெற்றிருக்கவேண்டும் என்பதைக் கல்வி இலாக்கா கணித்திருக்கும் கணிப்பு அவ்வளவு திருப்திகரமானதாக அமையவில்லை என்றே கூற வேண்டும்.

ஏதோ தமிழை அறிந்திருக்க வேண்டும் என்ற தாமரை இலைத் தண்ணீரை ஒத்த நிலையிலேயே இன்றையப் பாடப் புத்தகங்களும் அமைந்திருக்கின்றன. தரமான தமிழறிவைத் தரத்தக்க தாற்பரியமான அலகுகளை அவைகள் உள்ளடக்கி இருப்பதாக எமக்குத் தெரியவில்லை. பாடப்புத்தகங்களின் தடங்களையே மிதித்துச் செல்லுகின்ற ஒரு மாணவனுக்கு இப்போதுள்ள தமிழ்ப் பாடப் புத்தகங்கள் திருப்திகரமான தமிழறிவைக் கொடுக்கக் கூடியதாக அமையவில்லை என்றே கூற வேண்டும்.

சாதாரண ஜி. ஸி. ஈ.சித்தியடைந்த எத்தனையோ மாணவர்கள் நல்ல முறையில் ஒரு கட்டுரை எழுதத் தெரியாமல்—கடிதம் எழுதத் தெரியாமல் 'தமிழ்ப் பாடம் சித்தியடைந்துவிட்டோம்' என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு திரிகிறார்கள். சாதாரண ஓர் இலக்கியப் பாட்டை நயத்து அறியக்கூடிய தமிழ் அறிவு அவர்களிடத்தில் இல்லை. இந்த நிலையில் ஆசிரியர் உத்தியோகம்வேறு அவர்களுக்குக் கிடைத்துவிடுகின்றது. அவ்வாறு ஆசிரியரான எத்தனையோ பேர்கள் நல்ல வசனங்களைக்கூட எழுதமுடியாமல்—எழுத்து, சொற் பிழைகள் விட்டுக் கரும்பலகையில் எழுதிக் கற்பிக்கின்றார்கள். ஆசிரியர்களின் நிலையே இப்படி இருக்கும்போது அவர்களிடம் கற்கின்ற மாணவர்களின் கதி என்ன என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

இது ஆசிரியர்களின் குறை என்று நாம் முழுக்க முழுக்கச் சொல்லிவிடுவதற்குமில்லை; அவர்களின் அடிப்படைக் கல்வி திருப்திகரமானதாக அமையாததே இதற்குக் காரணமாகும். எனவேதான் மாணவனது அடிப்படைக் கல்வி ஆழமானதாகவும், அழுத்தம் திருத்தமாகவும் அமைந்திருக்க வேண்டும். எந்த ஒரு மாணவனும் பரீட்சையையே முககிய நோக்ககாகக் கொண்டு கற்று வந்தால் 'பாரம்பரியம்' என்று தமிழ்ப் பாடத்தில் கருதப்படக் கூடிய சில பகுதிகளைத் தெரிந்து கொள்ள முடியாமல் போய்விடும்.

ஏனைய பாடங்களைப்போல் தமிழ்ப் பாடத்தையும் கருதுவதை மாணவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தமிழை நல்ல முறையில் கற்கவும், கற்றதை எழுதவும்- விளக்கவும் தயார்படுத்த வேண்டியிருப்பதால் தரமான தமிழறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## தமிழ்ப் பாடத்திட்டம்

தமிழ்ப் பாடத்திட்டத்திற்கான பாடத் திட்டம் எவ்வாறு அமைந்திருக்கின்றதோ அவ்வாறுதான் தமிழ்ப் பாடம் கற்பிக்கப்பட்டும் வருகின்றது. இதனால் தமிழ்ப்பாடத்திற்கான பாடத்திட்டம் தரமானதாகக் குறித்த சில பகுதிகளைக் கொண்டு அமைந்திருக்க வேண்டும். கல்விப் பகுதியார் தீர்மானிக்கின்ற அக் குறித்த சில பகுதிகளை எல்லையாகக் கொண்டே ஆசிரியர்களும் தத்தம் பாடத்திட்டங்களை அமைத்துக்கொள்கிறார்கள்.

இதை நோக்கும் போது ஆசிரியர்களில் எந்தவிதமான குற்றமுமில்லை என்பதில் ஓரளவு உண்மை இருக்கவே செய்கிறது.

கல்விப் பகுதியினரால் அனுமதிக்கப்பட்ட தமிழ்ப் பாடப் புத்தகங்களையும், குறித்த அலகுகளையும் கொண்டே ஆசிரியர்களின் பாடத்திட்டங்களும் அமைகின்றன. இதைக்கொண்டுதான் மாணவனின் தமிழ்ப் பாடப் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

இவைகளைக் கொண்டு சிந்திக்கும் போது மாணவனது நிலை கல்வி இலாகாவின் தீர்மானத்தைப் பொறுத்தே கணிக்கப்படுகிறது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

கல்வி இலாக்கா அனுமதிக்கின்ற தமிழ்ப் பாடப் புத்தகங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசம் உடையனவாகவும், பூரணமற்றதாகவுமே இருக்கின்றன. பாரம்பரியமான பகுதிகளை உள்ளடக்கிய தமிழ்ப் பாடத்திற்கான ஒரு தரமான புத்தகம் இன்றுவரை இல்லை என்றே கூற வேண்டியிருக்கிறது எனவே தமிழ்ப்பாடத்திற்கான புத்தகங்களை கல்வி இலாகா மீண்டும் பரிசிலனை செய்து திருப்திகரமான தமிழறிவை மாணவன் பெற்றுக்கொள்ளும் வகையில் அவைகளைத் திருத்தி அமைக்க முன்வர வேண்டும்.

தமிழ்ப் பாடத் திட்டம் தரமான முறையில் அமைய வேண்டுமாயின் கல்வி இலாகா தமிழ்ப் பாடத்தில் கற்க வேண்டிய அலகுகளைத் தரமான முறையில் ஆராய்ந்து ஆழமான பகுதிகளை அதில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## இலக்கணத்தின் அவசியம்

இலக்கணம் என்றால் ஒரு கசப்பான பகுதியாக மாணவர்களிடையே இன்று கருதப்பட்டு வருகின்றது. உண்மையில் அது கசப்பான ஒரு பகுதிதானா என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தற்காலத்துக்கு முதல் நடைமுறையில் இருந்த தமிழ்ப் பாடத்தில் இலக்கணம் ஒரு கட்டாய பகுதியாகக் கற்பிக்கப்பட்டு வந்தது ஆனால் இப்போது அந்த நிலை தளர்ந்து உயர்தர வகுப்புகளுக்கு மாத்திரமே இலக்கணம் கற்பிக்கப்பட்டு வருகின்றது. மத்திய சிரேஷ்ட வகுப்புக்களில் 'ஏதோ' என்பதற்காகச் சில அலகுகளை இலேசாக அறிமுகம் செய்துவிடுகிறார்கள். இதைத் தவிர அவ்வகுப்பு மாணவர்களுக்கு எந்த விதமான இலக்கண அறிவும் போதிக்கப்படுவதில்லை.

தமிழ்ப் பாடத்தைக் கற்கின்ற ஒரு மாணவனுக்கு இலக்கண அறிவும் அமைந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும். எனவேதான் இலக்கணத்தின் தாற்பரியமான பகுதிகள் தமிழ்ப் பாடத்தில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.

இலக்கணத்தில் மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற கசப்பான எண்ணத்தை ஆசிரியர்கள் மாற்றியமைத்து அதன் அவசியத்தை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

மத்திய வகுப்பிலிருந்தே சில கண்டிப்பான இலக்கணப்பகுதிகளை ஏனைய பகுதிகளோடு கலந்து கற்பிப்பதன் மூலம் மாணவர்களிடையே உள்ள கசப்பான எண்ணத்தையும் போக்க முடியும். மேலும் புதுமுறைக் கற்பித்தலை ஆசிரியர்கள் கையாண்டு இலகுவாக விசயங்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய வழிகளைச் சமைக்க வேண்டும். தரமான தமிழறிவை மாணவர்கள் பெறும் விசயத்தில் ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானதாகும்.

இலக்கண அறிவு இல்லாத காரணத்தால் எத்தனையோ தமிழ் சம்பந்தமான பிரச்சினைகளை மாணவர்கள், ஏன் ஆசிரியர்களும்கூட தீர்த்துக் கொள்ள முடியாமல் திண்டாடுகிறார்கள். எத்தனையோ பிழைகளையும், வழுக்களையும் விட்டு எழுதுகிறார்கள்.

இந்த நிலைமை மாணவர்களைவிட்டும் கண்டிப்பாக மாற்றப்பட வேண்டும். இலக்கணத்தைக் கண்டு 'பயப்பட வேண்டாம்' என்று கி. வா. ஜகந்நாதன் போன்றவர்கள் அறைகூவல் விடுப்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

## ஆசிரியரின் தொண்டு

தமிழ்ப் பாடத்தைக் கற்பிக்கின்ற விசயத்தில் எமது பெரும்பாலான ஆசிரியர்கள் அலட்சியமாக நடந்து கொள்வதை நாம் சொல்லாமலிருக்க முடியவில்லை. ஆரம்ப வகுப்புக்களிலிருந்து எத்தகைய தமிழ் அறிவை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்பதைப் பல ஆசிரியர்கள், தெரிந்திருந்தும் கற்பித்தலில் குறைவான அக்கறையே செலுத்தி வருகின்றார்கள்.

இந்த நிலை எதிர்கால மாணவர்களின் தரமான தமிழ் அறிவுக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் அமையும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. பாடத்திட்டத்திற்காக மட்டுமே ஆசிரியர்கள் பணிந்து இயங்க வேண்டும் என்ற கொள்கையைக் கொள்ளாமல் அத்துடன் மாணவர்களின் முன்னேற்றம் கருதி தமிழ் அறிவுக்கான சில பகுதிகளையும் சேர்த்துக் கற்பிக்க வேண்டும்.

ஏற்கனவே கூறியதுபோல் இலக்கணத்தைக் கற்பிக்கும்போது புதுமுறைவான கற்பித்தலைக் கையாண்டு அதனை மாணவர்களுக்கு இலகுவாக்கிக் கொடுக்க வேண்டும்.

சிரேஷ்ட வகுப்புக்கான தமிழ்ப்பாடம் பரீட்சை எழுதுவதற்காகவே பெரும்பாலும் போதிக்கப்பட்டு வருகின்றது. இதனால் தமிழ்மொழி சம்பந்தமான பல பகுதிகள்பற்றிய தெளிவான விளக்கமின்றி மாணவர்கள் எழுத முடியாமல் திணறிக் கொண்டிருப்பதை நாம் அவதானிக்கிறோம்.

மாணவர்களுக்கு ஏற்படும் இத்தகைய சிக்கல்களுக்குரிய காரணம் யாது என்பதைச் சிந்தித்து ஆசிரியர்கள் செயலாற்ற வேண்டும்.

(14ம் பக்கம் பார்க்க)




எச். எம். எம். இஸ்மாயில்,
வாழைச்சேனை

கே: தி. மு. க. தலைவர் பதவியை ராஜாஜிக்கு கொடுக்க அறிஞர் அண்ணு முன் வந்துள்ளாராமே, உண்மையா?

ப: அண்ணு சிறந்த இராஜதந்திரிகளில் ஒருவர் என்பதை மறந்துவிட்டீரா?

ஃ

சி. முத்துலிங்கம்,
இங்கினியாகலை

கே: மூதூர் தொகுதி மக்களின் குறையை ஐ. தே. கட்சியில் இருந்து கவனிப்பதற்கும் தமிழரசுக் கட்சியில் இருந்து கவனிப்பதற்கும் என்ன வித்தியாசம்?

ப: இரு கட்சிகளும் ஒரே அரசாங்கத்தில் சேர்ந்திருக்கின்றன என்பதை மறந்துவிட்டு பேசுகிறீர்களே! தமிழ்ப் பகுதி மக்களின் குறைகளைச் சரிவர எடுத்துக்கூற தமிழரசுக் கட்சியாற்தான் முடியும்

ஃ

'உண்மைபேசுவோன்',

கே: 'காலம் செல்லச் செல்ல பரீட்சைக்கு முன் வினுத்தாள்கள் வெளியான செய்திகளும், விசாரணைகளும் நடந்தே திரும் எனவே எல்லாப் பாடங்களையும் மறுபடி வைப்பதே சிறந்தது' என என் நண்பர் கூறுகிருர். உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: மறுபடி வைத்தாலும் மீண்டும் வினுத்தாள் வெளியானதாகப் புரளியைக் கிளப்பிவிட மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதமிருக்கிறது?

ஃ

து. சொர்ண பத்மாவதி,
புங்குடுதீவு-10

கே: இந்த முறையும் சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் முன் போல் துக்கதினமாகக் கொண்டாடுவார்களா?

ப: இவ்வருடம் சுதந்திர தினத்தைத் துக்கதினமாகக் கொண்டாட வேண்டிய அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஃ

சித்[illegible]ரா பசுபதி,
கரவெட்டி

கே: இலங்கை திரும்பிய திருவாளர் பொன்னம்பலம் இலங்கைக்குப் பொதுவாகவும், த. பே. மக்களுக்கு சிறப்பாகவும் என்ன விடயங்களை கொண்டு வந்தார்?

ப: இலங்கையைப் பற்றி ஐ நா. உறுப்பினர்கள் ஏதோ நினைத்துக்கொண்டிருந்தார்களாம். அந்த நினைவை மாற்றிவிட்டு வந்தாராம். அது போதாதா? வேறென்ன வேண்டும் த. பே. மக்களுக்கு?

கே: தமிழ் மொழி விதிகள் மசோதா பற்றி பொன்னம்பலம் கட்சியினரின் அபிப்பிராயம் என்ன? அவர்கள் மொழி மசோதாவை ஆதரிப்பார்களா?

ப: என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தாலும் ஆதரித்துதாளுக வேண்டும். வேறு வழியே கிடையாது.

ஃ

செல்வி சரஸ்வதி,
திருமலை

கே: தமிழரசுக் கட்சியிலும் பார்க்க அதிக உரிமைகளை பெற்றுத் தருவோம் என்று கூறி வந்த தமிழ் காங்கிரஸ் கட்சியினரின் நிலை என்ன?

ப: உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதில் 'போட்டி' இருப்பது நல்லதே! ஆனுல் அப்போட்டி செயலில் அல்லவா இருக்க வேண்டும்?

கே. திராவிடத்தம்பி,
உந்துகொடை

கே: தேசிய அரசாங்கத்திற்கு விரோதமாக சில அதிகாரிகள் விஷமம் செய்கிருர்களே, இதை தவிர்ப்பது எப்படி?

ப: அந்த அதிகாரிகளைப் பற்றி குறிப்பிட்ட மந்திரிகளுக்கு புகார் செய்யுங்கள். உடன் நடவடிக்கை எடுப்பார்கள்.

ஃ

காப்பாளர்,
யாழ்ப்பாணம்

கே: கொழும்பு மாநகர சபைத் தேர்தல் முடிவு பற்றி நீர் என்ன கூறுகிறீர்?

ப: கவனமாக நடந்து கொள்ளும்படி இடதையும் வலதையும் எச்சரித்திருக்கிறுன் கொழும்பு வாக்காளன் என்பது எனது கருத்து.

ஃ

மங்கையர்க்கரசி,
திருமலை

கே: நான் கறுப்பு, என் தோழியர் சிலர் எனது நிறத்தை சுட்டிக் காட்டி கிண்டல் செய்கிருர்கள் என்ன செய்யலாம்?

ப: சிகப்போ, கறுப்போ உங்கள் நிறத்தில் திருப்தி கொண்டு மகிழ்ச்சியடையுங்கள் நிறத்தை நிரந்தரமாக மாற்றக் கூடியது எதுவுமில்லை. உலகப்பேரழகிகளில் பலர் கறுப்பு நிறத்தினராகவே இருந்துள்ளனர்.

ஃ

சி. ராஜன்,
கொழும்பு-10

கே: காதல் வியாதியால் என் நண்பன் பீடிக்கப்பட்டுகஷ்டப்படுகிறுன். அதற்கு ஒரு மருந்து சொல்ல மாட்டீர்களா?

ப: காதல் வியாதி பொல்லாதது. அது ஏற்பட்டுவிட்டால் புத்தி குழம்பிவிடும். உணவு செல்லாது, உறக்கம் வராது. இதற்கு மருந்தும் கிடையாது.

ஃ

எஸ். எல். ஆர்.
பதுளை

கே: நான் எனது காதலியைத் திருமணம் செய்யலாமென்று நினைக்கிறேன். செய்யலாமா?

ப: செய்யலாம். இன்பத்தைத் துன்பமாக மாற்றிக் கொள்ள விரும்பினுல்.

ஃ

ஏ. ஆர். எஸ். குருசாமி,
நூரளை

கே: என்னையே மணப்பதாக உறுதி கூறியிருந்த எனது அத்தை மகள் இப்பொழுது ஒரு பணக்காரனை மணக்க ஏற்பாடு செய்கிருள். பணம் அவள் கண்ணை மறைத்து விட்டது. நானே ஏழை. என்ன செய்யலாம்?

ப: பணத்திற்காக ஒருவனை மணப்பதாயிருந்தால், பணத்திற்காகவே அவனை விட்டு விலகவும் நேரிடும் என்பதை அவளிடம் [illegible]றுங்கள், பணத்திற்காக மணம் புரிகிறவர்க[illegible] தம் சுதந்திரத்தையும் விற்றுவிடுகிருர்கள்.

ஃ

என். என். கார்த்திகேசு,
பருத்தித்துறை

கே: திரு. பொன்னம்பலம் வட்டமேசை மாநாட்டைக் கைவிட்டுவிட்டாரா?

ப: அவரோ எதிலும் தலைமையை விரும்புகிறவர். வட்ட மேசையில் தலைமை பீடம் என எதுவும் கிடையாது. அதைச் சுற்றி அமர்ந்தால் அனைவரும் சமம். எனவே அவர் வட்ட மேசையை விரும்பமாட்டார்.

ஃ

டி. கணேசன்,
மட்டக்களப்பு

கே: நான் படித்துவிட்டு வேலையில்லாதிருக்கிறேன். ஏதாவது ஒரு வேலை தேடித்தர மாட்டீர்களா?

ப: ஊவா மாகாணத்தில் படித்த வாலிபர்களில் பெரும் பாலோர் கோழி வளர்க்கிருர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? நீங்களும் ஏன் கோழி வளர்க்கக் கூடாது!

ஃ

சி. எஸ். சரோஜினி,
கண்டி

கே: நாகரிகம் என்பது என்ன? நவீன நாகரிகம் என்பது என்ன?

ப: நாகரிகம் என்பது சுவிட்சைப் போட்டால் லைட் எரிவது—நவீன நாகரிகம் என்பது குறித்த நேரத்தில் சுவிட்ச் தன்னை தானே போட்டுக்கொண்டு லைட்டை எரியவிடுவது.

ஃ

சிவநேசன்,
கொழும்பு-6

கே: பெண் உள்ளத்தின் ஆழத்தைக் காண முடியாது என்கிருர்களே, உண்மையா?

ப: முடியாமலென்ன? அவ்வளவு தூரம் மூழ்கி ஆழத்தைக் கண்டறிவதற்கு ஆண்களுக்கு நேரம் இருப்பதுமில்லை. நிதானம் இருப்பதுமில்லை.

ஃ

எல். ஏ. பீற்றர்,
யாழ்ப்பாணம்

கே: வட இலங்கையில் சாதி வேற்றுமை ஒழிய என்ன செய்ய வேண்டும்.

ப: கலப்பு மணத்தைத் தவிர இதர திருமணங்களையெல்லாம் சட்ட விரோதமாக்க வேண்டும்.

ஃ

வி. டி. குமாரசாமி,
அனுராதபுரம்

கே: அந்தக் காலத்து மனைவிக்கும் இந்தக் காலத்து மனைவிக்குமுள்ள வித்தியாசமென்ன?

ப: அந்தக்காலத்து மனைவி பின் தூங்கி முன் எழுந்திருந்தாள். இந்தக் காலத்து மனைவி முன் தூங்கி, பின் எழுந்திருக்கிருள்.

ஃ

வே. தியாகராஜா,
சின்னக் கிண்ணியா

கே: மூதூர் இரண்டாவது எம். பி. கூட்டங்களில் பேசும் போது, கட்சியை விட்டு ஒரு போதும் விலகமாட்டேன் என்று கூறுகிருரே, இதன் மர்மம் என்ன?

ப: தனது கட்சியைவிட்டு விலகாதிருப்பதில் மர்மம் ஏது? கட்சியைவிட்டு விலகுவதாயிருந்தாற்தான் அதில் மர்மம் இருக்க முடியும்.

---

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல. 1188
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

---



'நியாயமான அளவு தமிழ் உபயோகச் சட்டம் நாட்டைப் பிளவு படுத்தும்'

—டாக்டர் என். எம்.

சம அந்தஸ்துக் கொடுத்தால் ஐக்கியம் மேலோங்கும்.

ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்திற்கு இலங்கைக் குழுவின் தலைவராகச் சென்றிருந்த திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் விமான மூலம் நாடு திரும்பினுர்.

—செய்தி

இலங்கைத் தினசரிகள் மலையைக்கெல்லி எலியைப் பிடித்துள்ளன.

உருசியா நாட்டில் இரவு பத்து மணிக்கு மேல் இளைஞர் நகர வீதிகளில் சுற்றித் திரிவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

—செய்தி

கூட்டரசாங்கம் தோல்வியடைந்ததை யிட்டு நமது நாட்டு இளைஞர்கள் இப்பொழுது இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்துள்ளார்களாம்.

'நாம் சிங்களவர்' இயக்கத்தின் வகுப்புவாத நடவடிக்கைகளை முறியடிக்க 'நாமே சிங்களவர்' இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

—செய்தி

முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டுமென எமது முன்னேர் கூறியதில் எத்தகைய தவறுமில்லை யென்கிருர் யாழ்ப்பாணத்து முதியவர் ஒருவர்.

'தமிழ் உரிமைச் சட்டத்திற்கு காலவரையறை வேண்டும்.

டாக்டர் என். எம்.

என். எம். மின் இலட்சியத் தலைவஞக பீலிக்ஸ் டயஸ் மாறியுள்ளாரா என்கிருர் பழைய டிரக்சிய வாதியொருவர்.

எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டம் சனவரி 8ம் திகதி நடைபெற மாட்டாது

—செய்தி

'தமிழ் மொழிச் சட்டவிதிகளை எதிர்ப்பதில் நியாயமில்லை' என்று திரு. கே எம். பி. ராசரத்தின அறிக்கை விட்டபின்னர் எதிர்க்கட்சியினர் இந்த முடிவுக்கு வந்துதானே யாக வேண்டுமென்கிருர் ஒரு துறைமுக சிங்களத் தொழிலாளி.

தமிழ்ச் சட்டவிதிகள் போதுமானதல்ல என்றுபொன்னம்பலம் கட்சி அதிருப்தி தெரிவித்துள்ளது

—செய்தி

'கட்டிய வீட்டில் நொட்டை சொல்லுவதில்' கைதேர்ந்தவர்கள் அவர்கள் என்கிருர் ஒரு அரசாங்க ஊழியர்.

---

தமிழ் பேசும் சமூகமக்கள் சகலரும் விரும்பிப் பாவிக்கும்
லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்
லீலா டயறி வகைகள்.

ஏக விநியோகஸ்தர்கள்:
லீலா ஸ்டோர்ஸ்,
249, நொறிஸ் ரோட்,
கொழும்பு-11.

யாழ்ப்பாணத்தில் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்குமிடம்
செ. ஆ. செ. கம்பெனி,
ஆஸ்பத்திரி வீதி,
(பெரியகடை) யாழ்ப்பாணம்.

இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் கேளுங்கள் கிடைக்கும்.

# திரு. ஜீ. ஜீ. க்கு கறுப்புக் கொடி

## மன்னூரிலும், திருமலையிலும் காட்ட ஏற்பாடு

யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் திருமலை மாவட்டத்திற்கு வரவேற்புப் பெறும் நோக்கத்துடன் விஜயம் செய்தால் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டுவதென திருமலை மக்கள் தீர்மானித்துள்ளார்களாம். இதே போன்று மன்னூர் மாவட்டத்திலும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்ட சில இளைஞர்கள் தீர்மானித்திருப்பதாக நமது மன்னூர் நிருபர் எழுதியுள்ளார். திருமலை மாவட்ட மக்கள் திரு. பொன்னம்பலத்திற்கு ஏன் வரவேற்பளிக்கக் கூடாது என்பதைத் தெளிவுபடுத்தி ஒரு துண்டுப் பிரசுரமும் வெளியிட்டுள்ளார்கள்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத்திற்கு இலங்கைத் தூதுகோஷ்டியின் தலைவராகச் சென்று திரும்பிய யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ ஜீ பொன்னம்பலம் அவர்களுக்கு நாட்டின் பல பகுதிகளிலும் கட்சிச் சார்பற்ற வரவேற்பளிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, திரு. பொன்னம்பலம் ஐ. நா. சபை சென்ற நாளிலிருந்து செய்திகள் வெளிவந்து கொண்டிருப்பது வாசகர்கள் அறிந்ததே. இக்கூட்டங்களைக் கட்சிச் சார்பற்ற வரவேற்பு என்ற மகுடத்தின் கீழ் ஒழுங்கு செய்து வருபவர்கள் பொன்னம்பலம் கட்சியைச் சேர்ந்தவர்களே என்பதும் வாசகர்கள் நன்கு அறிந்ததே.

### முல்லைத்தீவில் நடைபெற்ற கூட்டம்

திரு. பொன்னம்பலம் அவர்களுக்கு வரவேற்பளிப்பதற்கு என்று முல்லைத்தீவு நகரசபை மண்டபத்தில் 11-12-65ம் திகதி சனிக்கிழமை காலை பத்துமணிக்கு நடைபெற்ற ஆலாசனைக் கூட்டம் பொன்னம்பலம் கட்சியைச் சேர்ந்த வவுனியாப் பிரதிநிதியினாலேயே ஒழுங்கு செய்யப்பட்டது என்பது இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இக்கூட்டத்திற்குச் சமுகம் கொடுத்தவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே என்பதுடன் இக்கூட்டத்திற்கான அழைப்பு வவுனியாப் பிரதிநிதியின் உத்தியோக முத்திரையுடனேயே அனுப்பிவைக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இது போன்றுதான் ஏனைய பகுதிகளிலும் கட்சிச் சார்பற்ற வரவேற்பு என்ற மகுடத்தின் கீழ் பொன்னம்பலம் கட்சிப் பிரமுகர்கள் கூட்டங்களை ஒழுங்கு செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மன்னூரில் உள்ள இளைஞர்கள் திரு. பொன்னம்பலத்திற்கு மன்னூர் மாவட்டத்தில் ஏதாவது வரவேற்புக் கொடுக்கப்பட்டால் கறுப்புக் கொடி காட்டி அவரைத் திருப்பியனுப்புவது என்று முடிவு செய்துள்ளார்களாம். திருமலையிலும் அதே போன்று முயற்சிகள் நடைபெற்றுள்ளன.

### இரண்டு காரணங்கள்

திரு. பொன்னம்பலம் அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டுவதென்ற முடிவிற்கு இரண்டு காரணங்கள் காட்டப்படுகின்றன. ஒன்று யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் பேசுகையில் 'ஐ. நா. சபையில் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசி, நமது பிரச்சினையை உலகறியச் செய்வேன்" என்று கூறியதை நிறைவேற்றத் தவறியது.

மற்றது, ஐ. நா. சபையில் தமிழர் பிரச்சினை பற்றிப் பேச நிறையச் சந்தர்ப்பம் கிட்டியும் அதைப் பயன்படுத்தத் தவறியது. இன்றைய அரசாங்கம் பற்றிப் பேச வேண்டிய அவசியம் இல்லாத போதும், கடந்த அரசாங்கம் சிறுபான்மையினருக்குச் செய்த அநீதிகளைச் சுட்டிக் காட்டியிருக்கலாம். இவற்றைச் செய்யத் தவறியவருக்கு வரவேற்பு ஏன் என்பதை இன்று தமிழ் மக்கள் கேட்கும் கேள்வியாக உள்ளது.

திருமலையில் கட்சிச் சார்பற்ற வரவேற்பளிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றதாகப் பத்திரிகையில் வெளிவந்த செய்தி தவறு என்றும், ஐ. தே. கட்சிக்கிளைத் துணைத்தலைவர் ஒருவரினது இல்லத்தில் திரு. பொன்னம்பலத்தின் ஆதரவாளர்கள் ஒருசிலர் கூடி ஆலோசனை நடாத்திவிட்டு பத்திரிகைக்கு, பொது வரவேற்பு கட்சிச்சார்பற்ற முறையில் நடைபெறும் என்று செய்தி கொடுத்தார்கள் என்றும் நமது திருமலை நிருபர் அறிவித்துள்ளார்.

இவ்வாலோசனைக் கூட்டத்தை நடாத்தியவர்களில் ஒருவர் காலத்திற்குக்காலம் அரசியலில் கூடுவிட்டுப்பாய்பவர் என்றும் நமது திருமலை நிருபர் எழுதியுள்ளார். 'புது வேடம்—உடைந்த ஓடம்' என்ற தலைப்பில் திருமலையில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

### துண்டுப் பிரசுரம்

'உலக நாடுகள் சபையில் தமிழ்பேசும் இனத்துக்காக திருவாளர் பொன்னம்பலம் என்னதான் சேவை செய்துவிட்டார்?. தமிழ் பேசும் இனத்தின் மனிதாபிமானப் பிரச்சினைகளையும், அவர்கள் அனுபவிக்கும் இன்னல்களையும், பிறந்த மண்ணிலேயே அவர்கள் இரண்டாதரப் பிரசைகளாகப்படும் கொடுமையையும் அந்த அவையில் எடுத்துரைப்பதற்கு, இடித்துக் கூறுவதற்கு ஒரு அருமையான சந்தர்ப்பம் கிடைத்தும் கூட இந்தப் பிரச்சினைகளைப்பொறுத்த மட்டில் பொன்னம்பலனார் பொம்மையாகிவிட்டார்.

'உலக நாடுகள் அவையில் இருந்தமற்றும் மூன்று தமிழர்களின் துணையுடன் நாகரிக உலகுக்கு தமிழ் பேசும் இனம் இன்று படும் இன்னல்களையும், இந்த இனம் சொந்த நாட்டிலேயே ஒதுக்கப்பட்டு வருவதையும் உரத்த குரலில் எடுத்துரைத்திருக்க முடியும். திரு. பொன்னம்பலம் அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையில் தமிழ் பேசும் இனம் குறித்து ஒரு வார்த்தையாவது சொல்லாமல் இருந்துவிட்டார்?.

### அடிகளார் கூறியது

'சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அதி. வண. பிதா தனிநாயகம் அடிகள் சுட்டிக்காட்டியதைப் போல் 'உலக நாடுகள் அவையில் இருந்த தமிழர்கள் அந்தந்த

(13-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, எலும்புக்கூட்டு வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


## இவ்வாரச் செய்தி தெரியுமா?

**சனவரி-1**

தமிழ்பேசும் மாணவர்களின் கல்விப்பிரச்சினைகள் குறித்து தமிழரசுத் தூதுக்குழு ஒன்று தமிழரசுத்தந்தை தலைமையில், கல்வி அமைச்சரையும் பிரதம அமைச்சரையும் கண்டு பேச்சு வார்த்தை நடத்தியபோது, உடனடி நடவடிக்கை எடுப்பதாக பிரதமரும், கல்வியமைச்சரும் உறுதிமொழி கொடுத்தனர். சனவரிக் கடைசியில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதாக அறிவிக்கப்பட்டது. மாத்தறையில் ஒரு கூட்டத்தில் பேசிய அமைச்சர் திருச்செல்வம், வகுப்பு வாதத்தைத் கிளறி நாட்டைப் பிரிக்க வேண்டாம் என எதிர்க்கட்சியினரைக் கேட்டுக்கொண்டார். தமிழ் மொழி மசோதா நியாயமானதுதான் என வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தில் பேசிய திரு. கே. எம். பி. இராசரத்தினம் கூறினார். ஐ. நா. கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு கொழும்பு திரும்பிய திரு. பொன்னம்பலத்துக்கு அளித்த வரவேற்பில் எந்தவொரு அமைச்சரும் கலந்துகொள்ளவில்லை எனக்கூறப்பட்டது. வேலை நிறுத்தங்கள் எதையும்சமாளிக்க அரசாங்கம் முப்படைகளையும் உசாராக்கியுள்ளது. இந்திய நிதியமைச்சர் டி. டி. கே இன்று பதவியை ராஜினாமா செய்துவிட்டதாகவும், பதிலாக திரு. சச்சிந்திரா சௌத்திரி நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் புதுடெல்லியில் அறிவிக்கப்பட்டது. யாழ். மேயர் திரு. மகாதேவா தனது பதவியை ராஜினாமா செய்தார். பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. நடராசா என்பவருக்கு தேசிய சுவீப்பில் முதல் பரிசான பென்ஸ்காரும், ரூபா 50000 மும் கிடைத்தது. இதுவே முதற்தடவையாக தமிழர் ஒருவருக்கு கிடைத்த முதற் 'கார் சுவிப்' பரிசாகும்.

**சனவரி-2**

சிறுபான்மை வகுப்பைச்சேர்ந்த வடபகுதியிலுள்ள 11 ஆசிரியர்களின் இடமாற்றத்தை நிறுத்திவைக்க தாம் ஏற்பாடு செய்வதாக தம்மைக் காணவந்த சி. த. ஆ. ச தூதுக்குழுவிடம் தமிழரசுத் தந்தை கூறியுள்ளார். சுதந்திரக்கட்சியை சேர்ந்த மூதூர் 2-வது பிரதிநிதி மஜீத் தாம் தமிழ்மொழி மசோதாவை ஆதரிக்கப்போவதாக அறிவித்தார். திரு. டி. டி கே நிதியமைச்சர்பதவியை விட்டு விலகியதற்கு காரணம் அவர்மீது சாட்டப்பட்டுள்ள லஞ்ச ஊழல் சம்பந்தமாக பிரதமர் சாத்திரி எடுத்த சில நடவடிக்கைகளை, அவர் ஏற்றுக்கொள்ளாமையே என இன்று டெல்லியில் அறிவிக்கப்பட்டது. டாஷ்கண்டில் நடைபெற இருக்கும் சந்திப்பு வெற்றியளிக்கும் என சாஸ்திரியும் அயூப்கானும் நம்பிக்கை தெரிவித்தனர். மத்திய ஆபிரிக்க குடியரசில் புரட்சிக் குழு ஆட்சியைக் கைப்பற்றிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. மேற்படி புரட்சியில் அரசாங்கத்தைக் கைப்பற்றிய திரு. டாக்கோ அங்கிருந்து செஞ்சீனர்களை முதன் முதலாக வெளியேற்றப் போவதாக அறிவித்தார் வடகிழக்கு பகுதியை நோக்கி புயல் ஒன்று வருவதாகவும், மீனவர்களை எச்சரிக்கையாக இருக்கும்படியும் கொழும்பு அவதான நிலையம் எச்சரித்தது.

**சனவரி-3**

சிங்களத்தில் தேர்ச்சி பெறாத-55 வயதுக்கு மேற்பட்ட அரசாங்க ஊழியர்களை தொடர்ந்தும் சேவையில் வைத்திருக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. பேராதனை சர்வ கலாசாலையில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக்குழு 7-ந் திகதி விசாரணை தொடங்கும் என அறிவிக்கப்பட்டது. தமிழ்மொழி மசோதாவை எதிர்த்து சனவரி 5-ந் திகதி எதிர்ப்புக்கூட்டம் நடத்த எதிர்க்கட்சிகள் முடிவுசெய்துள்ளன. அத்துடன் குடியரசாக இலங்கையைப் பிரகடனப்படுத்த அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்க்கவும் அவர்கள் தீர்மானித்தனர். எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு கட்டாயமாக ஒரு பொதுப் பரீட்சையொன்று நடத்த கல்வியமைச்சு தீர்மானித்தது. கண்டி மாவட்ட உள்ளூராட்சித் தலைவர்கள் மாநாட்டில் உரை நிகழ்த்திய அமைச்சர் திருச்செல்வம், தான் நடுநிலைமையுடனும், நீதியாகவும் நடப்பேன் என்று உறுதிமொழி கொடுத்தார்.

**சனவரி-4**

தமிழ் மொழி (விசேட) விதிகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சனவரி 8-ம் நாள் நாட்டில் எந்தவிதமான குழப்பங்களும் ஏற்படாமற் தடுக்க காவல்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். இ. தொ. காங்கிரஸ், தமிழ் மொழி (விசேட) விதிகள் மசோதாவை எதிர்த்து வாக்களிக்க முடிவு செய்துள்ளது. சிங்கள மூலம் தமிழ்ப் போதனையை இன்று முதல் இலங்கை வானொலி ஆரம்பிக்கவுள்ளது. தைப்பொங்கலுக்கென யாழ்ப்பாணம் செல்வோருக்கு விசேட புகையிரத சேவைகளை நடாத்த புகையிரதப்பகுதி ஒழுங்கு செய்துள்ளது. அலவத்துகொடையில் கூட்டம் ஒன்றில் பேசிய அமைச்சர் திருச்செல்வம், தமிழ்மொழி உபயோக ஒழுங்கு விதிகளில் புதிதாக ஒன்றுமில்லையெனவும், கடந்த வருடம் திருமதி பண்டா ஏற்றுக்கொண்டவைகளே எனவும் கூறினார். யாழ்ப்பாணத்துக்கும் மட்டு நகருக்கும் இடையில் நேரடியாக பஸ் சேவை கூடிய விரைவில் ஏற்படுத்தப்படும். மட்டக்களப்பில் சமீபத்தில் பெய்த பெருமழையால் பாதிக்கப்பட்டோருக்கு, மட்டக்களப்பு பிரதிநிதி செ. இராசதுரையும் அமைச்சர் திருச்செல்வமும் எடுத்த நடவடிக்கைகளினால் நிவாரண வேலைகள் ஆரம்பமாகியுள்ளது. ஆசிரியர் இடமாற்றங்களில் தான் தலையிடப் போவதில்லை என திரு. பொன்னம்பலம் கூறியுள்ளார். டாஷ்கண்டில் இன்று சாத்திரிக்கும் அயூப்கானுக்குமிடையிலான உச்சி மாநாடு சோவியத் பிரதமர் திரு. கோசிஜின் தலைமையில் நடைபெறும்.

# பாராளுமன்றத்தின் முன் உபவாசம்

## தமிழ் மசோதாவை எதிர்க்க ஏற்பாடுகள்

"தமிழ் மொழி மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக 8-ந் திகதி பாராளுமன்றத்தின் முன்னிலையில் உபவாசம் ஆரம்பிக்க அகில இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

அத்துடன் இந்த தமிழ் மொழிச் சட்ட விதிகளை எதிர்த்து வாக்களிக்குமாறு அரசாங்க எம். பிக்களைச் சந்தித்துக் கேட்டுக்கொள்வதென்றும் சங்கம் முடிவு செய்துள்ளது.

யு. என். பி. வாலிபர் சங்கங்கள், பிற சங்கங்கள் பல இந்த விதிகளுக்குத் தங்களின் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் உபயோகச் சட்ட விதிகளைக் கண்டிக்கும் தீர்மானங்கள் அநேகமாக எல்லா ஊராட்சி மன்றங்களிலும் கொண்டுவரப்பட்டுள்ளன".

—ஜனதின (3-1-56)

### கொழும்பில் பிக்குகளின் உபவாசம்

'ஜனவரி 8-ம் திகதி தினத்தைக் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புக் காட்டுவதற்காக அன்று கொழும்பு விகாரமகாதேவி சிலையின் முன் நிலையிலும், அநகாரிக்க தர்மபால, எப். ஆர். சேனநாயகா ஆகியோரின் சிலைகளின் முன்னிலையிலும் 24 மணிநேரம் உபவாசம் இருப்பதற்காக தேச பக்தியுள்ள பிக்குகளனைவரும் அன்று காலை விகாரமகாதேவி பூங்காவில் ஒன்று கூடுமாறு தேசப் பிரேமி மகா சங்க பலமண்டலயா பிக்குகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது.'

—எத்த (4-1-66)

### நாயக்கதேரோ வேண்டுகோள்

"தமிழ் மொழி மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஜனவரி 8-ந் திகதி தேசிய துக்க தினமாகக் கருதும்படி சிங்களவர்களுக்கும் தேசபக்தியுள்ள சிறுபான்மையோருக்கும் சியனு-ஹாப்பிட்டி இரு கோரளைகளின் பிரதான சங்க நாயக்க வேயங்கொடை கிரீடாராமாதிபதி வண. மொட்டுன்னே ஸ்ரீ இந்தசார நாயக்க தேரோ ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

—எத்த (1-1-66)

## சிங்கள இதழ்களில்...

## தேசாதிபதிக்கு 1000 பிக்குகளின் மகஜர்

ஏழு கட்சி—கூட்டரசாங்கத்தின் தமிழ் மொழி மசோதா மக்களின் முன்னேற்றத்துக்கு ஒரு முட்டுக்கட்டையென்றும், அதனால் பொது மக்களுக்கு ஏற்படும் இன்னல்களை அகற்றி உண்மையான மக்களின் தேசிய ஆட்சி ஒன்றினை நிறுவும் பொருட்டு பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுமாறு கேட்டுக்கொள்ளும் ஒரு பிரமாண்டமான மகஜரை ஆயிரம் பௌத்த பிக்குகள் கூடி தேசாதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் கம்பகா பகுதியில் சில பௌத்த ஸ்தாபனங்கள் தீவிரமாக முனைந்துள்ளன".

—எத்த (2-1-66)

### மகா சங்கம் உண்ணாவிரதம்

'டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கிணங்க தமிழ் மொழியை அரியாசனத்தில் ஏற்றுவதற்கான சட்ட விதிகளுக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்காக தேச பக்தர்களான பிக்குகள் ஜன. 8-ந் திகதி தலைநகரில் உபவாசம் இருப்பார்கள்'.

—ஜனதின (31-12-65)

### வேறு சட்ட திட்டம் வேண்டாம்

"இன்று நாடு எதிர்நோக்கியுள்ள அபாயத்தைப்பார்க்கும் போது பௌத்த சமயம் 2500 வருடங்களல்ல—25 வருடங்கள் கூட நிலைத்து நிற்காது 80% சிங்களவர்கள் வசிக்கும் இந்த நாட்டில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக வேண்டும். வேறு சட்ட திட்டங்களைக் கொண்டு வருவதால் பெரும்பான்மை இனத்தின் உரிமைகளைப் பாதுகாக்க முடியாது. பிரிவிக்கவுன்சில் தீர்ப்பிலிருந்து இந்நாடு பூரண சுதந்திரம் பெறவில்லை என்பது தெளிவாகிறது" என்று மல்வத்தை மகாநாயக்க வண. விபஸ்ஸி தேரோ ஜனவரி முதலாந்திகதி கொழும்பில் நடைபெற்ற எட். ஆர் சேனநாயக்கா ஞாபகார்த்த தினக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்".

—ஜனதின (2-1-66)

### "மசோதாவில் ஓர் ஓட்டை!"

"ஆட்சி மொழியின் அமுலுக்குப் பாதகமின்றி தமிழ் மொழியை உபயோகிப்பது பற்றி தமிழ் மொழி மசோதாவில் கூறப்பட்டுள்ளது. ஆயினும் தமிழ் மொழி மசோதாவில் எந்த ஒரு பகுதியும் ஆட்சி மொழிக்கு முரண்படுமாயின் அது ஆட்சி மொழிக்கு உட்பட வேண்டும்-அதாவது அந்த விதிகள் காலாவதியாகும் என்று இந்த மசோதாவில் குறிப்பிடப்படவில்லை. ஆகவே ஆட்சி மொழிக்கு அடி கொடுக்க இதில் இடமளிக்கப்பட்டுள்ளது".

—ஜனதின (2-1-66)

### சிங்களவர்களுக்கு தமிழரின் சாவுமணி

"இப்பொழுது நமது தீவில் தமிழர்களின் பலம் வேகமாக அதிகரித்து வருகிறது. சிங்களவர்கள் பல காரணங்களால் பிளவுபட்டுக் கிடக்கும் போது சிங்களவர்களை மிதித்துக்கொண்டு எழுந்து நிற்கும் தமிழர்கள் சிங்களவர்களுக்கு சாவு மணி அடிக்கும் நாள் வெகு தூரத்திலில்லை என்றும், சிங்களவர் ஓரினமாக ஒன்றுபட்டு கள்ளத்தோணிகளுக்கும் தமிழர்களுக்கும் எதிராகப் போராட வேண்டிய காலம் வந்துவிட்டதென்றும் வண. வெல்லேதொட்ட பஞ்ஞாதஸ்ஸி தேரோ மொனராகலை நகரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கூறினார்".

—ஜனதின (2-1-66)

### பிக்குகளின் வேண்டுகோள்

'சிங்கள இரத்தம் ஒரு சொட்டாவது உடலிலுள்ள ஒவ்வொரு சிங்களவரும் தனது வீட்டின் முன்னால் ஜனவரி 8-ந் திகதி கறுப்புக் கொடி உயர்த்தி தேசிய துக்கதினமாக கொண்டாட வேண்டுமென்றும் தனது வீட்டிலோ காணியிலோ தூக்கப்படும் கொடியைத் தடுப்பதற்கு போலீசுக்கோ, வேறு எவருக்கோ சட்டமோ அதிகாரமோ கிடையாதென்றும் தேசப்பிரேமி மகாசங்க பல மண்டலய ஓர் அறிக்கையில் கூறுகிறது.

சிங்கள மொழியை ஆட்சி மொழியாக்கிய தினத்தில் வடக்கே தமிழரசு வாதிகள் கறுப்புக் கொடி உயர்த்தினர்களென்றால், சிங்களத்துக்கு சாவு மணி யடிக்கும் 8-ம் திகதி ஒவ்வொரு சிங்களவரும் ஒரு கறுப்புக் கொடிக்குப் பதிலாக நூற்றுக் கணக்கான கறுப்புக் கொடிகளை உயர்த்த வேண்டும். ஆர். ஜி. சேனநாயக்காவின் 'நாம் சிங்களவர்' இயக்கத்துக்கு எதிராக ஜயவர்தனுக்கள் 'நாமே சிங்களவர்' என்ற ஓர் சங்கத்தை நிறுவியுள்ளனர். இந்த சங்கத்தின் பின்னால் இருப்பவர் திரு. ஜே. ஆர். ஜயவர்தன தான்.

8-ந் திகதி கறுப்புக் கொடி உயர்த்தும் கடை சாப்புகளின் இடாப்பு ஒன்று தயாரித்து அவர்களின் வர்த்தக லைசன்சுகளை இரத்துச் செய்யப்போவதாக நாமே சிங்களர் என்ற ஸ்தாபனம் பயமுறுத்தியுள்ளது. இப்படிச் செய்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது யார்? நாட்டுக்கு ஆபத்து ஏற்படுவதை ஆட்சேபித்து கறுப்புக் கொடி உயர்த்துவது போன்ற அகிம்சை நடவடிக்கைகளுக்கு வர்த்தக லைசன்ஸ் இரத்துச் செய்வது எந்த ஊர் ஜனநாயகம்? தனது கடையில் கறுப்புக் கொடியோ வேறு எந்தக் கொடியோ உயர்த்துவதற்கு யாரிடமும் அனுமதி பெற வேண்டியதில்லை அதற்காக லைசன்சுகளை இரத்துச் செய்யச் சட்டத்தில் இடமில்லை ஆகவே இந்த மிரட்டலுக்கு சிங்களவர்கள் பயப்படாமல் 8-ந் திகதி தங்கள் கடைகளில் கறுப்புக் கொடி உயர்த்த வேண்டும். இவ்வாறு மகாசங்க பல மண்டலயாவின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது'.

—எத்த (4-1-66)

### பிரதமருக்கு தந்தி

"தமிழ் மொழி மசோதா சிங்கள இனத்துக்கும் சிங்கள மொழிக்கும் ஆபத்தை ஏற்படுத்து மாதலின் அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டாமென்று ஐக்கிய சிங்கள மகாஜன சபையின் தலைவர் மாத்தளை சாஸன நிலக்க தேரோ பிரதமருக்கு ஒரு தந்தி அனுப்பியுள்ளார்.

### தமிழில் பஸ் டிக்கட்

கொழும்பிலிருந்து அவிசாவளைக்குச் சென்ற ஒரு பஸ்ஸில் கண்டக்டரால் தமிழில் எழுதி ஒரு பிரயாணிக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பிரயாண டிக்கட்டின் படத்தை ஜனதின (4-1-66) பிரசுரித்துள்ளது. இந்த டிக்கட்டைப் பெற்றவர் சிங்கள ஜாதிக பலவேகயாவின் கூட்டுக் காரியதரிசியென்றும் அவிசாவளை மந்திரி பிலிப் குணவர்த்தனவின் தொகுதியென்றும் கூறும் ஜனதின மந்திரி தனது தொகுதியைத் தமிழரசுக் கட்சியிடம் ஒப்படைத்துவிட்டாரோ? என்று கேட்கிறது


'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி
சுதந்திரன்

மினர்வா
இப்பொழுது
இலகுவான தவணைக் கட்டண அடிப்படையில் உங்களுக்கு வழங்கப்படுகிறது.



★ நூதனமான எழில், அற்புதமான கிரியாம்சை
★ அச்சொட்டான அமைப்பு,
★ 3 லாச்சு கொண்ட கபினெட்

கிடைக்குமிடங்கள்:

குருண்டிக் காட்சிச்சாலை
வை. எம். பி. ஏ. கட்டிடம்,
கோட்டை, கொழும்பு.

சென்ற். அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்.,
516, ஸ்கின்னர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு.
தொலைபேசி: 4261, 4262, 4263.



# மங்கையர் சங்கம்

கருத்துமேடை

# ஆபாசச் சினிமா ஆபத்தானதே!

—ஆனந்தி சண்முகலிங்கம்—

உலகம் இன்று நாகரிகத்தின் உச்சநிலையென மெச்சிக்கொண்டு நிர்வாண கோலத்துடன் காட்சியளிக்கச் செய்வதற்கு மேலைநாட்டுச் சினிமாவே காரணமென்றல் அதை யாரும் மறுக்க முன்வரமாட்டார்கள். வயிறு தெரியச் சேலைகட்டி எமது நாட்டுப் பெண்களை அலையவைப்பது சினிமா தந்த சீரழிந்த நாகரிகமே.

பணத்தையே குறிக்கோளாகக்கொண்டு உருவாகும் படங்களில் மனிதனின் மிருகஉணர்ச்சிகளைக் கிளப்பி விடக்கூடிய அளவுக்கு ஆசாபாசங்களை புகுத்துவதால்

**திரையிலும் சுவரிலும் ஆபாசம்**

**13**

பாழடைந்த மாசறியாத உள்ளங்கள் எத்தனை? அருவருப்பூட்டும் அந்தரங்கக் காட்சிகளை வெள்ளித்திரை தெட்டத் தெளிய அள்ளித் தருவதால் அழிந்து நாசமாகிய இளம் வாலிப உள்ளங்கள் எத்தனை?

நாகரிகம்போல நடித்து நாசகாலத்துக்கு வழிகாட்டும் நாகரிக உடைகளில் மயங்கித் தங்கள் மானத்தையும் கற்பையும் பறிகொடுத்து உள்ளம் உருகி ஆருகி அழும் மங்கை உள்ளங்கள் எத்தனை?

இப்படியாக தங்கள் பிள்ளைகள் சினிமாவினால் கெட்டு விட்டார்கள் என்று பெற்றோர்களின் உள்ளங்கள் ஏங்கிப் பரிதவிக்கின்றன. இன்றைய வாலிபர், இளம் நங்கைகள், மாணவமாணவிகள் மட்டுமின்றிப் பல பெரியோர்களும் கெட்டழிந்து போக மூலகாரணமாயிருப்பது பணம்பறிக்கும் அடிப்படையில் உருவாகிய ஆபாசப் படங்களே.

அண்மையிலே இந்தியாவில் சினிமாப்படம் பார்த்துக்கொண்டிருந்த ஒரு என்ஜினியர், அதிலேவந்தகாதல் கட்டங்களால் தன் உணர்ச்சியை அடக்க முடியாமல் ஒரு பெண்மீது செய்த சேட்டையால் தன் உயிரையே இழக்க நேர்ந்தது. அதனாலே அந்த நாடு ஒரு என்ஜினியர் என்ற மகனை இழந்துவிட்டதே என்று கண்ணீர் உகுக்கிறது.

எனவே அரசாங்கம் படம் தயாரிக்கும் முதலாளிகளுடன் ஒத்துழைத்து சமூகத்தை நாசமாக்கி உருக்குலைக்கும் ஆபாசப் படங்களைத் தயாரிப்பதைச் சட்டமூலம் நிறுத்தி நமது தேசத்துக்கும், நாகரிகம், கலாசாரம், பண்பாடு என்பனவற்றிற்கு ஒத்துவரக்கூடிய அருமையான படங்களைத் தயாரித்துசமூகத்தின் ஊழல்களைக் களைந்து சிறாரின் உள்ளங்களைப் பெருமைதரக் கூடிய இலட்சியங்களால் நிறைத்து சினிமாவின் அரிய சாதனையை நல்வழியில் உபயோகப்படுத்தஆவனசெய்ய வேண்டும்.

# கவர்ச்சி தரும் காலுறையின் நீண்ட வரலாறு

கன்னியர்கள் தங்கள் கவர்ச்சியை எடுத்துக்காட்ட கால்களில் அணியும் காலுறைகளின் பின்பு, நீண்ட சரித்திரமே அடங்கியிருக்கிறது. மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த மான்கிம் நகருக்குப் போனல், இது உண்மையென அறியலாம். அங்கு காலுறைகளின் கண்காட்சி ஒன்று இருக்கிறது.

காலுறைகளை நெசவு செய்த ஒரு பழமையான ஜெர்மன் கைவினைத் தொழிலாளி, பலவித காலுறைகளைச் சேகரிக்கத் தொடங்கினர். அந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும், பரம்பரையாக இதைக் கடைப்பிடித்து வந்தனர். முதலில் குடும்பத் தொழிலாக அவர்கள் கொண்டிருந்த காலுறை தயாரிப்புத் தொழில், இன்று உலகிலேயே பிரசித்திபெற்ற காலுறை தயாரிப்புதொழிற்சாலையாக மாறியுள்ளது. இந்நகர் வருவோரைப் பெரிதும் கவருவது, காலுறை கண்காட்சியே!

விலைஉயர்ந்த பட்டு காலுறையை ஒரு இராணியின் திருமணப் பரிசாக அளித்தபோது, அது மறுக்கப்பட்டது. 'ஸ்பெயின் இராணிக்கு கால்கள் இல்லை' என்று வேடிக்கையாக காரணம் கூறப்பட்டது. அந்தக் காலுறை இடம்பெற வில்லையென்றலும் 120 ஆண்டுகளுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட காலுறைகள் முதல் இதுவரை தயாரிக்கப்பட்ட காலுறைகள் வரை இங்கு இடம் பெற்றிருக்கின்றன 1850 ம் ஆண்டு வாக்கில், மங்கையரின் திருமணத்திற்கு வரதட்சிணையாக காலுறைகளையும் கொடுப்பது வழக்கம். அதன் பின்னர் தயாரிக்கப்பட்ட காலுறைகளில் முத்துக்கள், ரோஜா மொட்டுகள் ஆகியவை கோர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அதன் பின்னர் அடிக்கடி காலுறைகளில் மாறுதல்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. 1910ல் "லேஸ்" காலுறைகள் வந்தன.

இன்றும்கூட மான்கிம் காலுறை நிறுவனத்தார், அரசகுடும்பத்தினருக்கு காலுறைகள் சப்ளை செய்கிறார்கள், பெல்ஜியம் அரசி பாபியாலோ, ஸ்காண்டி நேவிய நாடுகளின் அரச குடும்பத்தினர் ஆகியோர் இன்றும் மான்கிம் காலுறைகளையே அணிகிறார்கள்.

காலில் கவர்ச்சியை அதிகப்படுத்திக் காண்பிக்க கன்னியர் ஆசை கொண்டதிலிருந்து காலுறைகளுக்கு கிராக்கி அதிகரித்து வந்திருக்கிறது.

# இல்லாள்

கின்னியா-மதியேந்தி

அதிகாலை துயில் நீக்கி—தம்
அன்றடக் கடன் முடித்து
பதியின் பாதம் பணியும்—குலப்
பத்தினி தெய்வ இல்லாள்.

மண்ணில் கணவன் ஒருவனென—தம்
மங்கள தாலி காத்து
கண்ணில் கலந்த மணியென—என்றும்
காத்து பேணும் இல்லாள்.

கற்பின் செல்வி கண்ணகியின்—வாழ்வுக்
கலைகள் யாவும் கற்று
பொற்பும் அறிவும் சேர்ந்த—மழலை
பெற்று மகிழும் இல்லாள்.

அன்பு பாசம் கொண்டு—மக்களை
அகம் முகம் மலர
தென்பு ஊட்டும் பாலுடன்—பொதுப்
பண்பும் கொடுக்கும் இல்லாள்

துணைவன் குணம் அறிந்து—வாழ்வு
துன்பம் இன்றித் திகழ
மனையின் மாண்பு சிறக்க—ஒளிரும்
மங்கள விளக்கு இல்லாள்.

# நோன்பின் மாண்பு

—எஸ். ஐ. நாகூர் கனி—

உள்ளத்தில் ஊறி வாழ்வை
உறுத்திடும் ஆசை நீக்கி
உள்ளவர் இல்லா தோரின்
உரிமையாம் 'பித்ரா' ஈந்து,
எல்லோரும் சமமாய் வாழும்
இனிதுயர் வாழ்வை நல்கும்,
கள்ளமில் 'ரமழானே' உன்
களிப்புயர் மாண்பு என்னே!

மனத்தில் மறைந் திருக்கும்
மாசினை நீக்கி, நாளும்
பணத்தையே நம்பி வாழும்
பாவத்தும் களங்கம் போக்கி,
தனக்கொரு நிகரில் லாத
தலைவனின் அருளைத் தரும்,
மனமகிழ் 'ரமழானே' உன்
மாண்பினை என்னே சொல்வேன்!

இறையவன் தந்த நோன்பை
இனிதுடன் ஏற்று, 'ரமழான்'
கறையிலா மாதம் முற்றும்
கடமையை நோற்று, நாளும்
மறையினை ஆய்ந்து ஓதி
மாதவன் நாமம் போற்றி
நிறையுடன் வாழ நாமே
நிமலனை தொழுது நிற்போம்!

# 5பேருக்கு ஒரு தொலைநோக்கி

170 இலட்சம் சனத்தொகைக் கொண்ட ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் தற்போது 31 இலட்சம் தொலை நோக்கிப் பெட்டிகள் உண்டு.

இங்கு தொலைநோக்கிக் கருவி உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளில் 15 மடங்கு அதிகரித்துள்ளது. பல்வேறு அளவில் தொலைநோக்கிப் பெட்டிகள் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்றது.

# ஆசை

இவ்வளவு நாட்களாக என் மனதில் தேக்கி வைத்திருந்த ஆசையை வீட்டாரிடம் தெரிவித்தபோது அவ்வீட்டில் பெரிய பூகம்பம் ஒன்றே ஏற்பட்டுவிட்டதெனலாம். ஒவ்வொருவரும் தந்தமது எதிர்ப்பை வார்த்தை வடிவில் வெளிப்படுத்தியபோது எல்லோரும் பேசி முடிக்கட்டும் என்று நான் அமைதியாக இருந்தேன்.

'உனக்கு என்ன! துணிவிருந்தால் இப்படியானதொரு முடிவிற்கு வருவாய். நம் குலமென்ன? கோத்திரமென்ன? இத்தனையும் புறக்கணித்துவிட்டு இக்காரியத்திற்கு நான் சம்மதிப்பேன் என்று எதிர்பார்க்கிறயா? இது ஒருபோதும் நடவாது' என்று அப்பா அடித்துச் சொல்லிவிட்டார்.

அப்பாவின் பேச்சு முடியு முன்பே அம்மா தனது பங்கைத் தொடர்ந்தாள், 'என்னடீ சரோசா இவ்வளவு லேசாக முடிவுபண்ணிவிட்டாய்? அவனுடைய அம்மா அப்பாவைப்பற்றி ஊரிலே எப்படியெல்லாம் பேசிக்கொள்கிறார்கள் தெரியுமா? நீ என்னடாவென்றால்......'

'அதை விட்டுத்தள்ளுங்களேன். நமது நிலை என்ன? அவர்கள் நிலை என்ன? இவ்வளவு பெரிய பங்களா எங்கே. அந்தக் குச்சுவீடு எங்கே. கேட்பவர்களும் பார்ப்பவர்களும் சிரிக்க மாட்டார்களா?' என்று அந்தஸ்துப் பேதம்பேசினன் எனது தம்பி சிவம்.

**நீதிக் கதை**

'அது ஒருபுறம் இருக்க, அவனுடைய தாய் இங்கே ஒருமுறைவந்து வேலை கேட்டபோது நாம் வேலை இல்லை என்று சொல்லி மறுத்துவிட்டோமல்லவா அன்று முதல் அவளுக்கு எங்களைக் கண்டாலே வெறுப்பு' என்று பழைய நிகழ்ச்சிகளைக் கிளறினள் எனது பாட்டி.

இப்படி ஒவ்வொருவராகத் தத்தமது எதிர்ப்புகளைத் தெரிவித்தனரேயன்றி யாரும் எனக்கு ஆதரவாகப் பேச முன்வராதது கண்டு எனக்குப் பொல்லாத கோபம் வந்துவிட்டது. 'நீங்கள் எல்லோரும் சேர்ந்து எப்படி எதிர்ப்புக்காட்டினலும் நான் எனது முடிவை மாற்றப்போவதில்லை' என்று ஆவேசமாகக் கூறினேன்.

'பாவம் அவன் சொல்வதிலும் நியாயம் இருக்கத்தானே செய்கிறது? குலம் கோத்திரம் எல்லாம் இந்தக் காலத்தில் பார்த்துச் சரிவராது. அவளும் ஆசையோடு விரும்புகிறள். அவர்களும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். பார்க்க மிகவும் அழகாக இருக்கிறள். குழந்தையை எடுத்து வளர்ப்பது தானே' என்று இதுவரை எதுவுமே பேசாமல் ஓரமாக இருந்த என் கணவர் எனக்குப் பரிந்து பேசவே அனைவரும் வியப்பு நிறைந்த விழிகளுடன் அவரை நோக்கினர். நான் மட்டும் நன்றி கலந்த பார்வையுடன் அவரை நோக்கினேன். அவர் சொன்னல் மறுப்பதற்கு யார் இருக்கிறர்கள்?

"இளமதி"

# யாழ்ப்பாணக் குடா நாட்டின் சுருட்டுக் கைத்தொழில்

க. குணராஜா, பி.ஏ.(ஆனர்ஸ்)
விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம்.

கைத் தொழில்கள் தொடர்ந்து இயங்குவதற்கு அவற்றின் உற்பத்திப் பொருட்களுக்குச் சந்தைகளிருத்தல் அவசியம். உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் இணைக்கின்ற நிலையமாகச் சந்தை விளங்குகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுருட்டுக் கைத் தொழிலைப் பொறுத்த மட்டில் பருத்தித் துறையிலிருந்து தேவேந்திரா முனை வரை, இலங்கை எங்கினும், சிறியளவிலோ, பெரியளவிலோ சந்தைகளுள்ளன.

உள்ளூர் விற்பனை யாழ்ப்பாணக் குடா நாட்டில் குறைவாகவிருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன: (அ) சுருட்டுக் குடிப்பவர்கள் சுருட்டுத் தொழிலாளர்களாகவிருப்பதால் அவர்களுக்கும், அவர்களோடு சார்ந்தவர்களுக்கும் சுருட்டுக்களை விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசிய மேற்படுவதில்லை. அவர்கள் தேவையான சுருட்டுக்களைக் கொட்டில்களிலேயே புகைக்கின்றார்கள். அதைவிட வேலை முடிந்து போகும் போது, ஒவ்வொரு தொழிலாளிக்கும் 'குடி சுருட்டு' என; 5 சுருட்டுக்கள் வழங்கப்படுகின்றன (ஆ) கோடா போட்ட சுருட்டை உள்ளூர் யாது. மூன்று, நான்கு சுருட்டுக் கொட்டில்களே உள்ளூர்ச் சந்தையில் ஏகபோக உரிமை வகித்து வருகின்றன. வை. சி. சி. கு என்ற முத்திரையை வர்த்தகச் சின்னமாகக் கொண்டுள்ள சுருட்டு முற்றாக உள்ளூர் விற்பனையையே நம்பியுள்ளது. மொத்த உள்ளூர் விற்பனையில் 40% வை. சி. சி. கு. சுருட்டுகளேயாம். இதனை விட ஏனைய சில சுருட்டு வகைகளும் பெயர் பெற்றுள்ளன. அத்தோடு வீட்டில் இருந்து ஒருவர், இருவரால் சுருட்டப்படுகின்ற சுருட்டு

| சந்தையின் பெயர் | விற்பனையளவு | சந்தையின் பெயர் | விற்பனையளவு |
|---|---|---|---|
| கொழும்பு | 11,04,00 000 | திசைமாறு | 48,00,000 |
| மாத்தறை | 3,60,00 000 | மீரிகம | 48,00,000 |
| அளவை | 3,00 00 000 | சிலாபம் | 36 00,000 |
| குருநாகல் | 2,64,00,000 | அக்கிறுசை | 36,00,000 |
| கண்டி | 2,28,00,000 | பட்டிப்பளை | 36,00,000 |
| காலி | 2,16 00 000 | மத்துகம | 36,00,000 |
| மட்டக்களப்பு | 2,04,00,000 | தலவாக்கொல்லை | 36,00,000 |
| நாவலப்பிட்டி | 1,68 00 000 | இரத்தினபுரி | 25,00,000 |
| அம்பலாங்கொட | 1,56,00,000 | வவுனியா | 25,00,000 |
| குளியாப்பிட்டி | 1,08 10,000 | பொல்காவலை | 24,00,000 |
| களுத்துறை | 96,00,000 | நீர்கொழும்பு | 24,00 000 |
| கேகாலை | 72,00,000 | மாத்தளை | 18,00,000 |
| அட்டன் | 62,00,000 | பண்டாரவளை | 18,000,00 |
| பதுளை | 60,00,000 | நாத்தாண்டி | 16,00,000 |
| | | ஏனையன | 1,75,00,000 |

அட்டவணை : 1

யாழ்ப்பாணக் குடா நாட்டில் வருடா வருடம் 43 கோடி சுருட்டுகளுக்குமேல் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த 43 கோடி சுருட்டுகளில் 40½ கோடி சுருட்டுகளுக்குச் சந்தைகள் யாழ்ப்பாணக் குடாநாடு தவிர்ந்த இலங்கையின் ஏனைய பாகங்களிலேயே இருக்கின்றன; உள்ளூர் விற்பனை அதாவது யாழ்ப்பாணக் குடாநாட்டில் விற்பனையாவது—ஆக இரண்டரை கோடி சுருட்டுகளேயாம். (படம்:1)

## உள்ளூர் விற்பனை


உள்ளூர் விற்பனை மிகக் குறைவாகவிருப்பதிலிருந்து, உள்ளூரில் சுருட்டுப் புகைப்பவர்கள் குறைவு என்று கருதிவிடக் கூடாது. உள்ளூர் விற்பனை குறைவாக இருப்பதற்குக் காரணங்கள் சிலவுள் மக்கள் அவ்வளவாக விரும்புவதாகத் தெரியவில்லை. காரமான நாட்டுப் புகையிலையில் தாங்களாகவே சுருட்டிப் புகைக்க விரும்புகின்றனர். சுருட்டுக் குடிக்கின்றவர்களில் பெரும்பாலானோர்க்குச் சுருட்டத் தெரிந்துள்ளது. சுருட்டுக் குடிக்கின்ற யாழ்ப்பாணக் குடா நாட்டுப் பெண்கள் கூடச் சுருட்டுகின்ற திறமையுடையவர்களாக விளங்குகின்றனர். அதனால், தங்களுக்குத் தேவையான சுருட்டுக்களைத் தாங்களே சுருட்டிப் புகைக்கின்றனர். இத்தகைய காரணங்களினால் உள்ளூர் விற்பனை குறைவாக இருக்கின்றது.

உள்ளூர் விற்பனையில் யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள எல்லாச் சுருட்டுக் கொட்டில்களும் பங்கு பற்றுகின்றன என்று கூறிவிடமுடி களும் உள்ளூரிலேயே பெரிதும் விற்பனைக்கு அளிக்கப்படுகின்றன.

இன்று உள்ளூர் விற்பனைச் சந்தையில் பலத்த போட்டி ஏற்பட்டுள்ளது. எல்லா உற்பத்தியாளர்களும் விலையைக் குறைத்து விற்பனையைக் கூட்டி, உள்ளூர் சந்தையைக் கைப்பற்ற முயல்வதால் பலத்த போட்டி நிலவுகிறது. இப்பலத்த போட்டிக்குக் காரணம், 1958ம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட வகுப்புக் கலவரத்தால் வெளிநாட்டுச் சந்தையை நம்பமுடியாது போனதால், உள்நாட்டுச் சந்தையைப் பெறப் போட்டியிடுகின்றனர்.

| | சு. கொ. தொகை | தொழிலாளர் | உற்பத்தி | வருமானம் (ரூபா) | சராசரியாக ஒரு கொட்டிலின் வருமானம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| யாழ். குடாநாடு முழுவதும் | 216 | 3257 | 43கோடி | 70லட் | 33,000 |
| சுருட்டுக் கைத்தொழில் வலயம் | 172 | 2669 | 36½கோடி | 61லட் | 35,000 |
| கைத் தொ. வலயம் அல்லாதன | 44 | 588 | 6½கோடி | 9லட் | 20,000 |

அட்டவணை : 2




படம் 2

## வெளியூர் சந்தைகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வெளியே விற்பனையாகின்ற 40 அரை கோடி சுருட்டுக்களில் 90 வீதம் இலங்கையின் தென்மேல் பகுதியில், கண்டி, கேகாலை, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் விற்பனையாகின்றன.


40 அரை கோடி சுருட்டுக்களில் ஏறத்தாழ ¼பங்கு, 30 சந்தைகளால் விற்கப்பட்டு வருகின்றன. கிட்டத்தட்ட 11கோடி சுருட்டுகளுக்குக் கொழும்பு சந்தையாகவிருக்கின்றது. சுருட்டுச் சந்தைகளில் மிகப் பெரிய சந்தையாக இது விளங்குகின்றது; கொழும்பில் மட்டும் மொத்த விற்பனையில் ¼பங்கு விற்பனை செய்யப்படுகின்றது. கொழும்பை அடுத்து முறையே மாத்தறை, அளவை, குருநாகல், காலி கண்டி, மட்டக்களப்பு, நாவலப்பிட்டி, அம்பலாங்கொடை, குளியாப்பிட்டி என்பன பெரும் சுருட்டுச் சந்தைகளாகக் காணப்படுகின்றன. (படம் 7 பார்க்க) அட்டவணை 1ல் இருந்து சுருட்டுச் சந்தைகளின் விபரங்களையும், அவை விற்பனை செய்யும் சுருட்டுக்களின் தொகையையும், அறிந்து கொள்ளலாம்.

கொழும்பு முக்கியமான சுருட்டுச் சந்தையாக விளங்குவதற்குப் பல காரணங்களைக் கூறலாம். கொழும்பு இலங்கையின் தலை நகரமாகவும், பலவின, மத, மொழி மக்கள் வாழ்வதாலும், அதிக குடிகளைக் கொண்டிருப்பதாலும் அது பெரும் சந்தையாக விளங்குகின்றது.

சிங்கள மக்கள் யாழ்ப்பாணக் கோடாச் சுருட்டில் அதிக விருப்பமுடையவர்கள் மாத்தறை, காலி, களுத்துறைப் பகுதி கரையோர மக்கள் மீனவர்கள்; நெடுந்தூரம் கடலில் மீன் பிடிக்கச் செல்வதால், குளிரைப் போக்க அவர்களுக்கு நெடுநேரம் சுவைத்துக் குடிக்கக் கூடிய சுருட்டுத் தேவைப்படுகின்றது; இப் பகுதி மக்களில் பெரும் பகுதியினர் சுருட்டுக் குடிக்கின்றவர்கள். அதனால் இவை நல்ல சுருட்டுச் சந்தைகளாக விளங்குகின்றன.

மேலே, விபரித்த சுருட்டுச் சந்தைகள் பெரிதும் தமிழ் வியாபாரிகளுக்கே சொந்தமானவை யாகவுள்ளன. எவ்வாறெனில், அட்டவணை 1ல் உள்ள சந்தைகள் காணப்படும் இடங்களில் எல்லாம் தமிழர்களின் கடைகளுள்ளன. அக்கடைகள் பல யாழ்ப்பாணக் குடாநாட்டுச் சுருட்டு முதலாளி மார்களுக்கும் சொந்தமானவையாகவுள்ளன. இக் கடைகள் யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்து சுருட்டை வருவித்து விற்று வருகின்றன. இந்நிலை இன்று சிறிது சிறி

(14-ம் பக்கம் பார்க்க)




படம் 1

சுதந்திரன்
SUTANTIRAN

1966 சனவரி மாதம் 6 ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

# ஒரு முட்டுக்கட்டை

அடுத்த சனிக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் தமிழ் மொழி உபயோகச் சட்ட விதிகள் தமிழ் பேசும் இனத்தின் ஒரு சாராருக்குப் பாதகமானவை என்ற கருத்து சில வட்டாரங்களில் நிலவுவதாக ஒரு செய்தி கூறுகிறது. இந்த விதிகள் வட, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு மாறானது என ஒரு சிலர் குதர்க்கவாதம் செய்யத் தொடங்கியுள்ளனர்.

இந்த விபரீதமான கருத்து எத்தகைய பாதகத்தை ஏற்படுத்துமென்பதை அவர்கள் எண்ணிப் பார்க்காதது துரதிர்ஷ்டமாகும்.

முதலில் ஒரு விடயத்தை ஐயப்பாட்டுக்கு இடமின்றி தெட்டத்தெளிவாகக் கூறவிரும்புகின்றோம். அதுதான் வட, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களாக இருந்தாலும் சரி, ஏனைய பிரதேசங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களாக இருந்தாலும் சரி, இந்தச் சட்டவிதிகளால் தமிழ் பேசும் இனத்தின் மொழியுரிமை முற்றாகக் கிடைத்து விடாது என்பது.

அப்படியானால், அந்த விதிகளை ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்கலாம். ஒன்றுமில்லாத இடத்தில் ஓரளவு கிடைத்துள்ளது அதனைப் பெற்றுக் கொண்டு எஞ்சிய உரிமைகளையும் பெறுவதற்காக முயற்சி செய்வதே அறிவுடைமை அதைவிடுத்து, 'கொடுத்தால் எல்லாவற்றையும் ஏககாலத்தில் கொடு! இன்றேல் ஒன்றும் வேண்டாம்' என்று கூறுவது எப்படி இராஜ தந்திரமாக முடியும்?

ஆற்றில் கரைபுரண்டோடும் வெள்ளத்தில் சிக்கிய ஒருவன் தன்னருகில் மிதந்துவரும் கட்டையைப் பற்றி கரையேற முயற்சி செய்வானா? அல்லது கட்டையைக் கைவிட்டு தன்னைக் கரை சேர்ப்பதற்காக 'மோட்டார் எஞ்சின்' பூட்டப்பட்ட படகுவரும்வரை ஆற்றோடு போய்க் கொண்டிருப்பானா? குதர்க்கம் பேசுபவர்கள் இந்த உண்மையைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நகல் சட்டவிதிகள் வட, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரானது என்று கூறுவதும், அந்தக் கண்ணோட்டத்தில் அதனை வியாக்கியானம் செய்வதும் தவறாகும். தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமையை வழங்கும் ஒரு மசோதா தமிழ் பேசும் மக்களுக்கு விரோதமானது என்று கருதுவது விந்தையிலும் விந்தையாகும்.

தமிழ் பேசும் மக்களை பல கூறுகளாகப் பிரித்து பார்ப்பவர்களுக்கு உண்மை புலப்படுவது கடினமாகும் அவர்கள் பெரும் பாலும் குதர்க்க வாதங்களை நம்புகிறவர்களாகவே இருப்பர் யாழ்ப்பாணத் தமிழர், மலைநாட்டுத் தமிழர் என பிளவுபட்ட சமுதாயமாக தமிழ் பேசும் இனத்தைப் பார்க்காமல், ஒன்றுபட்ட சமுதாயமாக ஒரே இனமாக பரந்த கண்ணோட்டத்துடன் நோக்கினால் இந்த மசோதாவை தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஏகோபித்து வரவேற்பார்களென்பதில் ஐயமில்லை. இனத்தைப் பிளவுபடுத்துவதும்-அதற்காகப் பிரசாரம் செய்வதும் எதிரிகளின் வேலை.

தமிழ் மொழி உபயோகச் சட்டவிதிகளை எதிர்த்து நாட்டிலே நாலை முடுக்குகளிலெல்லாம். சூறாவளிப் பிரசாரம் செய்துவரும் எதிர்க் கட்சியினர் பாராளுமன்றத்தில் சட்ட விதிகளைத் தோற்கடிப்பதற்காக பல் வேறு தந்திரோபாயங்களையும் கையாளுகின்றனர். அவற்றில் பிரதானமானது அரசாங்கக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது பல வேறு நிர்ப்பந்தங்களைக் கொண்டு வந்து, அவர்களிற் சிலரையாவது மசோதாவுக்கு எதிராகத் திருப்புவதாகும். அத்துடன் தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்தைச் சிதைத்து அவர்களிடையே பிளவை ஏற்படுத்துவதற்காக சில நபர்களை ஏவிவிட்டிருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது. அந்த நபர்களின் விசமத்தனமான குதர்க்க வாதங்களை நம்பி ஏமாந்தால் தமிழ் பேசும மக்கள் ஒன்றுபட்டு நிற்கவேண்டிய வேளையில், பிளவுபட்டு நிற்கவேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

தமிழ் பேசும் மக்களிடையே சிலர் கோஷ்டிவாதம் பேசி, இந்த மசோதாவை எதிர்க்க முயற்சி செய்வதால் பயனடைபவர்கள் யார் என்பதை அவர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். சிறுபான்மை இனம் உரிமைகள் பெறுவதற்கு முட்டுக் கட்டை போடும் எதிர்க் கட்சியினரே இதனால் நன்மை பெறுபவர்கள் தங்களை அறியாமலே அவர்கள் எதிர்க் கட்சிக்கு உதவுகின்றனர். தங்களை அறியாமலே தமிழ் பேசும் இனத்தின் நலன்களுக்கு விரோதமாக செயலாற்றுகின்றனர்.

தமிழ் பேசும் மக்களைத் தனித் தனி கோஷ்டிகளாகப் பிரித்து உரிமைகளைப் பெறலாமென்பது வீண்கனவு. அத்தகைய பிளவு மனப்பான்மையுடன் தமிழ் பேசும் இனத்தின் பிரச்சினைகளை அணுகுவதும் தவறு. இந்தச் சட்டவிதிகளின் மூலம் மொழியுரிமை பெறக்கூடிய பாதை திறக்கப்பட்டுவிட்டால் அந்தப் பாதையில் தொடர்ந்து முன்னேற வேண்டியது தமிழ் பேசும் மக்களின் கடமையாகும் வேறு பாதை இருந்தாலன்றி அந்தப் பாதையை அடைத்து விட முயற்சி செய்வது அறிவுடைமையாகாது.

தமிழ்மொழி உபயோக மசோதா தமிழ் பிரதேசங்களுக்கு வெளியே வசிக்கும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு மாறானது என்று கருத்து தெரிவிக்கும் சில தமிழர்கள் இதுவரை தமிழ் மொழியுரிமைக்காக எத்தகைய போராட்டமும் நடத்தியவர்

எல்ல. தேசிய அரசாங்கம் நிறுவப்பட்ட பிறகாவது மொழியுரிமைக்காக அரசாங்கத்தில் வாதாடினவர்களுமல்ல. மொழியுரிமையில் அக்கறை கொண்டு, பிரதம மந்திரியிடமோ, ஏனைய மந்திரிகளிடமோ அதுபற்றி வற்புறுத்தி வந்தவர்களுமல்ல. மொழியுரிமைபற்றி காலமெல்லாம் மௌனம் சாதித்துவிட்டு, மொழியுரிமையில் ஒரு சிறு பகுதியையாவது பெறமுயற்சி செய்யும்போது அதற்கு முட்டுக்கட்டை போடக்கூடியதாக கருத்து தெரிவிப்பதை தமிழ்ப்பேசும் மக்கள் நிச்சயம் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

ஆகவே கிடைக்கும் உரிமையைத் தடுக்கக்கூடியதாகவோ, தமிழ் பேசும் இனத்தின் ஐக்கியத்தைச் சிதைக்கக் கூடியதாகவோ, தமிழ்ப்பேசும் மக்களிடையே பொறுப்புள்ளவர்கள் கருத்து வெளியிடாதிருக்க வேண்டியது அவசியமாகும், வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைக்காதிருப்பார்களாக!

'நல்ல காரியத்துக்கு ஆயிரம் தடைகள்' என்பார்கள் அத்தகைய தடைகளைத் தகர்க்க கூடிய வல்லமை தமிழ்ப் பேசும் மக்களிடம் உண்டு என்பதையும் அவர்கள் மறக்க கூடாது.

# மாநாயக்க தேரோவின் வடபகுதி விஜயம்

—o—

# தேசிய ஐக்கியத்தை வலுப்படுத்த சிறந்த முயற்சி

இலங்கைப் பௌத்தர்களின் ஆத்மகத் தலைவரான வணக்கத்துக்குரிய அஸ்கிரிய விபாசி மல்வத்தை மாநாயக்க தேரோ அவர்களை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யுமாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் ஓர் அழைப்புவிடுத்திருக்கிறார். இந்த அழைப்பை மாநாயக்க தேரோ அவர்களும் ஏற்றுள்ளார்களாம்.

மாநாயக்க தேரோ அவர்கள் தமிழ்ப்பகுதிகளுக்குவிஜயம் பேற்கொள்ளவேண்டியது இன்றைய சூழ்நிலையில் மிகவும் அவசியமானதாகும். 1956ம் ஆண்டு சிங்களம் பட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட சூழ்நிலையில் இத்தகைய விஜயம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தால் நாட்டின் ஐக்கியம் பெருமளவில் காப்பாற்றப்பட்டிருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இன்றும் இத்தகைய ஒரு விஜயத்தை மேற்கொள்வதற்குக் காலம் கடந்துவிடவில்லை.

இடதுசாரியினரும், சுதந்திரக்கட்சியினரும் நாட்டில் வகுப்புவாதத்தை விதைத்து வரும் இவ்வேளையில் பௌத்தர்களின் ஆத்மீகத் தலைவரான மாநாயக்க தேரோ அவர்கள் வட இலங்கைக்குச் சென்று அப்பகுதி மக்களின் மனநிலையை தெரிந்து வந்து சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறுவது நிச்சயம் நல்லபயனையே கொடுக்கும்.

## பொய்ப் பிரசாரம்

தமிழ்பேசும் மக்கள் நாட்டைத் துண்டாட விரும்புகிறார்கள் என்றும் இந்தியாவுடன் இணைந்துகொண்டு சிங்கள மக்களுக்கு எதிராகப்போர் புரியப் போகிறார்கள் என்றும் குரோதமான முறையில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலர் சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்திருக்கிறார்கள்- செய்துவருகிறார்கள்.

இத்தகையபிரச்சாரத்தில் சிறிதேனும் உண்மையில்லையென்பதைப் பலதடவைகளில் தமிழரசுத் தலைவர்கள் பத்திரிகைகள் மூலமாகவும், பொதுமேடைகள் மூலமாக வப் விளக்கியுள்ளார்கள். தமிழரசுத் தலைவர்களின் மறுப்பை சிங்கள பொதுமக்கள் குறிப்பாக கிராமப்புற மக்கள் ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. அவர்கள் மத்தியில் ஏனோ இனம் புரியாத ஒரு பயம் தமிழ் பேசும் மக்கள்மீது இருக்கிறது அச்சமைய பய உணர்ச்சி மேலிட்டு வெறுப்பாக மாறி தமிழ்பேசும் மக்கள் தங்கள் விரோதிகள் என்ற ஓர் எண்ணத்தை சிங்களமக்கள் மத்தியில் ஏற்படுத்த ஏதுவாகியுள்ளது.

தமிழ்பேசும் மக்களின் ஒரே அரசியல் கட்சியான தமிழரசுக்கட்சிமீதும் இத்தகைய ஒப்பிதயான ஒரு உணர்ச்சியே இன்றும் சிங்களக் கிராமப்புற மக்கள்பலரிடம் நிலவுகிறது. தமிழரசுக்கட்சி தென்னிந்தியாவில் உள்ள தி. மு. கழகத்துடனும் நாம் தமிழர் இயக்கத்துடனும் சேர்ந்து நாட்டைப் பிரிக்க முயல்கிறது என்பதே இன்றும் அவர்கள் உள்ளத்தில் உள்ள நம்பிக்கையாகும்.

**சுதந்திரன் அரசியல் நிருபர்**

## வடக்கே வருக

இத்தகைய தப்பிதமான எண்ணங்களை நீக்க மாநாயக்க தேரோவின் யாழ்ப்பாண விஜயம் பலவழிகளில் உதவ முடியும். மாநாயக்க தேரோ அவர்கள் அரசியல்வாதியல்ல. அவர் ஆத்மீகத் தலைவர். அவரின் சாசனத்துக்களும், எண்ணங்களும் ஏனைய அரசியல்வாதிகளின் எண்ணங்களைப்போன்று பதவியென்ற சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. அவர் மக்களை ஆன்மீக வழியில் வழிநடத்திச்செல்ல வேண்டிய பொறுப்பை ஏற்றுள்ளவர். பகவான் புத்தரின் தொண்டர் அவர்.

அரசியலை வெறுத்து மக்களுக்காகப் பணியாற்ற துறவறத்தை மேற்கொண்ட பகவான் புத்தரின் தொண்டரான மாநாயக்க தேரோ அவர்களின் பிரச்சாரங்கள் நிச்சயம் மக்களை ஆன்மீக உலகை நோக்கியே அழைத்துச் செல்வனவாக இருக்க முடியும். எனவே அவரின் கருத்துக்களை சிங்களமக்கள் நம்புவதுடன் மதிப்பும் கொடுக்கவே செய்வார்கள்.

மக்களின் மதிப்பிற்குரிய ஆன்மீகத் தலைவரான மாநாயக்க தேரோ அவர்கள் தமிழ் மக்கள் வாழும் இடங்களுக்குச் சென்று தமிழ் மக்களின் மனநிலையை நேரடியாகத் தெரிந்துகொள்வது பலவழிகளில் நாட்டுக்கும், நமக்கும் நலமாகும். தென்னிலங்கையில் உள்ள வகுப்புவாதிகளின் பிரச்சாரம் அவரின் உள்ளத்திற்கூட தமிழ்பேசும் மக்களைபற்றி ஒரு தப்பிதமான எண்ணத்தை உருவாக்கியிருக்கலாம். இத்தகைய எண்ணங்களைக் களைந்தெறிவதற்கு அந்த ஆத்மீகத் தலைவர் வடக்குநோக்கிச் செல்வது மிக அவசியமானதே.

தமிழ் பிரதேசங்கள் பௌத்தர்களுக்கு ஏதோ பகையானபூமியல்ல மாறாக பௌத்தர்களின்புனித இடங்களும் இப் பிரதேசத்தில் உண்டு என்பதைநாம்மறந்துவிட முடியாது எப்படி தென்னிலங்கையில் உள்ள கதிர்காமமும், சிவனொளிபாத மலையும் எங்ஙனம் முக்கியத்துவம்பெற்ற புனித இடங்களாக உள்ளதோ அதேபோன்று, அந்த அளவு முக்கியத்துவத்தைப் பெறாவிட்டாலும் நாகவிகாரையும், செருவிலையும் பௌத்தர்களுக்கு புனித இடங்களே என்பதை யாரும் மறுக்க முடியாது.

## மதத் தொடர்பு

நாகவிகாரை புத்த பெருமானின் திருவடிகள்பெற்ற பூமியென்றும் கூறப்படுகிறது. இத்தகைய சிறப்புள்ள இடங்களைப் பார்க்கவேண்டியதும் மாநாயக்கதேரோ அவர்களின் கடமையே இந்த புனித இடங்களைப் பார்க்கவேண்டியாயினும் மாநாயக்க தேரோ வட—கிழக்கு நோக்கிப் பிரயாணம் மேற்கொள்வது அவசியமாகிறது.

தமிழ் மாநிலங்களுக்கு இப்பெரியார் விஜயம் செய்வதன் மூலம் பல புதிய உண்மைகளைப் பெற முடியும். தமிழ் பேசும் மக்கள் விருந்தோம்பலில் எத்தனை தூரம் சிறந்தவர்கள் என்பதை அவர்கள் அறிந்துகொள்ள முடியும். அதே போன்று அவர்கள் சிறந்த ஆத்மீகவாதிகளாகவும், பிற சமயத்தவர்களையும், பிற சமயங்களையும் கௌரவித்துக் கொள்பவர்கள் என்பதையும் உணர முடியும்.

இந்துக்களும், இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் கத்தோலிக்கர்களும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போன்று தமிழ் மாநிலத்தில் நெருங்கி வாழ்வதை நேரில் கண்டுகொள்ள மாநாயக்க தேரோ அவர்களுக்கு இவ் விஜயம் பலவழிகளிலும் உதவும். இன்று ஆன்மநேய ஒருமைப்பாடு பற்றியும், சர்வ சமயசமத்துவம் பற்றியும் இப்பொழுது தான் பேசப்படுகிறது ஆனால் இத்தகைய பிரச்சாரங்கள் எதுவுமே அற்றநிலையில் பல சமயத்தார்கள் ஒன்றுபட்டு வாழ்வதைப் பார்த்து அவர்களே ஆச்சரியப்படலாம்.

இத்தகைய பரந்த மனப்பான்மை கொண்டவர்களுடன் பௌத்தர்களும் சேர்ந்து சகோதரர்களாக வாழமுடியும் என்பதை மாநாயக்கதேரோ அவர்கள் யாழ்ப்பாண விஜயத்தின் பின் நம்பவே செய்வார். இத்தகைய பரந்தநேச உணர்வு கொண்டவர்களின்

(9-ம் பக்கம் பார்க்க)

# பொ. கட்சியிலிருந்து உடுப்பிட்டிப் பிரதிநிதி வெளியேற்றப்படுவாரா?

## பத்திரிகைகள் கூறுவது என்ன?

"தமிழ் மொழி (விசேட) விதிகள் மசோதாவை இன்று எதிர்க்கும் சுதந்திரக் கட்சியினரில் 46 பிரதிநிதிகள் அன்று 1958ம் ஆண்டு ஆகஸ்ட் 5ந் திகதி காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவினால் கொண்டுவரப்பட்ட இதே தமிழ் மொழி (விசேட) விதிகள் சட்டத்தை முழுக்க முழுக்க ஆதரித்து வாக்களித்தவர்களே" என 2-1-66ல் வெளிவந்த டெயிலி நியூஸ் தலையங்கம் கூறுகிறது. அத்தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மொழிப்பிரச்சினை தீர்க்கப்படும் வரை வேறு எந்தப் பிரச்சினையையும் நாம் தீர்க்க முடியாது. இரு மொழிகள் பேசும் நாட்டில், இந்தப்பிரச்சனையை நீதியின் அடிப்படையில்தான் தீர்க்க முடியும், காலஞ்சென்ற பண்டாரநாயக்கா கூறியதுபோல தீவிரவாதத்தினால் தீர்க்க முடியாது. தமிழ்மொழி (விசேட) சட்டத்தைக் கொண்டுவந்தபோது காலஞ்சென்ற பிரதமர் கூறினார்.

"சிங்களத்தை நாட்டின் ஒரே ஆட்சி மொழியாக்கும் இவ்வேளையில், இந்த நாட்டின் ஒரு பகுதி மக்கள் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்பதை நாம் மறக்கமுடியாது. தமிழுக்கு கட்டாயமாக உரிய இடம் தரப்படவேண்டும்"

இப்படிக்கூறிய திரு. பண்டாரநாயக்காவை தங்கள் வழிகாட்டி எனக் கூறிக்கொள்ளும் சுதந்திரக்கட்சியினர், அதே பண்டாரநாயக்காவினால் ஆக்கப்பட்ட தமிழ் மொழி (விசேட) சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவரும் பணியில் தேசிய அரசு விதிகளைத் தயார் செய்வதை ஏன் எதிர்க்கிறார்கள் என்பது புரியவில்லை.

சுழநாடு, 2-1-66ம் திகதிய தலையங்கத்தில் தமிழ் மொழி உபயோக (விசேஷ) சட்டத்தை அன்று மிகத்தீவிரமாக எதிர்த்த கே. எம். பி ராஜரத்தின, இன்று அதைத் தீவிரமாக ஆதரிப்பதும், அன்று சிங்களச் சட்டத்தையும், தமிழ்மக்களின் உரிமைகளை முழு அளவில் வழங்கவில்லை என தமிழ்மொழி (விசேட) சட்டத்தையும் எதிர்த்து நின்ற இடதுசாரிகள், இன்று மேற்படி சட்டத்தால் சிங்களவர்களின் உரிமைகள் மோசம்போகின்றன எனக் கூப்பாடு போடுவதையும் சுட்டிக்காட்டியுள்ளது. அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும், சந்தர்ப்பவாதத்தை கைவிட்டு நாட்டு மக்கள் நலத்தை முன்னிட்டு சில பிரச்னைகளில் ஒரே கொள்கையைக் கடைப்பிடித்தால், பிரச்சனைகள் சுலபமாகத் தீர்ந்துவிடும் என முடிகிறது தலையங்கம்

சிலோன் டெயிலி மிறர் தனது 4-1-66ம் திகதிய இதழின் ஆசிரியத் தலையங்கத்தில், திரு. ஆர். ஜி. சேனநாயக்காவின் நாம் சிங்களவர் இயக்கத்துக்கு எதிராக புதிதாகத் துவங்கப்பட்டுள்ள, 'நாங்களே சிங்களவர்' இயக்கம், சிங்கள மக்கள், சிறுபான்மையோரின் உரிமைகளை அளிப்பதில் அரசாங்கத்துக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது என்று குறிப்பிடுகிறது. மேலும் டாக்டர் பெரேராவின், அன்றைய பேச்சையும், கொல்வினின் அன்றைய பேச்சையும் நினைவு படுத்தி; அப்படிச் சொன்னவர்கள் இன்று தாங்கள் சொன்னதையே சாப்பிட்டு விட்டார்கள். இது மிகவும் வெட்கக்கேடானது — என்று கூறுகிறது.

இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு தனது 3-1-66ம் திகதி இதழின் 'இலங்கையில் தமிழ்' என்ற தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

'வட' கிழக்குப்பகுதிகளில் தமிழை நிர்வாக மொழியாக்க அரசாங்கம் முன் வந்தது துணிகரமான ஒரு முயற்சி. கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ் மக்களுக்கு முன்னைய அரசாங்கம் இழைத்து வந்த அநீதிகளுக்கு இது ஒன்றே தக்க பரிகாரமாகும். தமிழர்கள் பிரிந்த நின்றாலும், மொழிப் பிரச்னையில் ஒன்று பட்டு நிற்கிறார்கள் வகுப்புத்தவேஷிகளுக்கு சிறிதும் பின்வாங்காது, உறுதியுடன், தமிழ் மொழிச்சட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றித் தீரவேண்டும் தமிழர்களும், சம உரிமையுடன், சிங்கள மக்களுடன் இணைந்து நின்றால் தான், தங்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டென்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

சென்னை இந்து 'இலங்கைச் சிறுபான்மையினருக்கு நீதி' என்ற தனது தலையங்கத்தில் இவ்வளவு காலமும் சொல்லொணா வேதனையும் கஷ்டங்களும் அனுபவித்த தமிழ் மக்களுக்கு தேசிய அரசாங்கத்தின் நடவடிக்கை சிறிது ஆறுதலை அளிக்கும் என்று கூறியுள்ளது.

## தலைவரை இழிவுபடுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாம்

உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரம் அவர்களது அண்மைக் காலப் பேச்சொன்றிற்கு பொன்னம்பலம் கட்சியைச் சேர்ந்த சில பிரமுகர்கள் விளக்கம் கேட்டிருப்பதாக அறிய வருகிறது. அவர் திருப்திகரமான விளக்கம் கொடுக்கத் தவறினால் அவரைப் பொன்னம்பலம் கட்சியிலிருந்து வெளியேற்றிவிடவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களாம்.

கோப்பாய்ப் பிரதிநிதியாக இருந்த திரு. மு. பாலசுந்தரம் அவர்களின் மறைவையொட்டி பாராளுமன்றத்தில் நடைபெற்ற இரங்கற் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் உரை நிகழ்த்துகையில் உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரம், திரு. மு. பாலசுந்தரம், சதி வழக்கு சம்பந்தப்பட்ட மசோதா மீது நடைபெற்ற விவாதத்தின் போது அன்று கூறியதை இன்று பிரிவிக்கவுன்சில் ஏற்றுள்ளது' என்று கூறியதற்காக பொன்னம்பலம் கட்சிப் பிரமுகர்கள் சிலர் விளக்கம் கேட்டிருக்கிறார்களாம்.

திரு. சிவசிதம்பரம் வேண்டுமென்றே இங்ஙனம் கூறியிருப்பதாக அவர்கள் கருதுகிறார்களாம். இதற்கு எழுத்து மூலமான விளக்கம் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் அவரைக் கேட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இதற்கு அவர் கொடுக்கக்கூடிய விளக்கம் திருப்தியானதாக இல்லாதபட்சத்தில் அவர் மீது கண்டனம் தெரிவிக்க வேண்டுமென்றும், விளக்கம் கொடுக்கத் தவறினால் அவரைத் தங்கள் கட்சியிலிருந்து வெளியேற்றிவிட வேண்டுமென்றும் அவர்கள் கருதுகிறார்களாம்.

இந்த விளக்கம் கேட்டிருப்பவர்கள் திரு. பொன்னம்பலத்தின் ஆதரவாளர்கள் என்றும், அவர்களில் பெரும்பாலும் சட்டத்துறையைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவருகிறது. இதறகு விளக்கம் கொடுக்கக் கூடாது என்று திரு. சிவசிதம்பரத்தைச் சேர்ந்தவர்கள் கூறியுள்ளார்களாம்.

### மாநாயக்க...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படை உரிமைகளையே சிங்கள வகுப்புவாத அரசியல் வாதிகள் அபகரித்து வைத்திருப்பது தவறு என்பதை அவர்களது யாழ்ப்பாண விஜயத்தின் பின்னர் எடுத்துக்கூறவே' செய்வார். இது நாட்டின் ஐக்கியத்தை மீண்டும் ஒன்றுபடுத்த உதவும்.

இவற்றையெல்லாம் இந்த ஆத்மீகத் தலைவர் எண்ணிப் பார்த்து தமது யாழ்ப்பாண விஜயத்தை உடன் மேற்கொள்வது அவசியம். இந்த நெருக்கடியான சமயத்தில் அந்த ஆத்மீகத் தலைவருக்கு அழைப்பு விடுத்த திரு. திருச்செல்வம் அவர்களையும், அவரது திறமையையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

நாட்டின் ஐக்கியத்தைப் பலப்படுத்தி, நாமும் உரிமை பெற்று சகோதரர்களாக வாழவண, அழுனுகம விபாசி மல்வத்த மாநாயக்கதேரோவின் யாழ்ப்பாண விஜயம் நிச்சயம் வழி அமைக்கும் என்பதை நாம் மீண்டும் வலியுறுத்திக் கூறவிரும்புகிறோம்'

---

### பொ. கட்சிக்குள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யைத் தீர்த்துவைக்க முயல்வதாகக் கூறியது துவாரகர்கள் அறிந்ததே. இப்பொழுது உடுப்பிட்டிப் பிரதிநிதியின் திட்டத்தை ஏற்றுக்கொள்ள யாழ்ப்பாணப் பிரதிநிதி மறுத்துவிட்டாராம். இதனால் ஏற்கனவே இவர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள பனிப்போர் மேலும் பிளவுபடக் கூடிய நிலைக்கு வளர்ந்துவிட்டதாக கூறப்படுகிறது.

### முன்னணியில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாக உள்ள இடங்களில் குறிப்பாக கொழும்பு மாநகர எல்லைக்குள் எத்தகைய ஆர்ப்பாட்ட நடவடிக்கைக்கும் இடமளிக்கப்பட மாட்டாதாம்.

பாராளுமன்றத்தில் அன்றைய தினம் பொதுமக்கள் கலரி மூடப்படலாம் என்றும் பாராளுமன்றத்தைச் சுற்றி முட்கம்பித் தடைகள் அமைக்கப்படலாம் என்றும் நம்பமுடிகிறது.

## பௌத்தர்களுக்கு நட்டமாம்

## புதிய விடுமுறையால்

பட்ச (போய) நாட்களைப் பொதுவிடுமுறையாக்கியதன் மூலம் பௌத்தர்கள் அல்லாதாரே அதிக சலுகைகளைப் பெற்றிருப்பதாக எதிர்க்கட்சியினர் இப்பொழுது ஒரு புதுவகைப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஞாயிறு தினங்களை வேலை நாட்களாக்கி பட்ச நாட்களை விடுமுறை நாட்களாக்கியதன் மூலம் பௌத்தர்கள் அதிகப்படியான விடுமுறைகளை அனுபவிக்க முடியாதவர்களாகி விட்டார்கள் என்றும் பௌத்தர்கள் அல்லாதார் அதிகப்படியான விடுமுறைகளை அனுபவிக்கிறார்கள் என்றும் எதிர்க்கட்சியினர் தங்கள் பிரசாரக் கூட்டங்களில் கூறிவருகிறார்கள்.

பௌத்தர்கள் அல்லாதாருக்கு அவர்களின் சமயக் கடமைகளைச் செய்வதற்கு வாரத்தில் இரண்டு மணி நேர விடுமுறை கொடுப்பதன் மூலம் மாதத்தில் ஒரு முழு வேலை நாளை ஓய்வாகப் பெறுகிறார்கள். இது வேண்டுமென்றே பௌத்தர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்றும், பிறசமயத்தவர்களுக்குச் செய்யப்பட்ட சலுகை என்றும் எதிர்கட்சியினர் விளக்கி வருகிறார்கள் என்று தெரிகிறது.

உங்கள் மனதிலுள்ள
கவலைகள் — காரணங்கள்
மற்றும்
ஆகவேண்டிய காரியங்களை
அறிந்துகொள்ள ஆசையா?
அப்படியானால்
உங்களது முழு விலாசம் எழுதி முத்திரை ஒட்டப் பெற்ற ஒரு கடித உறையை அனுப்பி எமது இலவசப் பிரசுரத்தை இன்றே தபாலில் பெறுங்கள்!
பி. எம். திசாநாயக்க,
—மகா மாந்திரீக கலாநிதி—
அருத எண்ணெய் தொழிலகம்
கம்பளை.
போன் : 4?4.

புதுவருட வாழ்த்துக்கள்
மில்க் வைற் சோப்
பாவிப்பாளர்களுக்கும்,
விற்பனையாளர்களுக்கும்,
ஆதரவாளர்களுக்கும்
எமது உள்ளம் கனிந்த
புதுவருட வாழ்த்துக்கள்
உரித்தாகுக.
மில்க் வைற் சோப் தொழிற்சாலை,
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 7233

கருப்பையாவின் அறியாமையையும், இயலாமையையும் பயன்படுத்தி பணம் சேர்க்கும் வட்டிக் கடை முதலாளி—

பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களில் ஒருவனைச் செய்வதறியாது நிற்கும் கருப்பையா—

—மாற வேண்டிய சமூக வமைப்பின் சித்திரிப்பு.

# வட்டிக்கடன்

வரையண்ணல்

அந்த ஸ்தோப்பில் எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். கருப்பையா, ஏதோ எண்ணிய வண்ணம் பெருமூச்சு விட்டான். உள்ளத்தின் அடித்தளத்தினின்றும் ஒரு விசும்பல்! நெஞ்சின் சுமையைத் தீர்த்துக்கொள்ள, அந்த எவருக்கும் கேட்காத, எண்ண விசும்பல் அவனுக்குத் துணை செய்யவில்லை.

ஸ்தோப்பின் ஒரு மூலையில் பழம் போத்தலில் செய்யப்பட்ட விளக்கொன்று எரிந்துகொண்டிருந்தது. ஏர்கண்டிசன் அறையில் இருளைப் பகலாக்கும் மின் பொறி விளக்கைப் போல் அல்ல; மின்மினி போல், புகை பிடித்துப் போயிருந்த பத்தடிக் காம்பராவில் உள்ள ஸ்தோப்பில் எரிந்துகொண்டிருந்தது. அதனை சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தான். எரியும் அந்த விளக்கை வட்டமிட்டு, அவ்விளக்கிலேயே விட்டில் எரிந்து மடிந்து போனதையும் பார்த்தான் கருப்பையா. மீண்டும் ஒரு பெருமூச்சு!

'வெளக்கோட விட்டில் வெளையாடுறமாதிரி என்னோட வெளையாடத் தொடங்கி இருக்கே! விட்டில், வெளக்கோட வெளையாடி, அதே வெளக்கிலயே மடிஞ்சி போயிடும் தெரியுமா?'

என்று வட்டிக்கடைமுதலாளி கூறுவது போன்று தோன்றியது அவனுக்கு. 'ம...' என்ற அனத்தலோடு மீண்டும் ஒரு பெருமூச்சு! உள்ளமே பெரும் போராட்டக் களமாகி விட்டது அவனுக்கு. மறுபுறம் புரண்டு படுத்தான்.

வாங்கியது ஐம்பது ரூபாய் தான். ஆனால், நானூற்றி ஐம்பது ரூபாவாக இன்று அது வளர்ந்திருக்கின்றது. அதை நினைக்கையில் அவனது நெஞ்சத்தில் தீப்பற்றி எரிந்தது. கடன் தொல்லை எந்தக் காலத்திலும் என்னை விடுதலை செய்யாதோ என்று எண்ணினான். இப்போதே எழுந்தோடி ஒரு முழக் கயிற்றில் தொங்கி விடலாமா என்று எண்ணியவன் நஞ்சானும் குஞ்சானுமாகத் தன்னையே நம்பித் தன் காலடியில் சுற்றித் திரிகின்ற குழந்தைகளை நினைந்தவுடன் 'இப்படியும் ஓரெண்ணமா? என்று தன்னைத் தானே நொந்து கொண்டான்.

'எத்தனை மாசமா நீ ஏச்சுக்கிட்டு வர்ரே! ஒரு மாசமாவது ஒழுங்கா காசு குடுத்திருக்கிறியா? நாநூத்தி அம்பதுன்னதும் 'ஆ'ன்னு வாயப் பொலக்கிற. இன்னும் இரண்டு நாளைக்குள்ள பணத்தைக் கொண்டாந்து குடுத்துடணும். இல்லேன்னு கோட்வரையும் இழுத்து விட்டுடுவேன்."

மீண்டும் மீண்டும் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது வட்டிக்கடை முதலாளியின் இந்தப் பயமுறுத்தல். கோடு, என்று நினைத்தவுடன் உடம்பெல்லாம் நடுங்கியது; உடம்பெல்லாம் வியர்த்துக்கொட்டியது. உடலை மூடி இருந்த பழங் கம்பளியால் துடைத்துவிட்டுக் கொண்டான். உடலில் கண்ட வெடவெடப்பு இன்னும் நிற்கவில்லை.

மேல் கணக்குக் கந்தசாமியை நெடு நாட்களாகக் கருப்பையாவுக்குத் தெரியும். நாலு மாதத்துக்கு முன் கோட்டுக்குச் சென்று, இரண்டு மாதம் சிறைத் தண்டனை போட்டு விட்டார்கள், பெண்டு பிள்ளைகளை விட்டு இரண்டு மாதச் சிறையில் இருந்துவிட்டு வந்தான் கந்தசாமி! மறியல் என்று நினைத்தும் நஞ்சானும் குஞ்சானுமாக அவன் காலடியில் சுற்றித் திரியும் பிள்ளைகளை நினைந்த அவனுக்கு மீண்டும் ஒரு முறை உடல் எல்லாம் குளிர்ந்தது போல் வியர்வையால் நனைந்தது. எழுந்து உட்கார்ந்துகொண்டு வியர்வையால் நனைந்த உடலைத் துடைத்துக்கொண்டான். மீண்டும் அதே பெருமூச்சு! படுத்துக் கண்களை இறுக மூடிக்கொண்டான். கண்ணை மூடிக்கொண்டால் தூங்கிவிடலாம்—துன்பம் எல்லாம் மறந்துவிடலாம் என்ற ஒரு நினைப்பு. இந்தப் பொல்லாத மனம் அவனை விட்டு வைக்கவில்லை, பலவாறான எண்ணங்களைக் கிளறிவிட்டு அவனது நிம்மதியைக் குலைத்துக்கொண்டிருந்தது.

அவனுக்கு விவரம் தெரிந்த வரைக்கும் எவரிடமும் வம்பு தும்புக்குப் போனது கிடையாது. தானுண்டுதன்வேலை புண்டு என எண்ணி பேசாது இருந்து விடுவான்! அவன் வாழும் தோட்டத் துரையிடம் கூட ஏதாவது வழக்கு; விசாரணை என்றெல்லாம் போனது கிடையாது. தோட்டத்தில் எல்லோருக்கும் நல்லவனாக நடந்துகொண்டு சீரான வாழ்வு நடத்தி வந்தவன் தான் அவன். அந்தத் தோட்டத்திலே, போலீஸ்; கோடு என்று எத்தனையோ பேர் போவார்கள்—வம்பளந்து கொள்வார்கள்! கருப்பையா போலீஸ் படியையே இன்னும் மிதித்தது கிடையாது. தோட்டத்துப்பள்ளிக் கூடத்தில் படிக்கும்போது, அவனது குரு போதித்த போதனையை வேதவாக்காக நினைத்து இன்றுவரை நல்லவனாக நடந்துவிட்டவன் அவன்!

வழக்காவது, மண்ணாங்கட்டியாவது! அவன் வழக்குப் போடும் வரை நாம ஏனய்யா காத்துக் கொண்டிருக்க வேண்டும்? அவனுக்கு முன்னே நீ வழக்குப் போட ஏற்பாடு செஞ்சிக்கோ!'

என்று, ஒவ்வாத்துக் கங்காணி கூறியதும் அவன் நினைவுக்கு வந்தது இப்போது அவன் மனதில் புதுத் தெம்பு பிறந்தது. வட்டிக் கடை முதலாளிக்கு முன் தான் எழுத்துத் தாக்கல் செய்துவிட வேண்டும் என்னும் நினைப்பில் மூழ்கிய அவனுக்கு, வழக்கு எப்படித் தாக்கல் செய்வதென்று புரியவில்லை. அதை ஆராய்வதற்குள் மனம் வேறு திக்கில் திரும்பியது.

'இக்கட்டான நிலையில் பணம் கொடுத்து உதவியவன். நன்றி கெட்டத்தனமாக அவனை வஞ்சிக்க எண்ணலாமா?' என ஒரு கணம் எண்ணினான். மாதா மாதம் வட்டியை ஒழுங்காகக் கட்டிக் கொண்டு வந்திருந்தால் இந்தத் தொந்தரவெல்லாம் வந்திருக்காதே! இதுவரையில் கட்டாமல் ஏமாற்றிக்கொண்டு வந்தது தான் தொல்லையாய்ப் போச்சு! நாமும் அவன் மீது வழக்குப் போட்டு என்ன செய்வது? என்று எண்ணியவன் மீண்டும் நிம்மதி குலைந்தவனைப் புரண்டு கொண்டிருந்தான்.

பொன்னி பிழைப்பது பெரும்பாடாக இருந்தது. அந்த இக்கட்டான நேரத்தில் அவன் பணம் கொடுத்து உதவினான். பொன்னியைப் பிழைச்சு வைக்க முடியாமல் தடுமாறிய நிலையில், இயன்ற வரை பாடுபட்டுக் காப்பாற்ற முயன்ற முயற்சி பயனற்றுப் போனாலும், அவன் செய்த உதவியை மறந்து விட இயலாது அல்லவா?

வீட்டிலிருந்து, இரண்டு மைல் தொலைவிலுள்ள அந்தத் தோட்டத்துக்குத் தொங்கலான மலைக்கு கருப்பையா வேலை செய்யச் சென்றுவிட்டான். அவன் பிரட்டுக்குச் சென்று வந்து, வேலைக்குப் புறப்படும் முன்னரே கூடையை எடுத்து மாட்டிக்கொண்டு வேலைக்குச் சென்று விட்டாள் பொன்னி. வேலைக்குச் சென்றவள் இரண்டு மூன்று தேயிலை கூட எடுத்திருக்க மாட்டாள்; நெஞ்சை அடைக்கிறது எனக் கூறி பக்கத்து நிரைக்காரியிடம் தொண்டையடைக்கக் கூறிவிட்டு, தேயிலை மரத்தின் அடியில் படுத்துக் கொண்டாள்! அந்த மலையே அமர்களப்பட்டுப் போய்விட்டது. நாலைந்து பேர்கள் பொன்னியை விட்டில் கொண்டு வந்து சேர்த்தார்கள். பற்கள் இறுகக் கட்டிக் கொண்டு வாய் திறக்க முடியாமல் இருந்த பொன்னிக்கு என்னதான் நோய் என்று அந்த அப்பாவிகளுக்குத் தெரியாமல் போய்விட்டது. ரோதை முனி'' அடித்து விட்டதாகப் பேசிக்கொண்டார்கள். சாதகமான காரணங்களையும் அவர்களே உருவாக்கிக் கொண்டார்கள்!

'வீட்டுக்குத் தூரமா இருக்கா போல இருக்கு. ஒதுங்கிக் கிதுங்கி அந்த முனியாண்டிக்கு அடக்கமா நடந்து கொள்ள வேண்டாமா?' எனக் கூடி நின்று பொன்னியைப் பார்த்துக் கொண்டிருந்த பெண்களில் ஒருத்தி பக்திப் பரவசப்பட்டு கூறுவது போல் எந்தக் காரணத்திலோ வந்த நோயை எதிலோ ஒன்றில் சாட்டிக் கூறினாள்.



கருப்பையாவுக்கு எப்படியோ விஷயம் கிட்டி விட்டது உடல் பதறித் தலை தெறிக்க ஓடி வந்தான். பொன்னியைச் சுற்றிக் கூட்டமாய் பெருகி நின்றவர்களை விலக்கிக்கொண்டு பிணம் போல செயலற்றுக் கிடந்த பொன்னியின் மீது மார் என்று விழுந்து சிறுபிள்ளையைப் போல் கதறினான்.

பாவம்! உலகமறியாதவன். அவன் அன்பு செய்யப் பொன்னி ஒருத்தி தான். அவள் அன்பு ஒன்று தான் அவனுக்கு வாழ்வில் எல்லாம். அந்த அன்பிற்குரியவளின் உடலம் செயலற்றுக் கிடந்ததைக் கண்டதும் அவன் நெஞ்சம் துடியாய்த் துடித்தது. அவனது துயர் கண்டு மனம் உருகிய கருணையுள்ளம் படைத்தவர்கள் தான் அங்கே கூடி நின்றவர்கள் என்றாலும் ஆறுதல் கூற அந்த அடுத்த வீட்டு 'ஆயா' ஒருத்திக்கே துணிவு பிறந்தது போலும்.

அந்தத் தோட்டத்தில் அவன் மீது இரக்கமும பரிவும் காட்டுபவர்களில் அந்த ஆயாவே முதன்மையானவள். எப்படியோ விஷயம் அறிந்து பார்த்துப்போக வந்தாள். கருப்பையா அந்த ஒருத்தியின் மீது கொண்ட அன்பால் துடித்துக் கதறிய போது அந்தக் கிழவியின் மென்மனமும் துடித்துப் போனது.

'தம்பி! அந்த 'ரோத முனியன்' குறை தான் இது. சுத்தமா அவன் கோயில் ஓரம் நடந்து இட்டாத்தான.........! அவன் இருக்கிற எடத்துல பயம் பத்திரமா நடத்துக்கணும். இருந்தாலும் அவன் மன்னிப்பு குடுத்துடுவான். அவன் கண்ணெடுத்தும் பாத்தாக்க எல்லாம் தீந்துபோகுட. எதுக்கும் ஒரு மண்டு வச்சிப் பாரு' என்று கூறிவிட்டுச் சென்றாள் அந்த ஆயா.

அவனுக்கு அது தான் சரியானதென்று பட்டது 'ரோதை முனிக்கு, ஒரு மண்டு வச்சிப் பாத்து. செய்யிறதைச் செஞ்சிட்டா சுகமாய் பூகும்' என்று அந்தப் பேதை நெஞ்சம் எண்ணியது; இந்தப் பாழும் சமுதாயத்தின் கண்மூடித் தனம் தான் அனைத்துக்கும் காரணம். மேல் கணக்குக் கந்தசாமியின் உதவியோடு அங்கிருந்தே பூசாரி ஒருவனையும் கூட்டி வந்து ஒருமண்டு வைத்துப் பார்த்தான். வல்லிசாய் நூறு ரூபாய் செலவாகிப் போய்விட்டது. அந்த நூறு ரூபாவும் பூசாரிக்கே தான் செலவானது என்பதை அந்தப் புனித நெஞ்சம்—கபடற்ற நெஞ்சம் ஏனோ உணரவிலலை, பொன்னியின் நகை நட்டுக்கள் எல்லாம் அடகில் முன்பே மூழ்கிவிட்டன. எஞ்சிய ஒன்றிரண்டை மீட்கலாம் என்று சேர்த்து வைத்த பணம் ஒரு நொடியில் கரைந்தோடிவட்டது. பொன்னி படுக்கை விட்டு எழும்பவிலலை. கவலைக்கிடமாகி விட்டது நிலைமை. கவலைப்படுவதை விட—கண்ணீர் வடிப்பதைவிட—செய்வதறியாதவனாயினன் அவன்.

அன்றுதான் தோட்டத்து டிஸ்பென்ஸரிடம் காட்டினான். டிஸ்பென்ஸர் பொன்னியைப் பார்த்ததும் உதட்டைப் பிதுக்கினார். கந்தசாமி அவரிடம் ரெண்டு வாங்கிக்கட்டிக் கொண்டான். 'இனியும் வீட்டில் போட்டு வைத்திருக்க வேண்டாம். பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு போய் விடும்' என்று, டிஸ்பென்ஸர் துண்டு ஒன்று எழுதிக் கொடுத்து விட்டுச் சென்றான். அவன் விழி பிதுங்க மலைத்துப் போய் நின்றான். 'பெரியாஸ்பத்திரிக்கா?.........' அவனது குலை நடுங்கியது.

(12-ம் பக்கம் பார்க்க)

# தமிழுரிமை பேண தனியியக்கம் கண்ட முதல்வர்

## தமிழினம் உள்ளளவும் அண்ணல் அருணாசலத்தின் பணி நிலைத்து வாழும்

ஈழ மாதா ஈன்றெடுத்த கல்வி மான்களில் சிறந்து விளங்குபவர் சேர். பொன். அருணாசலம் அவர்கள். அன்னிய ஆட்சியை எதிர்த்துக் குரல் எழுப்பியவர்களில், அவர் மூத்தவரும் கூட. அதே பொழுதில் பெரும்பான்மை இனத்தவர்கள் தமிழர்களை அடக்கியாள திட்டங்கள் வகுப்பதையிட்டு தனியியக்கம் கண்ட முதல்வரும் அவரே. கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி., தமிழ்த் தென்றல் திரு. வி. க. போன்று ஈழத்திலும் முதல் முதலாக தொழிற் சங்கம் அமைக்கும் பணியிலும் அண்ணல் அருணாசலம் அவர்கள் உழைத்துள்ளார்கள். அவரின் தொழிற் சங்கப் பணி பற்றி பிரித்தானிய மக்களவையிலேயே பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மொழிவழித் தொழிற் சங்கத்தினர் இவரைத் தங்களின் முன்னோடியாகக் கொள்ளல் ஏற்புடைத்ததாகும். இத்தகைய பெருந்தகையின் நினைவுநாளையொட்டி (9-1-66) இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

ஈழத்து அரசியல் வானில் இரு விடிவெள்ளிகள் எனவிளங்கி வியப்புறு பணியாற்றியவர்கள் இரு தமிழ்ப் பெரியார்கள் முன்னவர் சேர். பொன். இராமநாதன் பின்னவர் சேர். பொன். அருணாசலம். மூத்தவராகிய இராமநாதன் உணர்ச்சியூட்டும் தன் பேச்சுக்களால் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்து தம் வழிப்படுத்தினர். இளையவராகிய அருணாசலம் அரும் பெரும் அரசியற் கருத்துக்களையும் மெய்ப்பொருட் கருத்துக்களையும் மக்கள் மனதில் ஆழப் பதித்து சிந்தனையைத் தூண்டும் முறையில் சிறப்புரைகள் நிகழ்த்தினர்.

### அருணாசலத்தின் நாட்டுப்பணி

அருணாசலம் அவர்களின் பிறப்பு, வளர்ப்பு, படிப்பு நாட்டுப் பற்று, பணி முதலியவற்றை இந்நாட்டு மக்கள் நன்கறிவர். ஆனால் அவர் தமிழினத்தின் நலம் பொருட்டு அரசியற் துறைகளிலும், மொழித் துறைகளிலும், தொழிற் துறைகளிலும் மற்றும் இன்னோரன்ன துறைகளிலும் ஆற்றிய அரும் பணிகளை தமிழ் மக்கள் பலர் அறியார். இவ்விதம் இவர்கள் அறியாதிருப்பதிற்கு அரசாங்கத்தின் சூழ்ச்சி நடவடிக்கைகளும் பல செய்தி இதழ்களின் இருட்டடிப்புகளுமே காரணங்களாகும். சிங்களத் தலைவர்களின்

### நம்பிக்கைத் துரோகம்

ஈழத்தாய் ஆங்கில ஆட்சியில் அடிமையுற்று அல்லல் உற்றதை உணர்ந்த அருணாசலம் அவர்கள் சிங்களவர் தமிழர் என்ற இன வேற்றுமைகளை பாராட்டாது இருவருக்கும் பொது எதிரியாய் விளங்கிய ஆங்கிலேயரின் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்குடன் 1919ம் ஆண்டில் இலங்கைத் தேசியக் காங்கிரசை நிலைநாட்டி அன்று விளங்கிய அரசியற் தலைவர்களுடன் ஒன்றுகூடி ஓயாது சோராது உழைத்தார். ஆனால் காலப் போக்கில் சிங்களத் தலைவர்கள் உள்ளத்தில் ஒழிந்து கிடந்த இனவெறி தலைகாட்டத் தொடங்கியது. தமிழர்களைப் படிப்படியாக நசுக்கி ஆட்சியினை முற்றும் தாம் கவர எண்ணினர்கள்.

### தமிழ் அவையின் தோற்றம்

இதை நன்குணர்ந்த நம் அருணாசலம் அவர்கள் உதைக்க உதைக்க உதை வாங்கி பல்இழித்து பந்தம் பிடிக்கும் அரசியல் வாதிகள் போல் அல்லாது தன்மான உணர்ச்சி உந்த 'இலங்கைத் தமிழர் அவையினை 1923ல் தோற்றுவித்தார். இவ் அவையின் இரண்டாவது பொதுக் கூட்டத்தில் உள்ளத்தை உருக்கி சிந்தனையைக் கிளறும் முறையில், தான் இத்தமிழர் அவையினை அமைத்தற்குரிய அடிப்படைக் காரணங்களை அழகுறக் கூறினர். இச்சொற்பொழிவு ஈழத்தமிழர் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

### அதில் நிகழ்த்திய அறிவுரை

அச்சொற்பொழிவின் ஓர் இடத்தில் அவர் எம்மவருட் சிலர் உலக ஒற்றுமை அல்லது விரிந்த மனப்பான்மை என்ற பேரில் தமிழரின் தனித்தன்மையை இழக்கச் செய்து காயுமல்ல கனியுமல்ல இலையும் அல்ல பூவும் அல்ல என்ற சாபபார் நிலைக்கு நம் தமிழ் இனத்தைக் கொண்டு வர முயல்கின்றனர் என்று கூறினர். அருணாசலப் பெருந்தகை தன் பேச்சின் மற்றும் ஓர் பகுதியில் தேசியம் என்ற போர்வையில் ஒரு நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்களின் தனிச்சிறப்பியல்புகளை அந்நாட்டுப் பெரும்பான்மையினம் அடக்கி ஒடுக்கி தன் இனத்தின் பண்பாட்டையும் மொழியையும் வலிந்து புகுத்துவதையான் முற்ருக எதிர்க்கின்றேன் என்று கூறியுள்ளார்.

அருணாசலம் அவர்கள் தேசிய காங்கிரசை விட்டு விலகி இலங்கைத் தமிழர் அவையினை நிலைநிறுத்தி அவர் ஆற்றிய இச்சொற்பெருக்கே மொழி, பண்பாடு, நாகரிகம் முதலியவற்றல் மாறுபட்டிருக்கும் சிங்கள மக்களுடன் செந்தமிழர் ஒன்றுபட்டு ஒற்றை ஆட்சியின் கீழ் வாழ்வது உகந்தது அல்ல என்பதை அன்றே நன்கு உணர்ந்தார் என்பது புலப்படும்.

### தொழிற் சங்க இயக்கம்

தமிழ்ப் பெருங்குடி மக்களின் ஒரு பகுதியினரான மலைநாட்டுத் தமிழரின் நலத்தின் மீது அருணாசலம் அவர்கள் பெருங்கவனம் செலுத்தினர்கள். அவர்கள் அன்றுட வாழ்க்கைக்குப் படும் திண்டாட்டத்தை நீக்க அவர் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியது. 1919ம் ஆண்டில் செப்டெம்பர் 24ம் நாள் அவர் வெளியிட்ட கருத்துக்களே அவரின் உள்ளக்கிடக்கையை தெள்ளிது புலப்படுத்துகின்றது. 'தோட்டத் தொழிலாளருக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும். சட்ட சபைக்கு தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் உரிமை அவர்களுக்கு அளித்தல் வேண்டும் அப்போதுதான் நம் நாட்டின் பொருளாதாரத்தை பெருக்கி நம்நாட்டிற்கு உயிர்நாடியாய் விளங்கும் இத்தொழிலாளர் தமக்குரிய மனித உரிமைகளைப் பெற்றவர்களாவர்கள், என்று அழுத்தம் திருத்தமாக அறைந்தார். ஆனால் கடந்தகால அரசாங்கங்களின் அடாத செயல்களினால் இத்தமிழ் பெருங்குடி மக்கள் அடிப்படை மனித உரிமைகளாகியவாக்குரிமையையும், குடியுரிமையையும் இழந்து இன்னல் உறுகின்றனர். அண்ணல் அருணாசலம் அவர்கள் வழிவந்த நம் ஈழத் தமிழகத்தின் தந்தையாம் செல்வநாயகம் அவர்கள்

**'ஈழவேந்தன்'**

மலைநாட்டு நற்றமிழர் நலம் கருதி அன்றுதொட்டு இன்று வரை நிலையான கொள்கையோடு பணியாற்றி வருவது பாராட்டி மகிழ்தற்குரிய செயலாகும்.

### பல்கலைக்கழக இயக்கம்

அண்மையில் தமிழ் அறிஞர்களால் தமிழ் பேசும் இனத்தின் பண்பாடும் கலையும் பொருளியல் வாழ்வும் அழியாது காப்பதற்காக தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தைத் தோற்றுவித்துள்ளார்கள். இதையிட்டு எல்லோரும் மகிழ்வுறுகின்றனர் எனினும் இவ்வியக்கம் தொடர்ந்து இயங்கி வெற்றி பெறுமா, அரசாங்கத்தின் ஆதரவு நமக்குண்டா உலக அரங்கில் இதற்கு மதிப்பு ஏற்படுமா என்ற கேள்விகளை எழுப்பி ஏங்குகின்றனர்.

இது தேவையற்ற வேண்டப்படாத தோல்வி மனப்பான்மை என்பதை சேர். பொன். அருணாசலம் இலங்கைக்கு ஓர் பல்கலைக்கழகம் வேண்டுமென வலியுறுத்தி எழுதிய கட்டுரை சான்று பகரும். ஈழம் விடுதலைபெற ஏறக்குறைய 42 ஆண்டுகளுக்கு முன்பே அதாவது 1906ம் ஆண்டிலேயே ஈழத்திற்கு ஓர் பல்கலைக்கழகம் வேண்டுமென தக்க சான்றுகளுடன்வாதாடியிருக்க முடியுமெனின் தமிழ்ப் பல்கலைக்கழக வளர்ச்சியையோ வாழ்வையோயிட்டு ஏன் கவலை கொள்ளவேண்டும்.

அருணாசலம் அவர்கள் இன்னுமோர் இடத்தில் கூறியதுபோல் ஆக்ஸ்போட் பல்கலைக்கழகமும் கேம்பிரிச் பல்கலைக்கழகமும் புகழோடும் பெரும் மதிப்போடும் விளங்கியபோதே 1831ல் டேர்பன் பல்கலைக்கழகம் புதுப்பிக்கப்பட்டது. அத்துடன் 1836ல் இலண்டன் பல்கலைக்கழகமும் தோற்றுவிக்கப்பட்டது. ஆதலால் இலங்கைப் பல்கலைக்கழகம் அளிக்கும் பட்டத்திற்கு மதிப்பு இருக்காது என்று கருதுவது அறிவுடைமையாகாது என்றார். அன்னாரின் அதே கருத்தை இக்கால எம் சூழ்நிலைக்கேற்க சிறிது மாற்றி பேராதனைப் பல்கலைக் கழகம் பெரும் மதிப்போடு அரசாங்க ஆதரவோடு இயங்குவதால் எமது தமிழ்ப் பல்கலைக்கழகம் அதோடு போட்டியிட முடியாது என்று அஞ்சுதல் ஏற்கத்தக்க ஏற்புடைய கருத்தல்ல.

மற்றும் உலகில் எந்த ஒரு பல்கலைக்கழகமும் எடுத்த எடுப்பில் உயர்நிலை அடைந்ததுமில்லை—உலக அரங்கில் கவனத்தைக் கவர்ந்ததுமில்லை. ஆதலால் வீண் பீதியை நீக்கி எமது இனத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பல்கலைக்கழகத்தை தோற்றுவிப்பதில் விறுவிறுப்பாகப் பணியாற்றுவோமாக. இறுதியில் வெற்றி உறுதி.

### செய்தி இதழ் ஏன் வேண்டும்?

முடிவாக அருணாசலம் அவர்கள் செந்தமிழரின் வாழ்வு செம்மையுற செய்தி இதழ்களின் பணி எவ்விதம் அமைய வேண்டும் என்று கருதிய கருத்தையும் இங்கு கூறுதல் பொருத்தமுடைத்து. இன்று தமிழர்கள் நிலையைப் பற்றி செய்திகள் செய்தி இதழ்களில் வெளிவந்தாலும் அவை பெரும்பாலும் உண்மைக்கு புறம்பானவையாகவே விளங்குகின்றன. இதையெல்லாம் அன்றே நன்குணர்ந்த அருணாசலம் அவர்கள் தமிழரின் நலத்தைப் பேணும் நாளாந்த செய்தி இதழை வெளியிட பெருமுயற்சி எடுத்தார். ஆனால் இந்த உயர் எண்ணங்களை நிறைவேற்று முன்பே காலன் அவரை கவர்ந்து சென்று விட்டான்.

### இன்றைய அரசியல் நம்மை எங்கே இழுக்கின்றது

சுருங்கக் கூறின் அரசியல் சமூகம் சட்டம் கல்வி, பண்பாடு தொழிலாளர் இயக்கம் ஆகிய எண்ணரிய துறைகளில் ஈழவள நாட்டிற்கு வழி காட்டியாய் விளங்கியவர் அருணாசலம் அவர்கள்.

(14-ம் பக்கம் பார்க்க)

## 'டிங்கு' சுரத்திற்கு மருந்து என்ன?

### உங்கள் நோய்

பொ. குலசேகரம்,
ஆவரங்கால்.

கே: எனது உடம்பு வரவர மெலிந்து வருகின்றது. இழுப்பு வியாதியும் இருக்கின்றது. தயவு செய்து வழி கூறுவீர்களா?

ப: உங்களுக்கு சுவாச ரோகம் (ASTHMA) ஏற்பட்டிருப்பதாக அறிகின்றேன். தகுந்த வைத்தியரிடம் நேரடியாகச் சென்று சிகிச்சை பெறல் நன்று.

க. ஏகாம்பரம்,
மட்டக்களப்பு.

கே: எனது வயது 55. 1928ம் ஆண்டிலிருந்து சுவாச அடைப்பும் தொண்டைக்குள் எப்போதும் கரகரப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ப: சிறப் வசகா எனும் பாணி மருந்தை அளவறிந்து பாவித்துப் பார்க்கவும். அத்துடன் மரக்கறி சூப் வகைகள் பாவிக்கவும்.

ய. வியாவுதின்,
தெல்தெனியா.

கே: எனது வயது 15. எனது உடல் வளர்ப்பு போதாது. பலவீனமுண்டு. நல்ல உணவு உட்கொள்கின்றேன். பயனில்லாதிருக்கின்றது?

ப: உடலில் இயங்கும் சில சுரபிகள் சரிவர வேலைசெய்யாமை காரணமாக இருக்கலாம் நல்ல சுத்தமான பால், முட்டை, சத்துள்ள உணவு முறைகள் பயன்தரும். உணவின் அளவிலும் பார்க்க தரம் மிக முக்கியம். அத்துடன் தேக அப்பியாசமும் வேண்டும்.

எஸ். நடராஜன்,
கழனி.

கே: எனது வயிறு முழுவதும் ஒரு இழுத்துப் பிடிப்பது போன்ற வலி. 'படக்-படக்' என்றும் 'புறு-புறு' எனவும் சப்தமுண்டு. ஊசி போட்டும், மருந்து பாவித்தும் குணமில்லை. தீர வழி கூறுங்கள்!

ப: உமது வயிற்றில் வாயு குடிகொண்டிருக்கின்றது. அதன் காரணமாக குடல் பெலவீனமாக இருக்கின்றது. எனவே சிரணிக்க அதிக நேரமெடுக்கும். பருப்பு வகை, கிழங்கு வகை இறைச்சி முதலியவற்றைத் தவிர்க்கவும். இன்னும் கறிவகையில் வெள்ளைப் பூண்டு, சீரகம், மிளகு, பெருங்காயம் போன்ற சரக்குகளை சேர்த்தல் அவசியம். உண்ணும் உணவை நேரத்துக்கும், காலத்துக்கும் தக்கபடி அளவறிந்து உண்க.

எஸ். டி. பிள்ளை,
பசறை.

ப: தற்போது நாடெங்கும் பரவிவரும் 'டிங்கு' சுரத்துக்கு ஏதேனும் மருந்து

(12-ம் பக்கம் பார்க்க)

பதிலளிப்பவர்:
**வைத்திய கலாநிதி**
**நா. கந்தையா**

# வட்டிக் கடன்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரியாஸ்பத்திரியில் கொண்டு விட்டால்........ தனியே அவள் எப்படி இருப்பாள் நம்மைப்போல் யார் நன்ருகக் கவனிக்கப் போகிறார்கள். பெரியாஸ்பத்திரிக்குப் போனவர்களில் பலர் தோட்டம் திரும்பி வந்ததே கிடையாது. சென்றவர்களில் பலர் வாழ்க்கையின் அந்தத்தையே அடைந்து விட்டதை ஏற்கெனவே அறிவான் கருப்பையா. 'மையக் காம்பரா'வில கொண்டு தனியாக இறந்துவிட்ட சவத்தைப் போட்டு விடுவார்களாம். இதைப்பற்றிய எத்தனையோ கதைகளை அவன் கேள்விப் பட்டிருக்கின்ருன். பாவம்! விறைத்துப் போய் நின்ருன் அவன் இறந்து விட்ட பின், உயிரற்ற உடலுக்கு எதற்குத் துணை? இந்தப்பேதை உள்ளம் அந்த அற்பநிகழ்ச்சியை எண்ணி அஞ்சியது. சற்று தயங்கிய அவனை, மருந்து கங்காணி நாலு போடு போட்டு ஆஸ்பத்திரிக்குப் பெண்டாட்டியோடு அனுப்பி வைத்தார்.

ஆஸ்பத்திரியில் அவளைச் சேர்ப்பது பெருங் கஷ்டமாகிவிட்டது. ஆஸ்பத்திரியில் பெரிய ஐயாவுக்கு வாய்க்கட்டுப் போட்டு ஒருவாறு சேர்த்து விட்டான். அப்போது அந்த வட்டிக் கடைக்காரனிடம் இருபத்தைந்து ரூபாய் வாங்கியவன், அவனது அந்த மாதத்திய சம்பளத்தை அப்படியே கட்டி மானத்தைக் காத்துக் கொண்டான். அன்று டாக்டர் உதட்டைப்பிதுக்கிஞர். (ஆஸ்பத்திரியில் அவளைச் சேர்த்த அன்று)

'சாமி! நான் புள்ளைக் குட்டிகாரனுங்க! அவ தான் எனக்குக் கைவானம்! அவ இல்லேன்ஞ வேறு யார் எனக்கு இருக்காங்க. என் புள்ளைகளைப் பாத்துக்க யாருமில்லிங்களே! அதுக ஏங்கிச் செத்துப் போயிடுங்களே!'

என்று டாக்டரிடம் முறையிட்டு அழுதான். டாக்டரும் மனம் இரங்கியவர் போல் நடித்தார்.

இவனுக்கென விசேட சலுகை காட்டுவதுபோல தனிப்பட்ட வைத்தியம் செய்வதாகக் கூறவும்; அவன் அந்த வட்டிக் கடை முதலாளியிடம் ஓடினன். ஐம்பதே ரூபாய் கும்பிட்டுக் கூத்தாடி வாங்கிவந்து டாக்டருக்குக் கொடுத்தான். அந்த ஐம்பது ரூபாவுக்கு இரண்டொரு ஊசிகள் போடப்பட்டன. அதுதான் அவர் இந்த ஏழைக்குச் செய்த பரோபகாரம். அவள்—அவன் மனைவி சுகம் அடைவாள் வாழ்க்கையிலும் சுகம் கிடைக்கும் என்றெண்ணியவனுக்கு சோகமே வரவேற்பு கொடுத்தது.

பொன்னியைப் பார்க்க வேண்டும் என்ற உணர்ச்சியின் உந்தலில்-தாகத்தில், அவளைப் பார்க்கச் சென்ருன், தோட்டத்தில் இருந்த கோசா மூட்டைகளில் ஒன்றை வெட்டி அவளுக்கென கரிசமைத்துக் கொண்டு சென்றவன் அவளைப் பிணமாகத் தான் காண முடிந்தது. மேட்டுலயத்துக்குப்பாயிஇப்படித் தான் மையக் காம்பராவில் தனியாகத் துணையில்லாமல் கிடந்திருப்பாள். அவளின் சடலத்தைப் பார்க்கக் கூட அனுமதிக்கவில்லையாம். வெளியில் நின்றே கத்திக் கதறினராம் அவர்கள் குடும்பத்தார். அதே நிலைதான் அவனுக்கும். அவன் அழுதான்! கதறினன்!! அந்தக் கதறல் வெறும் சடலத்துக்கு என்ன உணர்வை ஊட்டும்!

**அந்த** ஐம்பது ரூபா தான் இன்று நானூற்றி ஐம்பதாக வளர்ந்து இருக்கிறது நானூறு......! அடேயப்பா! மீண்டும் ஓர் பெருமூச்சு அவன் காதுகளில் கவ்வாத்துக் கங்காணியின் சொற்கள் மீண்டும் ஒலித்தன.

'வழக்காவது மண்ணுங் கட்டியாவது! அவன் வழக்குப்போடும் வரை நாம ஏமாளியாகாத்துக் கொண்டிருக்க வேண்டும்? அவனுக்கு முன்னே நீ வழக்குப் போட ஏற்பாடு செய்'

விடியட்டும் பார்த்துக் கொள்வோம் என எண்ணியவன் எப்படியோ உறங்கிவிட்டான்.

விடிந்ததும், தலைவரைக் கண்டு கொண்டு ஜில்லாவுக்குத் தலைதெறிக்க ஓடினன் பிரதிநிதியிடம் ஒரு குரல் அழுதான். வக்கீல் போல, ஏதேதோ அவர் கேட்ட கேள்விகளைக் கேட்டுவிட்டு, உடனே நடவடிக்கையில் இறங்குவது சரியல்ல, இரண்டு நாட்களின் பின் பார்த்துக் கொண்டு செய்வோம், எனக் கூறி அனுப்பிவிட்டார் சளைத்தவனாய் வீடு திரும்பினன் கருப்பையா.

வீட்டின் முன் யாரோ இருவர் நின்று கொண்டிருந்தார்கள். காக்கிச் சட்டைக்காரர்கள்; ஆமாம்; போலீஸ் காரர்கள் தான். திடுக்கிட்டு நின்ருன் கருப்பையா. நன்ருக உற்று நோக்கியவன் அவர்களில் ஒருவனின் கையில் ஏதோ துண்டு வைத்திருப்பதைக் கண்டான். அது 'சம்மன்ஸ்' என்று சிறிதும் எண்ணிப் பாராது அஞ்சியவாறு நடந்தவனிடம் சம்மன்சை நீட்டினர்கள்! மிகுந்த பயபக்தியுடன் வாங்கிய கருப்பையா, அவர்கள் வழக்குக்கு அறிவித்தல் என்றதும் இடிந்து போய் நின்ருன்! மீண்டும் கவ்வாத்துக் கங்காணியின் சொற்கள் ஒலித்தன. அவை மீது அவனுக்கிருந்த நம்பிக்கை ஏனே கருப்பையாவுக்குப் பறந்தது; அது தான் வட்டிக் கடை முதலாளி முந்திக் கொண்டானே!

# மெய்கண்டான் நாள் காட்டி 1966 (கலண்டர்)

இலங்கையில் முதன் முதலாகத் தமிழில் நாட்காட்டியை வெளியிட்டுதவியவர்கள் மெய்கண்டான் நிறுவனத்தினரே. அத்தகைய பெருமையைக் கொண்டவர்களின் 1966ம் ஆண்டு நாட் காட்டி (கலண்டர்) பொலிவுடனும் சிறப்புடனும் வெளிவந்துள்ளது.

நாட்காட்டி என்றவுடன் முதன் முதலில் மக்களுக்கு ஞாபகம் வருவது மெய்கண்டான்தான். இவ்வாண்டு நாட் காட்டியும், கொக்குவில் உயர்திரு. இரகுநாதையரவர்களைக் கொண்டு சரியான முறையில் கணிக்கப்பட்டுள்ளது.

விவாகத்துக்கு நாள் நிச்சயிக்கவோ, அல்லது, வீடு கட்ட வேண்டியிருந்தாலோ, குடும்பத்தில் ஏதாவது ஒரு முக்கிய அலுவலுக்கு நாள், சுபநேரம் தேவையென்ருல், சோதிடரிடமோ, அல்லது பஞ்சாங்கத்தைத் தேடியோ ஓடவேண்டியதில்லை. வீட்டில் ஒரு மெய்கண்டான் நாள் காட்டி இருந்தால் போதும். அந்த அளவுக்கு சகல விடயங்களுக்கும் நல்ல நாட்கள் தரப்பட்டுள்ளன.

இன்னும் சிறப்பாக, தற்பொழுது அரசாங்கத்தால் விடுமுறை தினங்களாகக் கப்பட்டுள்ள 'போய' தினங்கள் குறிக்கப்பட்டுள்ளது மக்களுககு மிகவும் உபயோகமாக விருக்கும்.

மற்றொரு சிறப்பம்சம், ஒவ்வொரு நாள் ஒரு திருக்குறளும் அதற்கு மறுநாள் அதன பொருளும் தரப்பட்டிருப்பது திருக்குறள் பயில விரும்பும் தமிழ் மக்களுக்கு மிகவும் பயன் தரும்.

மொத்தத்தில் தமிழ் பேசும் மக்களின் இலலங்களைப் பெருமையுடன் விளங்கச்செய்வது மெய்கண்டான் நாட் காட்டி.

மெய்கண்டான் ஆங்கில நாட்குறிப்பு(டயறி) (இலக்கம்-5) ஜெம் (டயறி) நாட்குறிப்பு, இரண்டும் அழகிய முறையில், கையடக்கமாக வெளிவந்துள்ளன. பொது, வர்த்தக விடுமுறை நாட்கள், போய விடுமுறை நாட்கள், உலகைப் பற்றிய முக்கிய விபரங்கள், தபால் கட்டண விபரங்கள், முக்கிய புகையிரதங்கள், புறப்படும் நேரம், வந்துசேரும் நேரம், இன்னும் பல சிறப்பு அம்சங்கள் உண்டு. ஒரு பக்கத்துக்கு நான்கு நாள் வீதம் தரப்பட்டுள்ள மேற்படி நாட்குறிப்பில், பல பொன்மொழிகளும் கொடுக்கப்பட்டுள்ளது சிறப்பைக் கொடுக்கிறது.

மெய்கண்டான் தமிழ் நாட்குறிப்பு அழகிய பிளாஸ்டிக் கவருடன் வெளியிடப்பட்டுள்ளது. சுகாதாரக் குறிப்புக்கள், இலங்கையின்விசேட நதிகள், விலைபொருட்கள், கனவின் பலன்கள்,பிரயாண சகுனம், பல்லி விழும்பலன்கள், தொடு குறிசாஸ்திரம், முதலியவை கொடுக்கப்பட்டுள்ளன! சாதகக் குறிப்பு எழுதிக்கொள்ள கிரகநிலைக்கோடு நாட்குறிப்பில் உள்ளதுடன், யாழ்தேவி, உத்தர தேவி றுகுணகுமாரி மற்றும் புகைவண்டியின் நேரங்களும் தரப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு ஒரு பக்கம் உள்ள இந்த நாட்குறிப்பு எல்லாந் தமிழில் செய்யும் தமிழர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

—கோவை

# 'டிங்கு' சுரத்திற்கு...

(11-ம் பக்கத் தொடர்ச்சி,

கூறுங்கள், அதனல் நான் மிகவும் கஷ்டப்படுகின்றேன்; எனது வயது 28.

ப: இது மண்ணிலையான் கொசுக்கள் மூலமாக ஒருவித வைரஸ் காரணமாக ஏற்படுகின்றது. இதற்கு கீழ்க் கண்ட குடி நீரிட்டுக் குடிக்கவும்.

சுக்கு, கோரைக் கிழங்கு, வெட்டி வேர், விலாமிச்சை வேர், கண்டங்கத்தரி, சந்தனக்கட்டை இவை சம எடை எடுத்து 8 கோப்பை நீர் விட்டு ஒரு கோப்பை வரும்வரை வற்றியபின் காலை மாலை குடித்து வரவும்.

இது தாக சாந்தி செய்வதோடு, சுரத்தையும் குறைக்கும் மிதமான கஞ்சிவகைகளை உணவாக சேர்க்கவும்.

கவிமணி,
மட்டுநகர்.

கே: இரவு நேரங்களில் சதா மலங்கழிக்க வேண்டும் போல் உணர்ச்சி ஏற்படுகின்றது. ஆனல் மலம் போகாது. மலவாசலில் சதா சுரு சுருவென்றிருக்கும், சுண்டுவிரலையும், கட்டை விரலையும் வைத்து எடுத்தால் மெல்லிய சிறிய இருமிகள் காணப்படுகின்றன. இதை நீக்குவதற்கு தயவு செய்து வழி கூறுங்கள்.

ப: தானப் புழுக்கள் சேர்ந்ததின் காரணமாக இப்படியான உபத்திரவம் கொடுக்கின்றது. பாகல் இலை சாற்றுடன் சர்க்கரை அல்லது பனங்கட்டி சேர்த்து உண்ணவும். அல்லது பாகல் இலையின் சாற்றை ஆமணக்கெண்ணையுடன் சம அளவாகச் சேர்த்துக் காய்ச்சிக் காலையில் குடிக்கலாம்.

இவற்றைச் செய்து கொண்டு பின்பு கிழமைக் கொருதரம், வாய்விடங்கம் என்ற கடைச் சரக்குடன்சிறிது கராம்பு சேர்த்து அவித்துகுடிநீர் போல் குடிப்பது சிறந்த முறையாகும்.

கே. தெய்வானைப்பிள்ளை,
அல்லாரை.

கே: சுமார் ஒருவருட காலமாக சாப்பிட்டவுடன் வயிற்றில் குத்து ஏற்படுகின்றது. நாளாந்தம் தாம்பூலம் தரிக்க ஆசையாய் இருக்கின்றது. சிலசமயம் அதை விழுங்கியும் விடுவேன். இரவில் கைகால் நாரிக்குத்து உளைவும் உண்டு. இதற்கேற்ற ஆலோசனை தரவும்.

ப: உங்களுக்கு குடற் புண் ஏற்பட்டிருக்கலாம், வெற்றிலைப் பாக்கு, புகையிலை சுண்ணும்பு தரிப்பதால் இது விரிவடைவதற்கு ஏதுவாகும். அத்துடன், காரம், புளிப்புள்ள உணவு வகைகளை தவிர்க்கவும். அளவாகவும், இலகுவில் செமிக்கக் கூடியதுமான ஆகாரம் உண்ணவும். பால், வெண்ணை நன்று. இருந்தும் டாக்டரின் நேரடிப் பரீட்சை இன்றியமையாதது.

எஸ். எம். ஜோன்சன்,
அட்டன்.

கே: எனது வயது 25. திருமணமாகவில்லை. எந்நேரமும் கண்ணீர் வடிகின்றது. அடிக்கடி மூக்கிலிருந்து சளி வருகின்றது. பசியில்லை. தலைமயிர் உதிர்கின்றது. சிகிச்சை பெற்றும் குணமில்லை என்ன செய்யலாம் சார்.

ப: பீனிசம் ஆரம்பமாகிவிட்டமைக்கு இவையெல்லாம் பக்கவாத்தியங்கள். தக்கதொரு வைத்தியரிடம் இதற்குரிய எண்ணை வாங்கிப் பாவிக்கவும். அத்துடன் இடமாற்றம் பிரதானமானது.

கெ. சண்முகநாதன்,
கொழும்பு-2.

கே: மூக்கின் ஒரு துவாரத்தினல் சளிவருதல், மூக்கடைப்பு. சில சமயம் இரத்தமும் வருகின்றது. தலையில் நீர்பட்டால் தடிமல் ஏற்படுகின்றது. அத்துடன் தலைவலியுமுண்டு. தயவு செய்து சிகிச்சை முறை கூறுங்கள்.

ப: தற்காப்புக்காக தினசரி பழவகைகள் உண்ணல் வேண்டும், பிரதானமாக தோடம்பழம், எலுமிச்சம் பழம், பப்பாப் பழம் நன்று, நெல்லிக்காய் சாப்பிடுவதும் நன்று. 'உயிருட்டி சி' என்பது போதிய அளவு உணவில் இருத்தல் வேண்டும். மலவிசர்க்கம் ஒழுங்கு முறை நன்று. குளிர்ந்த நீரில் குளிப்பதை தவிர்த்து, வெந்நீர் பாவிப்பது நன்மை பயக்கும்.

அத்துடன் நல்ல வைத்தியரை அணுகி பீனிசத்துக்குரிய எண்ணை வாங்கிப் பாவிக்கவும்.

ஸ்ரீதர்,
மந்துவில்.

கே: தலைப்பாரம், தலைவிறைப்பு, இருதய படபடப்புண்டு. மூளையை அமர்த்துவது போலிருக்கின்றது. இரத்தம் விரல் நுனியில் தள்ளுவது போலிருக்கின்றது. கண் பார்வையும் குறைவு. கை, தலை, கழுத்துகளில் இரத்தம் தள்ளுவது போலிருக்கின்றது. தயவு செய்து என்ன செய்ய வேண்டும்.

ப: உங்களுக்கு அதிக இரத்த அழுக்கம் இருப்பதாக அபிப்பிராயப் படுகின்றேன். எனவே, இரவு சாப்பாட்டைக் குறைக்கவும். கடுமையாக சிந்தனை செய்தல் கூடாது. நன்ருக நித்திரை செய்யவும். கண்ணைப் பரீட்சிப்பது சிறந்தது. கிரமமாக எண்ணை ஸ்நானம் நன்று. மலபந்தம் இல்லாது கவனித்து உணவுகளை உண்பது சாலச் சிறந்தது. உண்ணும் உணவை மிதமாக உண்ணவும்.


## 'மாய ஜோதி' ஊது பத்திகள்

"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!
ஏன்?

★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலைத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.

நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.

## "சமாதானம், ஒற்றுமை, முன்னேற்றம்"

★ காதல், திருமணம், தொழில், முன்னேற்றம், பரீட்சை, வியாபாரம்.
★ உங்கள் பிரச்சினை இவைகளில் ஒன்ருக இருந்தால்?

இலவச ஆலோசனைகளுக்கு இங்கே கேளுங்கள்.

விலாசம்:-

**பண்டார மந்திராச்சாரியார்**
**அன் கம்பெனி,**
**தலாவ அனுராதபுரம் வழி.**

# சினிமா உலகில் மீண்டும் மந்த நிலை

## மூன்று திங்களுக்கு புதிய படங்கள் இல்லை

தமிழ் நாட்டு சினிமா உலகில் மந்த நிலை தோன்றியுள்ளது. பெரும் பெருபாலான ஸ்டுடியோக்களில் வேலை நேரங்கள் குறைக்கப்பட்டுள்ளதாம். முன்னணி நட்சத்திரங்களுக்கே இப்பொழுது நிறைய ஓய்வு கிடைத்து வருகிறதாம். இந்நிலை மார்ச் மாதம் வரை நீடிக்கும் என்று நம்பப்படுகிறது.

தென்னிந்திய திரையுலகில் மீண்டும் மந்த நிலை தலை தூக்கியுள்ளதாம். கச்சா பிலிம் தட்டுப்பாடு சினிமா உலகை பெரிதும் பாதித்துள்ளது என்று தெரிகிறது.

சென்னையிலுள்ள ஸ்டுடியோக்களுக்கு வாரத்திற்கு மூன்று ரீல்கள் நெகடிவ் மட்டுமே வழங்கப்படுகிறதாம். வெளியூர்களில் உள்ள ஸ்டுடியோக்களுக்கு 4 ரீல்கள் நெகடிவ் வழங்கப்படுகிறதாம். இதனால் பல படங்கள் வளர முடியாத நிலையில் உள்ளனவாம்.

தனிப்பட்ட தயாரிப்பாளர்களுக்கு வெளிப்புறக் காட்சிகளைப் படமாக்குவதற்காக 50 ரீல் நெகடிவ் கொடுக்கப்படுகிறதாம். எந்தப் பெரிய தயாரிப்பாளராக இருந்தாலும் புதிய படங்களைத் தயாரிக்க நெகடிவ் வழங்குவதில்லை என்று தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையின் கச்சா பிலிம் வினியோகக் குழு முடிவு செய்துள்ளதாம்.

நீண்ட காலத் தயாரிப்பிலிருந்து புதிதாகத் தொடர்ந்து சில காட்சிகளை எடுக்கப் போவதாக விரும்பி விண்ணப்பிக்கும் தயாரிப்பாளர்களுக்கும் புதிதாக நெகடிவ் வழங்குவதில்லையென்று முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

கச்சா பிலிம் தட்டுப்பாட்டினால் சினிமாத் தொழிலை நம்பியிருக்கும் பலருக்கும் இந்த நான்கு மாதங்களும் பெரிய திண்டாட்டமாகவே அமையுமாம்.

> **நமது சென்னை நிருபர்**

பொங்கல் வெளியீடாக வெளிவரும் படங்களைத் தொடர்ந்து சில காலத்திற்குப் புதிய படங்கள் எதுவும் வெளிவரமாட்டா என்று நம்ப முடிகிறது. இதனால் பொங்கல் வெளியீடாக வெளிவரும் படங்கள் நீண்ட காலத்திற்கு ஓடலாம் என்று சென்னை சினிமா வட்டாரங்களில் பேசப்படுகிறது.

கச்சா பிலிம் தட்டுப்பாட்டினால் பெரிய முன்னணி நட்சத்திரங்களுக்கும் அதிகப்படியான நேர ஓய்வு கிடைத்திருக்கிறதாம்.

சினிமா நட்சத்திரங்கள் எல்லை புறத்தில் நடைபெறும் போராட்ட வீரர்களை மகிழ்விக்க ஆயிரக்கணக்கான மைல்களைத் தாண்டிச் சென்று கலை நிகழ்ச்சிகளை நடாத்தியதற்கும், தேச பாதுகாப்பு நிதிக்காக ஒவ்வொரு பட்டணத்திற்குச் சென்றும் கலைநிகழ்ச்சிகள் நடாத்தியதற்கும் காரணம் நெகட்டிவ் தட்டுப்பாட்டினால் அவர்களுக்கு அதிகப்படியாகக் கிடைத்திருக்கும் ஓய்வு என்றே கூறப்படுகிறது.

இந்தத் தட்டுப்பாட்டு நிலை படத்தயாரிப்பாளர்களை மட்டுமல்லாது சினிமாத்துறையில் உள்ள ஒவ்வொருவரையும் பாதிப்பதுடன் ஒரு பெரிய தேக்கத்தையும் சினிமா உலகப் பிரமுகர்களுக்குக் கொடுத்துள்ளதாம்.



யாரை மயக்கத்தான் நடிகையர் திலகம் சாவித்திரி இப்படி எழில் மங்கையாகக் காட்சியளிக்கிறரோ? எதற்கும் சிலோன் என்டர் டெயின்மெண்ட்ஸ் திரைகளில் திரையிடப் பட்டிருக்கும் இரத்த திலகத்தைப் பார்த்தால் புரிகிறது.

## ‘கருணையினுல் அல்ல’

### ஜெயகாந்தனின் மற்றுமொரு புதுமைச் சித்திரம்

‘ஆனந்த விகடன்’ பத்திரிகையில் வெளிவந்த ‘கருணையினுல் அல்ல’ என்ற குறுநாவலைப் படமாக்க அதன் ஆசிரியர் திரு. ஜெயகாந்தன் முனைந்துள்ளாராம்.

‘உன்னைப் போல் ஒருவன்’ படத்தைத் தயாரித்து வெளியிட்ட திரு. ஜெயகாந்தனின் ஆசிய ஜோதி பிலிம்சார் இப்பொழுது ‘கருணையினுல் அல்ல’ என்ற கதையைப் படமாக்க முயன்று வருகிறார்களாம்.

இப்படத்தை மூலக்கதையின் ஆசிரியரான திரு. ஜெயகாந்தனே நெறிப்படுத்துவதுடன் வசனத்தையும் எழுதப் போகிறாராம்.

பிரபல குணசித்திர நடிகர் எஸ். வி. சுப்பையா பிரதான பாத்திரத்தில் நடிப்பாரென்றும், மற்றும் விசயன், காந்திமதி பிரபாகரன் ஆகியோர் இதர பாகங்களை ஏற்று நடிப்பார்கள் என்றும் தெரிகிறது.

‘உன்னைப் போல் ஒருவனை’ப் போன்றே இப்படமும் நடனமும், பாட்டும் இன்றித் தயாரிக்கப்படுமாம். ‘உன்னைப் போல் ஒருவன்’ சர்வதேசப் பரிசில்கள் சிலவற்றைப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். இப்படம் இலங்கையில் காட்டப்படும் என்று நம்புவதற்கில்லை.

### ‘சின்னஞ் சிறு உலகம்’

எல்லோராலும் பாராட்டப்பெற்ற ‘என்னதான் முடிவு’ படத்தை தயாரித்த புதுமை டைரக்டர் கோபால கிருஷ்ணன் ‘சின்னஞ் சிறு உலகம்’ என்ற படத்தை தயாரிக்க இப்போது திட்டமிட்டுள்ளார்.

சுப்பு ஆறுமுகம் எழுதியுள்ள இந்தக் கதைக்கான வசனங்களையும் கோபால கிருஷ்ணனே எழுதுகிறார்.

இதில், முக்கிய பாத்திரங்களாக, சந்திரபாபு நாகேஷ், பத்மினி, கே. ஆர். விஜயா ஆகியோர் நடிப்பார்கள் என்று தெரிகிறது.

## “நான் ஆணையிட்டால்”

### அடுத்த மாதம் திரைக்கு வரும்

தெய்வத்தாய்’ படத்தை தயாரித்து வெற்றி கண்ட சத்தியா மூவிசின் ‘நான் ஆணையிட்டால்’ இப்பொழுது முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. இந்தப் படத்தில் எம். ஜி. ஆர். முற்றிலும் புதிய தொருபாணியில் நடிக்கிறார். அவருடன் சோடியாக சரோஜாதேவி தோன்றுகிறார். திரு. ஆர். எம் வீரப்பன் திரைக்கதை எழுதியுள்ள இப்படத்தை ‘எங்க வீட்டுப் பிள்ளை’ வெற்றி இயக்குனரான சாணக்கியா இயக்குகிறார். அனேகமாக முடிவடையும் தறுவாயிலுள்ள இப்படம், தை மாதத்தில் திரைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### தேவர் பிலிம்சின் ‘முகராசி’

எம். ஜி. ஆர்., ஜெயலலிதாவை வைத்து தேவர் பிலிம்ஸ் தயாரித்துவரும் ‘முகராசி’ வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தப் படத்தை திருமுகம் நெறிப்படுத்துகிறார். பெப்ரவரி 18ந் திகதியளவில் இந்தப்படம் திரையிடப்படுமென தேவர் அறிவித்துள்ளார்.

### 13 நாட்களில் ஒரு படம்

‘முகராசி’யை வெளியிட்டவுடன், எம். ஜி. ஆரையும், சரோஜா தேவியையும் வைத்து 13 நாட்களில் ஒரு படத்தை தயாரிக்கவுள்ளதாக திரு. சாண்டோ சின்னப்பா தேவர் கூறியிருக்கிறார். இது சென்னையில் எம். ஜி ஆரை வைத்து படம் எடுக்கும் பல படஅதிபர்களுக்கு கலக்கத்தை அளித்துள்ளது.

### ‘புதிய உலகம்’

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். உலக நாடுகள் அனைத்திலும் திரையிடுவதற்காகத் தயாரிக்க விருக்கும் படத்திற்கு ‘புதிய உலகம்’ என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

இப்படத்தில் எம். ஜி. ஆர். அவர்களுடன் இலங்கையைச் சேர்ந்த சிங்கள நடிகர், நடிகைகளும் மலேயா நாட்டைச் சேர்ந்த நடிகர், நடிகைகளும் நடிக்கவிருக்கிறார்கள். வர்ணத்தில் தயாரிக்கப்போகும் இப்படத்தை வின்சென்ட் படமாக்குவார். விஸ்வநாதன் இசையமைப்பார்.

## திரு. ஜீ. ஜீ.க்கு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கங்களின் ஊதுகுழல்களாகவே மாறியிருக்கிறார்கள்’. இலங்கைப பிரதிநிதி தற்போதைய அரசாங்கத்தைக் குறைகூறுவதற்கு விரும்பாவிட்டாலும் முன்னுள் அரசாங்கம் ஆட்சி பீடத்தல் இருந்தபோழுது இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள் அரசியல் அடிப்படையிலும், நிருவாகத்துறையிலும் அனுபவித்த துன்பங்களைத் தாராளமாக எடுத்துக் கூறி, மீண்டுமொரு சந்தர்ப்பத்தில் அந்த அரசாங்கம் ஆட்சிபீடத்துக்கு வரும் பட்சத்தில் இங்கு வாழும் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோளாவது விடுத்திருக்கலாம்.

‘தனிநாயகம் அடிகளாரின் குரல் சத்தியத்தின் குரலாக, சனநாயகத்தின் குரலாக, சமத்துவத்தின் குரலாக, சகோதரத்துவத்தின் குரலாக ஒலித்திருக்கின்றது. ஆனால் சட்டமேதையும், சரித்திரம் தெரிந்தவருமான பொன்னம்பலம் அவர்கள் இங்கு வாழும் தமிழ்பேசும் இனத்தைபபற்றி நினைப்பதற்கும் நேரமின்றி இதயத்தை இரும்பாக்கிக் கொண்டுவிட்டார்! இப்படிப்பட்டவருக்கா வரவேற்பு அளிக்க வேண்டும்!

‘திருக்கோணமலைத் தொகுதி மக்களுக்கு இன்றுவரை திருவாளர் பொன்னம்பலம் என்ன சேவைதான் செய்திருக்கிறார் என்று கேட்க விரும்புகிறேப்? இச்சந்தர்ப்பத்திலாவது விடை எடுக்கும் நபர்கள் பதில் கொடுப்பார்களா?

‘காலஞ்சென்ற கனம். டி. எஸ் சேனநாயக்கா அமைச்சர் அவையில் இவர் மீன்பிடி மந்திரியாக இருந்த காலத்தில் தானே திருக்கோணமலைத் தொகுதியிலும் மற்றும் தமிழ்ப் பிரதேசங்களிலும் திட்டமிட்டப்பட்ட குடியேற்றம் புகுத்தப்பட்டன? இன்று வரை அதை எதிர்த்து ஒரு வார்த்தைதானும் பேசியிருக்கிறாரா இவர்! அன்றே அவர் எதிர்த்திருந்தால் இன்று இந்த அவல நிலை எமக்கெல்லாம் ஏற்பட்டிருக்குமா?

‘திருகோணமலையில் வகுப்புக் கலவரம் தலை தூக்கியபொழுது, கடற்படைத் தாபனம் கதவடைப்புச் செய்யப்பட்டு பல்லாயிரக் கணக்கானோர் தொழில் வாய்ப்பை இழந்து தவித்தபொழுது, இயற்கையின் உபாதைகளான 1957-ம் வருட வெள்ளப் பெருக்கின் போது, கடந்தவருடம் வீசிய சூறவளியின்போது திருவாளர், பொன்னம்பலம் திருக்கோணமலையைத் திரும்பிப்பார்க்க நினைத்தாரா? ஒரு அனுதாபச் செய்தியையாவது விடுத்தாரா?

‘திருவாளர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களுக்கு ஒரு வரவேற்பு அளிக்க வேண்டுமென்பதற்காக திருக்கோணமலையில கட்சி சார்பற்ற கூட்டமோ இல்லறேல் சகல கட்சிகளையும் சார்ந்த பிரமுகர்களின் கூட்டமோ எக்கட்டத்திலும் நடைபெறவில்லை என்று துணிந்துகூற முடியும். இவருக்கு முன்பே திருவாளர், ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி அவர்கள் ஐ. நா. சபைக்கு இலங்கையின் பிரதிநிதியாகச் சென்று சிறப்பாகச் செயலாற்றியுள்ளார். அவருக்கு மட்டும் வரவேற்பளிப்பதற்கு இக்கட்சி சார்பற்ற சங்கம் ஏன் முன்வரவில்லை? அவரிடம் மண்டியிட்டுப் பதவிகளைப் பெற்றவர்கள் இன்று பொன்னம்பலனுக்கு காவடி தூக்க வேண்டுமென்று முற்பட்டிருக்கிறார்கள். திரு. குமாரசாமி அவர்கள் தேர்தலில் தோல்வி கண்டபின்பும் திருமலைத் தொகுதிக்கு மறவாது சேவை செய்து வந்திருக்கிறார். அவர் வயதில் இளையவராக இருந்தும் ஐ. நா. சபையில் பத்திரிகைகளின் வெளிச்சமின்றியே தனிப்புகழ் பெற்றார்.

‘இந்த நிலையில் சொந்த லாபம் தேடும் இந்த வரவேற்பு குழுவினரின் கட்சி சார்பற்ற கூடபாடுகளைக் கேட்டு இங்கு வாழும் தமிழ்பேசும் மக்கள் இனியும் ஏமாற வேண்டாம்.”

# சுருட்டுக் கைத்தொழில்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக மாறி வருகின்றது. சில சிங்கள வர்த்தகர்களே இப்போது யாழ்ப்பாணக் குடா நாட்டுச் சுருட்டுகளை வருவித்தும், தாங்களே ஆட்களை வைத்துச் சுருட்டியும் விற்று வருகின்றனர்.

யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்து ஆரம்ப காலத்தில் சுருட்டுப் பெட்டிகள் குதிரை வண்டிகள் மூலம் சந்தைகளுக்குக் கொண்டுவரப்பட்டன. இதனால் காலமும் அதிகமாகி, போக்குவரத்துச் செலவும் அதிகரித்திருந்தன; அத்தோடு சுருட்டுப் பெட்டிகளைக் கொண்டு செல்லல் இலகுவானதாகவும் அமையவில்லை. இருப்புப் பாதைகள அமைக்கப்பட்டதன் பின் புகை வண்டிகள் மூலம் சுருட்டுப் பெட்டிகள் சந்தைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன. லொறிகள் மூலமாகவும் பெருவாரியான சுருட்டுப் பெட்டிகளின்று சந்தைகளுக்குக் கொண்டு வரப்படுகிறது. புகையிரத மூலமாகக் கொண்டு செல்வதிலும், லொறிகள் மூலம் அனுப்புவது இலகுவானதும் பாதுகாப்பானதும், விரைவானதும் என யாழ்ப்பாணக் குடா நாட்டுச் சுருட்டு முதலாளிகள் கருதுகின்றனர்; சிலர் சொந்தமாக லொறிகளும் வைத்திருக்கின்றனர்.

## வருமானம்

ஒரு சுருட்டின் விலை அதனது அளவினைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது; பெரிய சுருட்டுக்கள் 5 சதமாகவும் சிறியன 4 சதம், 3 சதம் ஆகவும் விற்கப்படுகின்றன; 3 சதத்திற்குக் குறைந்த சுருட்டில்லை; ஆரம்பகாலத்தில் பெரிய சுருட்டின் விலை 3 சதமாகத்தான் இருந்தது. வியாபாரிகளுக்கு 1000 சுருட்டுக்கள் 25 ரூபா, 30 ரூபா, 35 ரூபா; 40 ரூபா எனப் பல விலைகளில் கொடுக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற 43 கோடி சுருட்டுக்களும், 1 கோடியே 30 இலட்சம் ரூபாய்களுக்கு விற்பனையாகின்றன. இதனால், யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு வருடா வருடம் 70 இலட்சம் ரூபா வருமானமாகக் கிடைக்கின்றது. யாழ்ப்பாணக் குடா நாட்டிலிலுள்ள 216 சுருட்டுக் கொட்டில் முதலாளிகளும் மொத்தமாக 70 இலட்சம் ரூபாய்களை இலாபமாகப் பெறுகின்றனர்; அதாவது சராசரியாக ஒவ்வொரு சுருட்டுக் கொட்டில் முதலாளிகளும் வருடா வருடம் 30,000 ரூபாவை வருமானமாகப் பெறுகின்றனர்.

யாழ்ப்பாணக் குடா நாட்டுச் சுருட்டுக் கைத்தொழில் வலயமே 43 கோடி சுருட்டுகளில், 36½ கோடி சுருட்டுக்களை உற்பத்தி செய்து, 70 இலட்சம் வருமானத்தில், 61 இலட்சம் வருமானத்தைப் பெறுகின்றது. இக் கைத்தொழில் வலயத்திலுள்ள 172 சுருட்டுக் கொட்டில்களும், வருடா வருடம் சராசரியாக 35,000 ரூபாய்களை வருமானமாகப் பெறுகின்றன. கைத்தொழில் வலயத்திற்கு வெளியேயுள்ள சுருட்டுக் கொட்டில்கள் ஒவ்வொன்றும் சராசரியாக 20,000 ரூபாய்களையே வருடாந்த வருமானமாகப் பெறுகின்றன. அட்டவணை 2ல் இருந்து காண்க.

## விளம்பரம் வேண்டும்

சந்தைகளைப் பொறுத்த மட்டில் 1957-ம் ஆண்டிற்கு முன்னிருந்த நிலைமை களின்று இல்லை. 1957க்கு முன் பரந்திருந்த சுருட்டுச் சந்தை இன்று எவ்வளவோ சுருங்கிப் போய்விட்டது, வகுப்புக் கலவரத்தினால் ஏற்பட்ட பலாபலன்களில் இதுவும் ஒன்று அத்தோடு சுருட்டுச் சந்தைகளில் பலத்த போட்டிகளுமேற்பட்டுள்ளன. யாழ்ப்பாணக் குடா நாடு சுருட்டுச் சந்தையில் வகித்து வந்த ஏகபோகவுரிமையைக் கைப்பற்ற இலங்கையின் ஏனைய பாகங்கள் சில போட்டியிடுகின்றன. யாழ்ப்பாணக் குடா நாட்டில் முன்பு சுருட்டிய தொழிலாளர்களைக் கொண்டு, இன்று கொழும்பு போன்ற விடங்களில் சுருட்டுச் சுருட்டுவிக்கின்றனர். அதனால், யாழ்ப்பாணச் சுருட்டிற்குப் போட்டிகள் ஏற்பட்டுள்ளன யாழ்ப்பாணக் குடா நாட்டின் சுருட்டுகளோடு இலங்கையின் ஏனைய பாகச் சுருட்டுக்கள் போட்டியிட்டு வெற்றி பெறுவது கடினம் அவை சிகரெட், பீடி போன்று பிரதியீட்டுப் பொருட்களாகத்தாம் (பதில் பொருட்கள்) இருக்க முடியுமே தவிர, யாழ்ப்பாணக் குடா நாட்டுச் சுருட்டிற்குள்ள நுகர்ச்சியாளர்களைக் கவர்ந்து சந்தைகளைக் கைப்பற்றுவதென்பது இயலாத காரியம்.

நவீன உலகில் விளம்பரம் என்பது சந்தைகளை நிர்ணயிக்கும் கவர்ச்சி'ச் சாதனமாக விளங்குகிறது. அதனால், விளம்பரங்கள் மூலம் விற்பனையைப் பெருக்க முயலலவசியம். மாலினி, கனகலிங்கம் சுருட்டுக்கள் இன்று ஓரளவு விளம்பரம் செய்து நல்ல சந்தைகளைக் கைப்பற்றியிருக்கின்றன, என்பது குறிப்பிடத்தக்கது. அதனைப் போல ஏனைய சுருட்டுகளுக்கும் அவற்றின் உற்பத்தியாளர்கள் விளம்பரங்கள் செய்து, நுகர்ச்சியாளர்களைக்கவர்ந்து விற்பனையைப் பெருக்குதலவசியம்.

(20-1-66ம் திகதி இதழில் சுருட்டுக் கைத் தொழிலின் எதிர்காலம்)

# தமிழ்ப்....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கள் பெறுகின்ற சம்பளத்திற்காக மட்டும் ஆசிரியர்கள் பணிபுரியும் நிலைமை ஏற்படுமானால் அதனால் விளையக்கூடிய பாரதூரமான தீங்குகளை யாராலும் அகற்ற முடியாது. எனவே தியாக உணர்ச்சியோடு ஆசிரியர்கள் செயலாற்ற வேண்டும்.

நல்ல தமிழை எழுதுவதிலும், பேசுவதிலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்னோடியாகத் திகழவேண்டும் அத்துடன் மொழிவிசயத்தில் ஒரு திட்டவட்டமான கொள்கையையும் ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டும்.

குறிக்கப்பட்ட பாடத்திட்டத்தோடு பொதுவான முக்கியம் என்று கருதக்கூடிய சில தமிழ்ப் பகுதிகளையும், திட்டத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவற்றை மாணவர்களுக்கு அறிவிக்க வேண்டியது அவசியமாகும்.

தமிழ் அறிவில் மாணவன் திருப்திகரமான முறையில் திறமை பெற்றுத் திகழ வேண்டுமாய் இருந்தால் அது பொதுவாக ஆசிரியரின் ஆழமான பணியிலும் கற்பித்தலிலுமே அமைந்திருக்கின்றது.

தரமான முறையில் தமிழ்ப் பாடம் மாணவர்களுக்குப் போதிக்கப்படும் விசயத்தில் கல்விப்பகுதியினரும் ஆசிரியர்களும் கண்டிப்பான கவனம் செலுத்துவார்களாக.

# தமிழைத் துறந்தவர் தமிழராவாரா?

**மா. பொ. சி.**

தமிழ், மிகச் சிறந்த மொழி. உலக மொழிகளிலே இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே பொருளிலக்கணத்தைப் பெற்ற ஒரே மொழி தமிழ் மொழி தான். தொல்காப்பியம்-பொருளதிகாரத்தில் காணப்படும் சில இயல்கள், அந்த இயல்களை ஒட்டிய சூத்திரங்கள் அந்நாளைய விஞ்ஞானப் பாடங்களாகும். நிலம் பற்றிய பாகுபாடு, உயிர் பற்றிய வேறுபாடு, மெய்ப்பாடு பற்றிய விளக்கங்கள் சடப்பொருள்களை இனம் பிரிக்கும் முறை பற்றிய தொல்காப்பியச் சூத்திரங்களைப் படித்தால், தாவரம்-மண்ணியல்-உயிரியல் - உளவியல் ஆகிய விஞ்ஞான இயல்களின் ஆரம்பப்பாடங்கள் போன்று தோன்றுகின்றன. இத்தகைய உயர் திறனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெற்ற தமிழ் நூலின் பெயரை, ஆங்கில எழுத்துக்களால் எழுதி, தமிழே தெரியாதஒருவரைப் படிக்கச்சொன்னால், 'நெடு நாள் வடை' என்றுதான் உச்சரிப்பார். ஆம்; தமிழிலுள்ள 'நல்', 'நாள்' ஆகி, 'வாடை' 'வடை'யாகி ஒலிக்கும்.

குறிலையும் நெடிலையும் ஒலிக்கும் எழுத்துக்கள் ஆங்கிலத்தில் இல்லை. அதனால் வாடை வடையாகிறது நாட்டுக் கோட்டை, நட்டுக் கொட்டையாகிறது. தமிழில் எத்தனை எழுத்துக்கள் சேர்ந்த நீளமான சொல்லானாலும், ஒவ்வொரு எழுத்துக்கும் உள்ள ஒலி அப்படி அப்படியே ஒலிக்கும். இப்படி ஆங்கிலத்திலும் சிறந்த

**உலக மொழிகளில் தமிழ் மொழியே இனிமையானது என்று கூறிச் சென்றார் பாரதியார். அந்த இனியதமிழ்மொழியிடத்துள்ள சிறப்பை எடுத்துக் காட்டுகிறார் சிலம்பின் செல்வர் மா. பொ. சி. தமிழ் மொழிக்குள்ள தனிச் சிறப்பை எடுத்துக் காட்டிய சிலம்புச் செல்வர் பறங்கி மொழி மீது நம்மவர் கொண்டுள்ள மோகத்தையும் சாடியுள்ளார். தமிழ் மொழி சிறந்ததல்ல என்ற எண்ணத்தைக் கொண்டவர்கள் தமிழராக மாட்டார்கள் என்ற மா. பொ, சி. யின் முடிவு நியாயமானதே.**

மொழியைத் தாய்மொழியாகப் பெற்ற நாம் அதனை ஒரு பெருமையாகக் கருத வேண்டும். 'ஆங்கிலத்திற்கு இருபத்தாறே எழுத்துகள்! ஆகவே தமிழிலும்ஆங்கிலமே கற்பதற்கு எளிய மொழி- என்பதாகச் சிலர் கதைக்கின்றனர். இது, தமிழ் பற்றி ஞானமற்ற பேச்சாகும். தமிழிலும் முப்பதே எழுத்துக்கள்தான்.

எழுத்தெனப்படுவ

அகரமுதலனகர இறுவாய்

முப்பஃதென்ப

என்கின்றது தொல்காப்பியம். அதாவதும்என்ற ஆயுத எழுத்து நீங்கலாக தமிழுக்குரிய உயிரெழுத்துக்களும் மெய் எழுத்துக்களும் சேர்ந்தால், மொத்த எழுத்துக்கள் முப்பதே. ஆம்; ஏனையவை சார்பெழுத்துக்களே. பார்வைக்கும் பயில்வதற்குமான எழுத்துக்கள் முப்பதே! இப்படி, ஆங்கிலத்தில் ஒலி வேற்றுமையைக் காட்டும் சார்பெழுத்துக்களே இல்லை. அதனால், அந்த மொழியைப் பயில்வது கஷ்டமாக இருக்கிறது. இருநூறு ஆண்டுகளாக கட்டாய பாடமாக இந்த நாட்டவரின் தலையில் சுமத்தியும் ஆங்கிலம் பயின்றோரின் எண்ணிக்கை நூற்றுக்கு இரண்டு சதவிகிதத்திற்கு மேல் ஏறவில்லை. ஒலி வேற்றுமையைக் காட்டும் சார்பெழுத்துக்கள் ஆங்கிலத்தில் இல்லாமையால், அது வளமுடைய மொழியாக இருக்கவில்லை. சான்றாக, 'நெடுநல் வாடை' என்னும் மொழி நம் தாய் மொழி என்பதற்கு எத்தனை எத்தனையோ சான்றுகளை நான் காட்ட முடியும்.

ஆங்கிலத்தைப் பயில வேண்டாமென்று நான் சொல்லவில்லை, ஈன்ற தாயின் அருங்குணங்களை மகனே பழித்துக்கூறி, வேலைக்காரியின் குறைகளையும் புகழ்ந்துரைக்கும் துரோகப் புத்தியைத்தான் வெறுக்கிறேன். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பது பழமொழி. அப்படி நமக்கு நம் தாய்மொழிதான் சிறந்த மொழி. இந்த எண்ணத்தைத் துறப்பவர் தமிழராக மாட்டார்.

# தமிழுரிமை...

[11ம் பக்கத் தொடர்ச்சி]

இந்நாட்டின் முதலமைச்சர் டட்லி சேனநாயக்காவே சில ஆண்டுகளுக்கு முன் அரசினர் கல்லூரி மன்றத்தில் நடைபெற்ற அருணசல நூற்றாண்டு விழாவில் ஈழம் உள்ளளவும் அருணசலத்தின் அரும் பேர் மக்கள் அகத்தில் அழியாது இடம் பெறும் என்றார்.

ஈழ மண்ணில் நிலையாக நினைவிற்கு எட்டாத காலம் தொட்டே யாம் வாழ்ந்து வரினும் யாம் இந்நாட்டிற்கு உரியவரா—தொடர்ந்து வாழத் தகுதியுடையவரா என்ற கேள்வி இன்று இன வெறி பிடித்த சிங்களத் தலைவர்களிடம் எழுந்துள்ளது. பைந்தமிழர் பகுத்தறிவை இழந்து பாம்பிற்கு பால் வார்த்துள்ளனர் என்கின்றனர் சிலர். இல்லை, இல்லை சிங்களப் பொது மக்கள் நல்லவர்கள் அவர்களை வழி நடத்துபவர்களே வகுக்க வேண்டிய வழி புரியாது தவறுகின்றனர். தொடர்ந்து உள்ளும் புறமும் தூய்மையுடைய தமிழ்த் தலைவர்கள் உண்மை நிலையை எடுத்து இடித்துரைப்பின் சிங்கள மக்களின் மனம் திருந்தும் செந்தமிழர் வாழ்வு மலரும் என்கின்றனர் மற்றும் சிலர். இந்த மாறுபட்ட கருத்தில், எதில் மாசற்ற உண்மை ஒளி உண்டென்பதை வருங்கால வரலாறே வரைந்து காட்டட்டும்.




## பிட்டுப் பிட்டு

அண்மையில் கனக செந்திநாதன் அவர்களின் 'பிட்டு' என்ற சிறுகதை ஒரு தினசரியில் வெளியாகியிருந்தது; 'பிட்டு' இலங்கை வானொலிச் சிறுகதை வாரத்தில் இடம் பெற்றதாகும். இச்சிறுகதை வானொலி வாரத்தில் முதற்கதையாக வாசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சிறுகதையை வெளியிட்ட பத்திரிகை கதையின் சுற்றில், 'இச்சிறுகதை வானொலிச் சிறுகதை வாரத்தில் முதற்கதையாகத் தெரிவு செய்யப்பட்டது' என்ற அர்த்தத்தில் எழுதியிருந்தது.

—வந்தது வினை.

'கனக. செந்தியின் சிறுகதை முதற்கதையா?'

'ஏழு கதைகளைத் தெரிவு செய்தார்கள். அதில் முதலிரண்டு மூன்று என்று வகைப்படுத்தவில்லையே?'

வயிற்றெரிச்சலைப் பொறுக்க முடியாத ஒருவர்—அவருடைய கதையும் வானொலி வாரத்திலிடம்பெற்றது குறிப்பிடத்தக்கது—பத்திரிகை ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினாராம்.

'பிட்டு என்பது முதற் பரிசு பெற்ற கதையன்று. ஏழு கதைகளில் ஒன்றுகும். அதனைப் போய் முதற்பரிசு பெற்ற கதை என்று உங்கள் பத்திரிகையில் எழுதியிருப்பது மாபெருந்தவறு இது விடயம் பற்றி இலங்கை வானொலித் தமிழ் நிகழ்ச்சி அதிகாரிக்கும் அறிவித்துள்ளேன், தக்க நடவடிக்கைகள் எடுக்கும்படி...!

அது நிற்க—

வானொலி இன்னும் அச் சிறுகதைகளுக்குரிய பணத்தை அனுப்பிவைக்கவில்லையாம்; ஆனால், பணம் பெற்றுக் கொண்டதற்குரிய பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்டார்களாம். அது என்ன மர்மமோ?

# எடுத்தோம் முடித்தோம்

முதன் முதலில் தபாற் தலைகளை வெளியிட்ட நாடு எது?

பிரித்தானியா

யப்பானின் புனிதத் தன்மை வாய்ந்த மலை எது?

புஜியாமா மலை

எத்தியோப்பியாவின் தலை நகரம் எது?

அடிசு அபாபா

'யுரேனசு' என்னும் கிரகத்தைக் கண்டு பிடித்தவர் யார்?

வில்லியம் கேச்செல்

மனிதனை முதலில் விண்வெளிக்கு அனுப்பிய நாடு எது?

உருசியா

இந்தியாவின் முதலாவது சனாதிபதி யார்?

ராஜேந்திரப் பிரசாத்

உகண்டா தேசத்தின் பிரதமர் யார்?

டாக்டர். அப்போ போ மில்ற்றன் ஒபோட்டோ

மயக்க மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்?

டாக்டர். ஜேம்ஸ் சிம்சன்

தொகுப்பு:
ச. சிவகுமார்




முழு நீள அறிவியல் விசித்திரக் கதை

# மண்ணிற்கு மேலே...

அரியாலையூர் த. இந்திரலிங்கம்

மோல்டன் ஜன்னலை அடித்து மூடினார். லோமைன் தாயின் கைகளிலிருந்து இறங்க மறுத்தாள் அழகை ரசிக்க அவாவுற்றாள் அவள். ஆபத்தை உணரவில்லை. 'ரோம் எரிகின்றபொழுது நீரோ பிடில் வாசித்ததுபோலப் பிதற்றுகிறாயே!' என்று மோல்டன் அதட்டியதும் லோமைன் இறங்கினாள்.

பறக்கும் தட்டு வீட்டின் மேலே சுழன்று விட்டு அவர்களது வீட்டிற்கு முன்னே பரந்து கிடந்த திறந்தவெளியில் இறங்கியது. அது தரையில் இறங்கியதும் அதனது வீணை நாதம் அடங்கியது. [illegible]வர்ண ஒளி மட்டும் வந்து கொண்டிருந்தது. இவற்றையெல்லாம் ஸ்டெலின் சாவித்துளை வழியாகக் கவனித்தான். மோல்டன் வாயிலே கைவிரலை வைத்து எவரையும் சத்தமிட வேண்டாமென எச்சரித்தார். லோமைனும் விஷயம் விளங்கினதால் அறையின் மூலையிலே கிடந்த கட்டிலிலே போய்க் குப்புறப்படுத்தாள்.

பறக்கும் தட்டிலிருந்து 'குயிங்...ங்...ங்...' என்ற ஒலி வெளிப்பட்டது. மறுகணம் அதனில் ஒருகதவு திறந்தது. அந்தக் கதவைத் திறந்த வண்ணம்......ஸ்டெலினு[illegible] அக்காட்சியைப் பார்த்த பொழுது உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைக்கு ஏதோ ஊர்ந்து செல்வது போலிருந்தது... ஆம்! அந்தக் கதவைத் திறந்தவண்ணம் ஒரு செந்நிற மனிதன் வெளிவந்தான். அந்த நிலவொளியில் அவனைப் பார்க்க மிகவும் பயங்கரமாக இருந்தது. அவனது உடலின் எந்தப்பாகமும்—முகத்தைத்தவிர—வெளியே தெரியவில்லை. பச்சை நிற மேலாடையும் (சேர்ட்) நீல நிற நீளக்காற்சட்டையும் (லோங்ஸ்) அணிந்திருந்தான் அவன். கையின் விரல்கள் மட்டும் வெளியேதெரிந்தது. மிகுதியைக் கையுறைகள் மறைந்திருந்தன. கைவிரல்கள் நீண்டு மெல்லியதாக இளஞ் சிவப்புநிறத்திற் காட்சியளித்தன. கால்களை நீல நிறப் பூட்சுகள் அலங்கரித்தன. தலையில் ஒரு இராணுவத் தொப்பி மிளிர்ந்தது. காதுகளில் மைக்ரபோன்கள் இணைக்ப் பட்டிருந்தன. முகம் மட்டும் வெளியே தெரிந்தது. அதன் இளஞ் சிவப்பு நிறம் நிலவொளியினாற் பிரகாசித்து இன்னும் பயங்கரமாகத் தோன்றியது அவற்றிலே பச்சையும் நீலமுங் கலந்த இருசிறு கண்விழிகள். அவை முகத்தின் இளஞ் சிவப்புடன் சேர்ந்து ஒரு கவர்ச்சியை யுண்டாக்கின. ஆனால் ஸ்டெலினின் தலை சுழன்றது. தான் பார்ப்பதை நிறுத்திவிட்டுத் தந்தையைப் பார்க்கும் படி கூறினான்.

வெளியே வந்த அந்தப் பறக்கும் தட்டு மனிதன் வானத்திலே ஒளிரும் வெண்ணிலாவை ஒரு முறை பார்த்தான். பின்னர் கம்பீரமாக 'கம் அவுட் ஆல் ஒவ் யூ' (எல்லோரும் வெளியே வருக) என்று ஆங்கிலத்திலே கூறினான். அவன் சொற்களை ஒவ்வொன்றாக உச்சரித்த விதம், அவன் அதைப் புதிதாகக் கற்றிருக்கிறான் என்பதைக் காட்டியது.

மோல்டன் மக்களையும், மனைவியையும் பார்த்து, வேண்டாமென்று தலையை ஆட்டினார். வெளியே போனால் என்ன நிகழுமென்பதைப் பற்றி அவரால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. சுமார் மூன்று நிமிடங்கள் கழிந்தன. பறக்கும் தட்டு மனிதன் அசைவின்றி நின்று கொண்டிருந்தான். அவனது பசு நீலக் கண்கள் அசையாமல் வீட்டின் கதவையே ஊடுருவி நோக்கிக் கொண்டிருந்தன.

மீண்டும் அவன் கூறினான், அதே வார்த்தைகளை:— 'கம் ஆல் ஒப் யூ' இந்த முறை அவனது வார்த்தைகளிற் கடுமை தோய்ந்திருந்தது. மீண்டும் அவனது கண்கள் கதவை நோக்கின. லோமைனினதும், ஜாஸ்மைனினதும் உடல்கள நடுங்கிக் கொண்டிருந்தன. காதரினின் கைகள் வாயைப்பொத்திக் கொண்டிருந்தன. ஸ்டெலின் மோல்டனின் ஒவ்வொரு அசைவையும் மிகக் கவனமாக நோக்கிக் கொண்டிருந்தான். மோல்டனின் கண்கள் பறக்கும் தட்டு மனிதனின் கண்களையே நோக்கின.

இம்முறை சுமார் ஐந்து நிமிடங்கள் கழிந்தன. பின்னர் அவன் வீட்டைநெருங்கி வந்து கதவின் மீது பலமாக உதைத்தான். கதவு அதிர்ந்தது. எனினும் உடையவில்லை விரைவாகச் சென்று பறக்கும் தட்டினுள் ஏறிக்கதவைச் சாத்தினான். மோல்டன், அவன் வீட்டினுள் எவருமில்லையென எண்ணிப் போய் விடுவான் என எண்ணினார். அனைவரும் மகிழ்ந்தனர். ஆனாற் கதவு மீண்டும் திறந்தது. வெளியே வந்த அவனது கைகளில் இப்பொழுது ஒரு துப்பாக்கி நிலவொளியிற் பட்டுப் பளபளத்தது.

## விசித்திரத் துப்பாக்கி

பறக்கும் தட்டிலிருந்து வெளியே வந்த அவனது கைகளிலே ஒரு துப்பாக்கி பளபளத்தது விசையை அழுத்திவிட்டால் ஐம்பது பேருக்குச் சொர்க்கமளிக்கும் அபூர்வ சுழல் துப்பாக்கி அது. அத்துடன் வெளியே வந்த பறக்குந் தட்டு மனிதனின் வாய் கோபத்துடன், புரியாத பாஷையில் ஏதோ முணுமுணுத்தது. மோல்டனிற்கு விஷயம் விளங்கிவிட்டது. அவரது குடும்பத்தையே அழித்துவிடும் கைங்கர்யத்தைச் செய்யத்தான் அவன வருகிறான் என்பதிலுஞ் சந்தேகமா? தலைக்குமேலே சாண்போனால் என்ன? முழம் போனால் என்ன? மோல்டனது உள்ளத்திலே ஒருயோசனை தோன்றியது. திடீரென எழுந்து அறையின் மூலைக்குச் சென்றார். அறையின் மூலையிலே சாத்திவைக்கப்பட்டிருந்த நீண்ட, உறுதியான இரும்புக் கம்பியை எடுத்தார். சண்டைக்குச் செல்லும் 'ட்ரக்'குகள் சேற்றிலே அழுந்திவிட்டால் அவற்றை நெம்புகோல் முறையாகத் தூக்கிவிட உபயோகிக்கப்படும் நீண்ட இரும்புக் கம்பி அது. அதை ஒரு மனிதனின் மண்டையிலே போட்டால் மறுகணமே மனிதன் சிவலோக யாத்திரை செய்துவிடுவான் அதைக் கையிலே எடுத்துக்கொண்டு ஸ்டெலினின் காதிலே ரகசியமாக ஏதோ சொன்னார். ஸ்டெலின் பலமாகத் தலையை ஆட்டினான். அப்பொழுது வீட்டுக்கதவு படாரென்ற ஓசையுடன் அதிர்ந்தது. ஸ்டெலின் சாவித்துளை வழியாக நிகழ்வதை நோக்கினான், பறக்குந்தட்டு மனிதன் தான் தூரத்திலிருந்து ஓடிவந்து வீட்டுக் கதவை உதைத்தான். அதைக்கண்ட ஸ்டெலின் நம்பிக்கை சுடர்விடத் தந்தையை நோக்கினான். அப்பொழுது இரண்டாவது உதையும் கதவைத் தாக்கியது. அவனது உடலில் அசுரத் தனமான பலம் இருந்திருக்கவேண்டும். ஏனெனில் இரண்டு தாக்குதல்களினாலேயே கதவு ஆட்டம் ஆடத் தொடங்கியது.

மூன்றாவது தாக்குதலை நடத்தப் பறக்கும் தட்டு மனிதன் பின்னுக்குச் சிறிது தூரம் சென்றான். அப்பொழுது மோல்டன் கதவின் தாழ்ப்பாளை நீக்கிவிட்டார். பின்னர் இருப்புக் கம்பியின் ஒரு முனையை அவரும், மறுமுனையை ஸ்டெலினும் பிடித்த வண்ணம் கதவின் இருபக்கங்களிலும் நின்று கொண்டனர். மனைவியையும், குழந்தைகளையும் ஒதுங்கி நிற்குமாறு சைகை காட்டினார் மோல்டன்.

'படார்...' தடால்...' இரு ஓசைகள் அடுத்தடுத்து ஒலித்தன. தாழ்ப்பாள் நீக்கப்பட்டிருந்த கதவின் மீது மிகத் தூரத்திலிருந்து ஓடிவந்து மிகப்பலமாக மோதிய காரணத்தினால் கதவு மிக வேகத்துடன் உட்புறமாகத்திறந்து கொண்டிருந்தது. இதை முற்றிலும் எதிர்பார்க்காத பறக்குந்தட்டு மனிதன் அறையின் உட்புறம் வீழ்ந்தான். இதற்காகவே காத்துக் கொண்டிருந்த மோல்டனும், ஸ்டெலினும் கைகளிலே பலமாகப்பிடித்துக் கொண்டிருந்த இரும்புக் கம்பியினால் உடனே அம்மனிதனின் கழுத்தை நசுக்கினார். திகைத்தான் அவன். அவனது கைகளிலிருந்த துப்பாக்கி அதிர்ச்சியினால் அறை மூலையிலே தூக்கி எறியப்பட்டு வீழ்ந்து கிடந்தது. ஸ்டெலினும், மோல்டனும் இரும்புக் கம்பியை அவனது கழுத்திலே வெகுபலமாக வைத்து அழுத்தினர். அவனது கைகள் அபயங்கேட்டு உயர்ந்தன. அவனது ரோஜாச் சிவப்பு முகம் வெள்ளையாக வெளிறியதைக்காண மிகவும் பரிதாபமாக இருந்தது. அதைக் கண்ட காதரின் அறை ஓரத்திலே கிடந்த வலிமையான மெல்லிய மின்சாரக் கம்பிகளை (மின்சாரம் இல்லாத) எடுத்து மோல்டனிடம் கொடுத்து 'கொல்ல வேண்டாம்! கட்டிவையுங்கள்!! பொலிஸிடம் ஒப்படைக்கலாம்' என்றாள். மோல்டனிற்கும் பரிதாபமாக இருந்தது. அந்தக் கம்பியினால் அவனது காலையும், கையையும் இறுக்கமாகப் பிணைத்தார். அந்த மனிதனின் கண்கள் கலங்கின. மோல்டன் அவனது சட்டைப் பைகளைச் சோதனை போட ஆரம்பித்தார். அவனது சட்டைப் பையுள் ஒரே ஒரு சிறிய காகித அட்டை மட்டும் தானிருந்தது. அந்த அட்டையிலே சில நட்சத்திரங்களும், அவற்றின் நடுவே ஒரு பறக்கும் தட்டின் படமும் அச்சிடப்பட்டிருந்தன. அதன் கீழே புரியாத ஒரு மொழியிலே ஏதோ சில வார்த்தைகள் எழுதப்பட்டிருந்தன; அது ரகசிய மொழியாகவும் தெரியவில்லை. வேறு இந்தப் பூலோகத்திலே நடைமுறையிலிருக்கும் மொழியாகவும் தெரியவில்லை.

# எவ்வாண்டில்?

1. ஊவா மாகாணம் எப்போது அமைக்கப்பட்டது?
2. களனிப் பள்ளத்தாக்கு இருப்புப் பாதை எப்போது திறக்கப்பட்டது?
3. கொழும்புடன் யாழ்ப்பாணம் இருப்புப் பாதையால் எப்போது இணைக்கப்பட்டது?
4. முதலாம் உலகப் போரின் ஆரம்பம் எவ்வாண்டில்?
5. சிலாபத்துக்கு இருப்புப் பாதை எப்போது திறக்கப்பட்டது?
6. ஒபநாயகாவுக்கு இருப்புப் பாதை எப்போது திறக்கப்பட்டது?
7. புத்தளத்திற்கு இருப்புப் பாதை எப்போது அமைக்கப்பட்டது?
8. புதிய சட்டசபையகம் எப்போது திறக்கப்பட்டது?
9. வருமானவரி விதிப்பு எவ்வாண்டில்?

# இவ்வாண்டில்!

1. 1886.
2. 1903.
3. 1905.
4. 1914.
5. 1916.
6. 1919.
7. 1926.
8. 1930.
9. 1932.

தொகுத்தவர்:
பொ. கணேசன்

# தமிழ்

—நவாலியூர்க் கவிராயர்—

தமிழ் எங்கள் தமிழ்—இனிய
தேன் அந்தத் தமிழ்!
அமிழ் தென்னும் தமிழ்—கற்க
அரும் மொழி தமிழ்!

எங்கு முற்ற தமிழ்—கற்பு
எழில் கொண்ட தமிழ்!
தங்கு மின்பத் தமிழ்—இநத
தரணி எங்கும் தமிழ்!

இளம் கன்னித் தமிழ்—நிகர்
இல்லா இத் தமிழ்;
வளம் பெற்ற தமிழ்—பெரும்
வரை அறைத் தமிழ்!

பண்புக் கொரு தமிழ்—'பெற்
பாண்டி' காலத் தமிழ்!
பெண் போன்ற தமிழ்—குலப்
பண் அந்தத் தமிழ்!

# சனத்திரள் மிக்க 2வது வாரம்!

எல்பின்ஸ்டன் றெக்ஸி வேல்ஸ் அசோகா
(மருதானை) (வெள்ளவத்தை) (கண்டி) (புத்தளம்)

கிழமை நாட்களில் மட்டும்
அசோகா (கிராண்பாஸ்) காலை 10 மணிக்கு காட்சி உண்டு

எம். ஜி. ராமச்சந்திரன்—ஜெயலலிதா—நாகேஷ்
நம்பியார்—மனோகர்—விஜயலட்சுமி
மேலும் ஆயிரக்கணக்கானோர் நடித்த

பத்மினி பிக்சர்சாரின்

## ஆயிரத்தில் ஒருவன்
(ஈஸ்ட்மென் கலர்)


பொங்கல் திரை விருந்தாக
நெல்சன் இம்பீரியல் வின்சர்
(திருகோணமலை) (மட்டக்களப்பு) (யாழ்ப்பாணம்)
ஆகிய திரைகளில் திரையிடப்படும்!



இப்பொழுது ஜனத்திரள் நிறைந்த தியேட்டர்களில் வெற்றிகரமாகக் காண்பிக்கப்படுகிறது!

சென்ட்ரல் ஈரோஸ் ராணி ராஜேஸ்வரா
(மருதானை) (பாமன்கடை) (யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)

ஜோதி லிபேர்டி ஓடியன்
(திருகோணமலை) (அட்டன்) (கண்டி)



நடிகர் திலகமும், நடிகையர் திலகமும் இணைந்து அற்புதமாக நடித்துள்ள உணர்ச்சித் திரை ஓவியம்!

- ★ காட்சிக்குக் காட்சி விறு விறுப்பு!
- ★ உருக்கமான கதை!
- ★ உன்னதமான நடிப்பு!
- ★ ஆங்கில நாடகம் 'ஒத்தெல்லோ' உங்களைப் பூரிக்கச் செய்யும்! நடிப்பின் சிகரம் அது!
- ★ 'பசுமை நிறைந்த நினைவுகளே! பறந்து திரியும் பறவைகளே!' ஆகிய பாடல்கள் ஒவ்வொன்றும் உங்கள் உள்ளங்களில் என்றும் பசுமையாக நிலைத்து நிற்கும்!

தாய் நாட்டுப் பற்றுள்ளவர் ஒவ்வொருவரும் பார்க்க வேண்டிய இலட்சியச் சித்திரம்!

சிவாஜி கணேசன் — சாவித்திரி — புஷ்பலதா — நாகேஷ் — மனோரமா நடித்த

நஷனல் மூவீஸ்

## இரத்தத் திலகம்

3வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!
யாழ்ப்பாணம் வெலிங்டன் திரையில்!

- கற்புக்கரசி கண்ணகியின் வீரமிக்க வரலாறு!
- கலைஞர் கருணாநிதியின் மற்றுமொரு கைவண்ணம்

இலட்சிய நடிகர்
எஸ். எஸ். ராஜேந்திரன்,
ஆர். விஜயகுமாரி,
கே. பி. சுந்தராம்பாள்,
டி. வி. நாராயணசாமி, ராஜஸ்ரீ
மற்றும் பலர் தோன்றும்



மேகலா பிக்சர்சாரின்

## 'பூம்புகார்'

இசையமைப்பு : ஆர். சுதர்சனம் வசனம் : மு. கருணாநிதி
டைரக்ஷன் : ப. நீலகண்டன்
ஏனைய திரைகளில் விரைவில் திரையிடப்படும்

12 வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு)
மற்றும் சினிமாஸ் திரைகளில்!

எம். ஜி. ஆர்., சரோஜாதேவி,
நம்பியார், ரங்கராவ், நாகேஷ்
பண்டரிபாய், ரத்னா
முதலியோர் தோன்றும்

விஜயா கம்பைன்ஸ் அளிக்கும்

## எங்க வீட்டுப் பிள்ளை
(ஈஸ்ட்மென் கலர்)



இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1966-ம் வருடம் சனவரி மாதம் 6-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.